Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර් | பக்கம் 24 ரூபா 30.00
டிசம்பர் 25 – 31, 2014

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1098

ஜனாதிபதித் தேர்தலில்

## யார் வெல்வார்கள்?



## வெற்றிக்குப் பின்

## என்ன செய்வார்கள்?



## ஒழிக்கப்படுமா ஜனாதிபதி ஆட்சிமுறை?

## சித்திரவதைகளும் மனித உரிமைகளும்

சர்வதேச விவகாரம்

## மார்கழியில் மங்கல நிகழ்ச்சிகள் ஏன் நடத்தப்படுவதில்லை

மார்கழி மாதத்தை பீடை மாதம் என்றுசொல்வது மூடநம்பிக்கை. மார்கழி மாதம் முழுவதுமே கடவுளை வழிபடும் மாதமாக நமது மரபில் அனுசரிக்கப்படுகிறது. தெய்வ வழிபாட்டுக்கு இடையூறு வந்துவிடக் கூடாது என்பதாலேயே மார்கழி மாதத்தில் மற்ற நிகழ்ச்சிகள் எதுவும் வைத்துக் கொள்வதில்லை. திறக்காத திருக்கோயில்களும் திறந்திருக்கும் ஒரே மாதம் மார்கழி மாதம்.

வருடம் முழுக்க உணவுக்கு தேவைப்படும் உளுந்தையும், நெல்லையும் உழவர்கள் சேகரித்து வைக்கும் மாதம் இது. கரும்பு, நெல், உளுந்து, வாழை, மஞ்சள் ஆகிய வற்றை சேமிக்கவே மாதம் முழுக்க செலவாகிறது என்ப தால்தான் இம்மாதத்தில் மங்கல நிகழ்வுகள் எதையும் வைத்துக் கொள்வதில்லை என்றும் சொல்கிறார்கள். அந்த சேகரிப்புப் பணி முடிந்ததுமேதான் தைத்திருநாளை விமரிசையாக கொண்டாடுகிறார்கள்.

அனந்த நாராயணன், கைவேலி

## ஆன்மீகம் — கிறிஸ்மஸ்

* கதவைத் திறந்து கிறிஸ்துமஸ் வாழ்த்து: பெர்லின் நாடு இரண்டாகப் பிரிந்திருந்த காலத்தில் இரண்டு நாடுகளுக்கும் நடுவே ஒரு சுவர் அமைக்கப்பட்டிருந்தது. சுவரின் நடுவே ஒரு கதவு அமைக்கப்பட்டது.

*மலர் அலங்காரம்: இங்கிலாந்தில் கிறிஸ்துமஸ் மரம் அறிமுகப் படுத்துவதற்கு முன்னதாகவே ஜெர்மனி, ஆஸ்திரியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் 'பிர்' என்ற மரத்தை அலங்கரிக்கும் வழக்கம் இருந்தது. இருப்பினும், மரங்களில் இலைகள் மற்றும் மலர்களைக் கட்டி அலங்கரிக்கும் வழக்கம் இங்கிலாந்தில்தான் 1841ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. அல்பெர்டினால் என்ற அரசன் முதன்முதலாக கிறிஸ்துமஸ் மரத்தை நட்டார்.

* 20நாள் கொண்டாட்டம்: ஸ்கொட்லாந்து நாட்டில் 20 நாட்கள் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்படும். 'யூல்' எனப்படும் டிசம்பர் 18ஆம் தேதியே கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் துவங்கி ஜனவரி 6ஆம் திகதிவரை நடக்கும். கடைசிநாள் விழாவை 'எபிபனி' என்கிறார்கள்.

* கிறிஸ்துமஸ் குடில்: இயேசுநாதர் பிறந்ததைப் போல சித்தரிக்கும் கிறிஸ்துமஸ் குடில்கள் விதவிதமான அலங்காரங்களுடன் உலகெங்கும் அமைக்கப்படுகின்றன. இதை முதன்முதலாக புனித பிரான்சிஸ் என்பவர் 1722ம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார்.

## அல்லாஹ்வின் அமானிதம்

வாழ்வுத் துயரை மறப்பதற்கு அல்லாஹ் எமக் களித்த செல்வமே குழந்தைகள். இந்த குழந்தை செல்வங்களை பெற்றோர்கள் பேணி வழங்கவேண்டும்.


அச்சில் வார்க்கப்படாத மெழுகைப் போன்றது குழந்தைகளின் உள்ளம். இந்த பிஞ்சு நெஞ்சங்களை நன்னெறிப்படுத்தி நாட்டுக்குத் தேவையான நல்லவர் களாக ஆக்கவேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல கல்வியைக் கற்பிப்பதைவிட வேறொரு மேலான வெகுமதி இல்லை என்பது நபிமொழி.

குழந்தையின் மன வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி ஆகியவற்றுக்குத் தேவையான பயிற்சி-களை பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். குழந்தை என்பது அல்லாஹ்வின் அமானிதம்.

எம்.சி.கலீல், கல்முனை -05

## கவிதைப்போட்டி 1095



### ● பாராட்டுக்குரியது ●

### என் மொழி

வாய்பேசா ஜீவன் நமக்கு
வதை கொடுப்பது மனிதன் எதற்கு
அதிக சுமையோ வண்டிக்கு – அதை
இழுக்கப் பலமில்லை எனக்கு
சோர்ந்து விழுந்த என் உடம்புக்கு
இனியும் முடியாது எழும்புவதற்கு
இதை நானும் இங்கே சொல்வதற்கு
என் மொழிதான் புரியுமா இவர்களுக்கு.

இளம்பிறை யோகன், புத்தளம்

### மூ தி ய ம்

இரு மாடிழுக்கும் வண்டியில்
ஒரு மாடு இடறிவிழ
சற்றென குடைசாயும் வண்டி
சதிபதி இருவரில்
ஒருவர் முரண்பட்டால் கூட
முற்றாய் முறிந்துவிடலாம்
குடும்பமெனும் வண்டி.

அ.சந்தியாகோ, கண்டி.

## கவிதைப் போட்டி இல 1098



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 05.01.2015

கவிதைப் போட்டி இல. 1098 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### சொல்லத்தான் முடியுமா?

இயந்திர வண்டிக்குப் போய்
இந்த வண்டிக்கும் சுமைகள்
இழுக்க முடியாத வலியால்
சோர்ந்து வீழ்ந்த என்னை
சேர்ந்து தூக்கும் இவர்களுக்கு
இனியும் முடியாது
என்னால் - என்பது
சொல்லத்தான் முடியுமா
வாய்திறந்து...

இ.யோகன், புத்தளம்

### பரிதாபம்

காளை வண்டி கால் தடுக்கி
சாலை நடுவே தலைசாய
ஓடி வந்த காளையர்கள்
சாலையைச் சீர்செய்ய படும்பாடு
அந்தோ பரிதாபமோ பரிதாபம்.

பி.எஸ்.ஏ.தாஹிர்,
காத்தான்குடி – 03

### அறிவற்ற செயல்

உழைப்புக்கு உதாரணம் கூறும்
மாடுபோல் உழைக்கும்
மனிதன் இங்கே
வாய்பேச ஜீவன்களை வண்டியில் பூட்டி
பகுத்தறிவு இல்லாமல் பாரம்
அதிகமேற்றியதால்
இருமாட்டில் ஒன்றிங்கே இறந்து
கிடக்கிறது ஆறறிவு மனிதனின்
அறிவற்ற செயலிது.

எம்.சி.கலீல், கல்முனை -05

### விதிதானோ!

வாழ்க்கைச் சுமை சிறக்க வண்டியில்
ஏற்றினான் சுமை
பூட்டிய மாடுகளுக்கும் அது சுமை
போராடிய வாழ்வான வண்டிலானும்
வாய்பேசா ஜீவன்களும்
வந்த வழிபாதியில்
பட்ட காலிலே படும் போல்
பாடான வாழ்வுக்கு பாரம் இழுத்த
ஜீவனும் விதியானதோ.

கே.எஸ்.செல்வராசர், மட்டுநகர்.

## உங்கள் பக்கம்

### கொடிகாமத்தில் தன்னியக்க சேவையின் அவசியம்

கொடிகாமம் பிரதேசத்தில் இயங்கும் இலங்கை வங்கியில், வங்கிக் கணக்கை வைத்திருக்கும் வாடிக்கை யாளர்களுக்கு பணத்தை பெற்றுக் கொள்வதற்கான (ATM இயந்திரம்) இல்லாமல் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

அதாவது (ATM) இயந்திரம் இல்லாத காரணத்தினால் இப்பிரதேச வாடிக்கையாளர்கள் வங்கி நடவடிக்கை இல்லாத காலம் மற்றும் விடுமுறை தினங்களில், வைப்புச் செய்த பணத்தை அவசர தேவை நிமித்தம் பெற்றுக்கொள்வதற்கு சாவகச்சேரி இலங்கை வங்கி ATM இயந்திரத்திலே பணத்தை எடுத்துக்கொள்ள வேண்டியநிலை காணப்படுகின்றது. கொடிகாமப் பிரதேச வாடிக்கையாளர்கள் தூரப் பயணத்தை மேற்கொண்டே சாவகச்சேரிக்கு அல்லது வேறு இடங்களிலோ பணத்தை எடுக்க வேண்டியநிலை ஏற்படுகின்றது.

எனவே, இலங்கை வங்கி வாடிக்கை யாளர்களின் நலனை கருத்திற் கொண்டு கொடிகாமத்தில் ATM இயந்திர சேவையை ஏற்படுத்துவது அவசியமாகும். இவ்வங்கியின் வாடிக்கையாளர் என்றவகையில், இதை நாம் கொடிகாமம் இலங்கை வங்கி முகாமையாளருக்கு இதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆகவே விரைவில் ATM இயந்திரத்தை கொடிகாமத்திலும் விரைவில் நிறுவவேண்டுமென மீண்டும் தினமுரசு உங்கள் பக்கமூடாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

வாடிக்கையாளர்கள்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

### அமைதியின் சொற்கள்

உங்கள் உள்ளே
ஓடிக்கொண்டிருக்கும் அந்த
அழகான நதியால் தாகத்தை
தணித்துக்கொள்ள நீங்கள்
செய்யவேண்டியதெல்லாம்,
உள்நோக்கித்
திரும்புவதுதான்.

இணையத்தளம்: www.wopg.org
- பிரேம் ராவத்




## வாசகர்சாலை

### கவனம் தேவை

முரசின் தீவிர வாசகன் நான். உன்னுடைய எல்லா அம்சங்களும் என்னைக் கவர்ந்துள்ளது. சுவாரசிய மான தகவல்கள், பொழுதுபோக்கு அம்சங்கள் என்பவை குறைவாகவே காணப்படுகின்றது.

கட்டுரைகளைத்தான் முரசு அள்ளி வழங்குகிறதே ஒழிய பல்சுவையான அம்சங்கள் குறைவாகவே காணப்படு கின்றது. முரசு இவ்வாறான விடயங்களில் கூடுதலான கவனம் செலுத்தவேண்டும்.

அ.யானு, யாழ்ப்பாணம்.

### தெளிவு

அரசியல் தொடங்கி அறிவியல்வரை அசத்துகிறாய். முரசின் பக்கங்கள் எல்லாம் என்னைக் கவர்ந்துள்ளது. உதயகுமார், வேணு கிருஷ்ணா போன்ற கட்டுரையாளர்களின் கட்டுரைகள் சிறப்பாக உள்ளது. அண்மைக் காலங்களாக உதயகுமார் எழுதும் கட்டுரைகள் பிரச்சினைகளை அப்பட்டமாக வெளியில் கொண்டுவரும் கட்டுரைகளாக இருந்து வருகின்றது. சென்ற வாரம் வெளியான ஆபத்தைநோக்கிய எதிர்காலம் என்ற கட்டுரை பிரமாதமாக இருந்தது. நாகரிகத்தின் வளர்ச்சியால் பழைமை அழிந்துபோவதை தெளிவாகச் சுட்டிக் காட்டியிருந்தார்.

எவ்.செந்தூரன், மட்டுநகர்.

### நம்பிக்கை

தினமுரசுக்கு இருக்கும் வாசகர் வட்டம் எங்கள் ஊரில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. அதனால் முரசின் தரமும், வாசகர்கள் மத்தியில் அதன் மதிப்பும் உயரவேண்டும். அதற்கு கடின உழைப்பு தேவை யெனவே நான் கருதுகின்றேன். ஏனெனில் முரசின் நீண்டநாள் வாசகியாக இருப்பதால் இதை முரசுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

முரசின்மேல் நான் கொண்ட அறிவுத் தேடல் என்றுமே குறையானது. பாப்பா முரசு பக்கம் தகவல்கள் உள்ள பக்கம். அது சிறப்பாகவே இருக்கின்றது. இன்னும் இன்னும் பிரமாதமாக அப்பக்கத்தை முரசு மேம்படுத்த வேண்டும். எனது கருத்துக் களுக்கும் முரசு செவிசாய்க்கும் என நம்புகிறேன்.

என்.கவி, பதுளை.

# சிறுபான்மை சமூகத்திற்கு நம்பிக்கையூட்டும் விஞ்ஞாபனம்



**தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் சொல்லப்பட்ட பல்வேறு வாக்குறுதிகள் சிறுபான்மை சமூகத்திற்கு நம்பிக்கையளிக்கும் வகையில் உள்தாகவும், மேலும் சிறுபான்மை சமூகம் தொடர்பில் எதிர்கட்சிகளின வேட்பாளருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான வேறுபாடுகளும் அப்பட்டமாக தெரிவதாகவும் பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆய்வு செய்துவரும் புத்திஜீவிகள் தெரிவித்துள்ளனர்.**

சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்படட. இதுவரையில் வழக்குத் தாக்கல் செய்யப்படாத வடக்கின் அனைத்து இளைஞர்கள், யுவதிகள் தொடர்பில் ஆராய்ந்து தாமதமின்றி நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் முழுமையான அதிகாரங்களுடன் கூடிய குழு ஒன்றை நியமிக்கப்படுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், உலகில் எந்தவொரு நாட்டிலும் நடைபெறாத வகையில் வரலாற்றில் முதன் முறையாக மனிதாபிமான நடவடிக்கைகளின் போது மக்கள் கைவிட்டுச் சென்ற வாகனங்களையும், மறைத்து வைக்கப்பட்ட தங்க நகைகளையும் இராணுவத்தினரிடம் உறுதிப்படுத்திய பின்னர் மீள மக்களுக்கு ஒப்படைக்கும் நடவடிக்கைகளை இவ்வருடம் செய்து முடிக்கபடும்

பயங்கரவாத அச்சுறுத்தல்கள் நிலவிய காலகட்டத்தில் இராணுவத்தினரால் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இராணுவத்தினருக்கு சொந்தமில்லாத காணிகள் மற்றும் கட்டிடங்களை தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் அல்லாத வகையில் குறிப்பிட்ட காலவரையறைக்குள் உரிமையாளர்களிடம் வழங்கப்படும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இளைஞர், யுவதிகளை தேசிய அபிவிருத்தி செயற்பாடுகளில் சமாந்தரமான பங்காளிகளாக பங்கு பற்ற செய்வதற்காக சமூக உள்ளாக்கல் மற்றும் நல்லிணக்க செயற்பாட்டினை துரிதப்படுத்தும் முகமாக மத்தியகால வரையறைக்குள் உரிய வேலைத்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

நாட்டில் எந்தவொரு பகுதியிலாவது பயங்கரவாதம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள எந்தவொரு மக்கள் சமூகத்தினருக்கும் உரிய நட்டஈடு கிடைக்கப் பெறாதிருக்கும் குடும்பங்களுக்குரிய பரிந்துரைக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

முகாம்களில் இருக்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கையினை துரிதப்படுத்தி இவர்கள் அனைவரும் தங்களுடைய வீடுகளில் குடியேறுகின்ற உரிமையை தாமதிக்காமல் உருவாக்கிக் கொடுக்கப்படும்.

துரதிஸ்டவசமாக குறிப்பிட்ட சில இனவாத அல்லது மதவாத நபர்களினால் உருவாக்கப்பட்டுள்ள சமூக மோதல்களை முற்று முழுதாக தடுக்க எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப் படும், போன்ற பல்வேறு விடயங்களை புத்திஜீவிகள் சிலர் கித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## வெள்ளம் தள்ளிய மக்களோடு களத்தில் சந்திரகுமார் எம்பி!

தொடரும் மழையால் கிளிநொச்சி மாவட்டத்தில் தாழ் நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் முன்பள்ளிகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவுகளை வழங்குவதற்கு ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரினால் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவுக்கு பணியுரைகள் வழக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகளை அவதானித்து அதுதொடர்பில் உடனடி நடவடிக்கை மேற்கொள்வதற்காக சந்திரகுமார் எம்பி குறித்த பிரசேத்தில் முகாம் அமைத்து தங்கியிருப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ்.மக்களின் குடிநீரைத் தடுத்த
## தடுத்த சிறிதரன் எம்.பி
## கிளி.மக்களின் உயிரோடு விளையாடுகிறார்!

எந்தவித அடையாளமும் இன்றித் திரிந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் சேர்ந்து பாராளுமன்ற உறுப்பினராகிய சிவஞானம் சிறிதரன் சின்னப்பிள் ளைத் தனமான முறையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார் என இணைய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் மக்கள் விரோத செயற்பாடுகள் தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ள குறித்த இணையத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்தாவது,

இரணைமடுவில் இருந்து யாழ் மக்களுக்கு குடிதண்ணீர் வருவதைத் தடுத்ததில் பெரும் பங்கு வகித்த சிறிதரன் தற்போது இன்னும் சின்னப்பிள்ளைத் தனமான. காரியங்களில் இறங்கியுள்ளது பெரும் பிரச்சனையாக உள்ளது. பொதுவாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ளவர்கள் வழித் தேங்காயைத் தெருப்பிள்ளையாருக்கு எடுத்து அடித்து அதனை புகைப்படங்களாக எடுத்து ஊடகங்களில் போட்டு விளம்பரம் சேர்ப்பவர்கள்.

இதேபோல் சிறிதரன் கிளிநொச்சி மக்களின் நலனை கருத்தில் எடுக்காது ஒரு நாசகாரமான முறையில் வேலை ஒன்றைச் செய்துள்ளார். அதாவது இரணைமடுக் குளம் தனது கொள்ளளவுக்கு மேலதிகமான நீரைப் பெற்றுவிட்டது. இதனால் அணைக் கட்டுக்களில் -சில பகுதிகளில் கசிவுகள் ஏற்பட்டதாகத் தெரிய



வருகின்றது. இதனால் இரணை மடுக் குளத்தின் வான்கதவுகளை உடனடியாகத் திறப்பதற்காக குளத்தைப் பராமரிக்கும் அதிகாரிகள் முயன்ற போது சிறிதரன் அப்பகுதிக்குச் சென்று அச்செயலைத் தடுத்து நிறுத்தியுள்ளார். நீர்க்கசிவைப் பற்றி அதிகாரிகள் தெரிவித்த போதும் அதனை உடனடியாக ஏற்காத சிறிதரன், மறுதினம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு திறந்து விடுமாறு தெரிவித்துள்ளார். நாடாளமன்ற உறுப்பினர் சிறிதரனின் சிறுபிள்ளைத்னம் பின்னரே வெளிச்சத்திற்கு வந்தது.

முதல்நாள் சிறிதரன் எம்.பி சென்று குளத்தை பார்வையிட்ட புகைப் படத்தையும், மறுநாள் குளத்தை திறப்பதற்காக ஆயத்தப்படுத்திய புகைப் படங்களையும் ஊடகங்களில் வெளியிட்டு ஊடக விளம்பரம் தேடுவதற் காகவே சிறிதரன் எம்பி இவ்வாறு சின்னப்பிள்ளைத் தன மாகச் செயற்பட்டதாக தெரிய வருகின்றது

சுய ஊடக விளம்பரத்திற்காக பல்லாயிரக்கணக்கான தனது சொந்த மக்களின் உயிருடன் விளையாடும் அளவுக்கு சிறிதரனின் ஊடக விளம்பர மனநோய் அதிகரித்துள்ளது மிகவும் வருந்தத்தக்கது.

இரணை மடுக்குளம் வெள்ளைக் காரரால் கட்டப்பட்டது. வடக்கு மக்களுக்கு கொடுக்கப்பட்ட வரப்பிரசாதம். இவற்றைப் பாதுகாத்து இரணைமடுக் குளத்தால் மக்களுக்கு சரியான முறையில் நன்மைகளை வழங்குவதற்காக அரசு பல்லாயிரக்கணக்கான சம்பளம் கொடுத்து அதிகாரிகளை அங்கு வைத்துள்ளது.

இவ்வாறு இருக்க சிறிதரன் எம்.பி. அங்கு சென்று சின்னப்பிள்ளைத் தனமாக நடப்பதை நினைத்து சிறிதரனுக்கு வாக்குப் போட்டவர்கள் வெட்கப்படவேண்டும். விடுதலைப் புலிகள் வன்னிப்பகுதியில் இருந்த காலத்தில் இரணைமடுக் குளம் தொடர்பாக அதிகாரிகளின் கருத்தின்படியே செயற்பட்டார்கள். இறுதிக்கட்ட யுத்ததின்போதுகூட, கல்மடு குளத்தை உடைத்த புலிகள், பாரிய உயிர்சேதம் ஏற்படும் என்ற காரணத்தால் இரணைமடுக் குளத்தை விட்டு வைத்தனர். ஆனால் சிறிதரன்...

சிறிதரனுக்கு அரசியல் செய்வதற்கு இரணைமடுக் குளத்தை விட வேறு ஏதும் இனிமேல் இருக்கப் போவதில்லை. தமிழ்த் தேசியத்தை வைத்து ஒப்பாரி செய்து பிழைத்த சிறிதரன் இனி வரும் காலம் இரணைமடுக் குளத்தை வைத்தே ஒப்பாரி செய்யப்போகின்றார் என தெரிகின்றது. என குறித்த இணையத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உடைந்தது ரிஷாத்தின் கட்சி!

ஏதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் எடுத்த தீர்மானத்தை. நாங்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள ம்ாட்டோம். நாங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷவையே ஆதரிப்போம் என அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தேசிய அமைப்பாளரும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார். இதனால்,அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பிளவுபடும் நிலை ஏற்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# அதிர்ச்சி வைத்தியம் அவசியம்

குறுக்கு வழியில் அரசியல் அதிகாரத்தை பெற்றுக் கொள்ள முற்படும் சிலர், நாளாந்தம் ஒவ்வொரு கோலங்களை அரங்கேற்றி வருகின்றார்கள்.

அண்மைக்காலமாக மைத்திரிபாலவின் ஆதரவாளர்கள் மீதான தாக்குதல்கள் இடம் பெறுவதாக ஒருபக்கம் செய்திகள் உருவாக்கப்படும் அதேவேளை, மறுபக்கத்தில் மைத்திரிபால கலந்து கொள்ளும் கூட்ட மேடைகள் தாக்கப்படுவதாகவும் எரியூட்டப்படுவதாகவும் சில செய்திகள் வெளியிடப்பட்டன.

எரிக்கப்பட்ட மேடையிலேயே மைத்திரி மாற்றத்துக்கான தனது குரலை ஒலிக்கச் செய்தார் என்று வீரமிக்க செய்திகளும் வருகின்றன.

அமெரிக்காவில் முதல் முறையாக ஜனாதிபதி வேட்பாளராக களம் இறங்கிய ஒபாமா, "நம்மால் முடியும்" என்ற வாசகத்தை கோசமாக முன்வைத்ததுபோல், தனது போட்டியானது "மாற்றமொன்றுக்கான போட்டி" என்று மைத்திரிபால கூறுகிறார்.

மைத்திரியின் உடையிலும் சிறிய மாற்றமொன்று வெளிப்படுத்தப்படுகின்றது.

அவர் இந்திய பிரதமர் மோடியைப்போல் உடை அணிய வற்புறுத்தப்பட்டு புதிய தோற்றம் கொடுக்க கட்டாயப்படுத்தப்பட்டுள்ளமை, அப்பட்டமாகவே தெரிகின்றது.

வெள்ளை உடை அணிந்து சாதாரண சிங்கள குடிமகன்போல் தோற்றமளித்த மைத்திரி இப்போது தன்னைச் சுற்றியுள்ள சூழ்ச்சிக்காரர்களின் தாளத்துக்கு ஏற்ப ஆட வெளிக்கிட்டதால் தனது சுயத்தை இழந்து சிங்கள மக்களுடன் இருந்த நெருக்கத்திலிருந்து தூரப்படுகின்றவராக மாறிவருகின்றார்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, வாக்குகளை அபகரிப்பதற்காகவும், அரசியல் துரோகத்தனங்களுக்கு சாம ரம் வீசுவதற்காகவும் எந்த வேடத்தை போடவும், எந்தக் கருத்தை பேசவும் ஒருவர் இன்று இருக்கின்றார் என்றால் அவர் எதிரணிகளின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனதான் என்று கூறப்படுவதையும் நிராகரிக்க முடியாது.

இந்த நிலையில் ஒருவேளை அவரே ஜனாதிபதியானால் தன்னோடு தற்பொது ஒட்டிக் கொண்டுள்ளவர்களை திருப்திப்படுத்த நாட்டை சிதைப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்யமுடியாது போகும்.

நேற்று மகிந்தவோடு இருந்தவர்கள் இன்று மைத்திரியோடு இருக்கின்றார்கள். நாளை யாரோடு என்பதை யாரும் உறுதியாக கூறமுடியாது.

நம்பிக்கையற்றும், துரோகிகளுடனும் ஆட்சிப் பொறுப்பில் ஏறுகின்ற வாய்ப்புக் கிடைக்கு ஒருவரால் நாட்டு மக்களுக்கு என்ன நன்மை?

நாட்டு மக்கள் வாக்களிப்போடு விட்டுவிட்டு ஒதுங்கிக் கொள்வதுதான் வழமையாகி விட்டது. மக்களின் அலட்சியமும், மறதியும் அரசியலில் தாவித் திரிந்து பிழைப்பு நடத்தும் அரசியல் குரங்குகளுக்கு வரப்பிரசாதமாகிவிட்டது என்ற அதிர்ப்திகளால் சில கட்சிகளின் தொண்டர்கள் கொதித்துப்போய் இருக்கின்றார்கள்.

தலைவர்களுக்கு பாடம் புகட்டும் கோபங்களும், அரசியலில் நிலையற்ற கொள்கைகளும் வாக்காளர்களை ஏமாற்றமடையச் செய்துள்ளது. வாக்களிப்பதை விடுத்து, வாக்களிக்காமல் இருப்பதை மக்கள் சிந்திக்கும் அளவில் மக்கள் குழப்பப்பட்டுள்ளார்கள்.

ஆனால் வாக்களிக்காமல் விடுவது சரியான முடிவாக இருக்காது. எனவே ஒவ்வொரு வாக்காளனும் வாக்களிக்க வேண்டும். அந்த உரிமையை பிரயோகிக்க வேண்டும். அந்த வாக்களிப்பானது மக்களை மறந்த தலைமைகளுக்கு அதிர்ச்சி வைத்தியமாக அமைய வேண்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

ஜனாதிபதித் தேர்தலில்

# யார் வெல்வார்கள்?
# வெற்றிக்குப் பின் என்ன செய்வார்கள்?





**மைத்திரிபால தமிழ் மக்கள் தொடர்பாக வாய்திறக்கவே பயந்து நடுங்குகின்றார். ஜனாதிபதி யானால் நூறு நாட்களுக்குள் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கி, ரணில் விக்கிரம சிங்கவை பிரதமராக்குவதையும் தவிர அவர் அடுத்து என்ன! என்பது தெரியாமலே தேர்தலில் போட்டியிடுகின்றார்.**

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் பத்து நாட்களே இருக்கின்ற நிலையில் பிரதான போட்டியாளர்கள் இருவரும் கடுமையான போட்டியை எதிர் கொண்டுள்ளார்கள்.

சிறிய விகிதா சாரத்திலேயே இருவரில் ஒருவர் வெற்றிபெறுவார்கள் என்பதை கள நிலைமையை கவனித்து வருகின்றவர்கள் கூறிவிட முடியும்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள் இரண்டாகப் பிரிந்து வாக்களிப்பார்கள். நாட்டில் வாழும் முஸ்லிம் மக்கள் இம்முறை வினோதமாக சிந்திக்கின்றார்கள். அல்லது வினோதமான கருத்து முஸ்லிம் மக்களிடையே உருவாக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களின் ஆட்சியில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகள், பள்ளிவாசல் உடைப்புக்கள், வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல்கள் என்பவற்றை, பொதுபல சேனா மற்றும் ராவய, ராவணா போன்ற இனவாத அமைப்புக்கள் நடத்தியபோது அதைத் தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை.

பேருவளை வன்முறைகளையும், குருநாகல், தம்புள்ள, கொழும்பு போன்ற மாவட்டங்களில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைகளையும் முஸ்லிம்கள் மறப்பதற்கு தயாராக இல்லை.

முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகளை நடத்தியவர்களில் பிரதானமானவர்களான பொது-பல சேனாவினருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்சவுக்கும் தொடர்புகள் உண்டு, அவரே பின்னணியில் இருக்கின்றார் என்று முஸ்லிம்களிடையே சந்தேகங்கள் வளர்ந்துள்ளது.

இந்த கசப்பான அனுபவங்களின் விளைவாக ஒட்டுமொத்த முஸ்லிம்களும் மகிந்த ராஜபக்ச ஆட்சியை வெறுக்கின்றார்கள் என்ற கருத்து உருவாக்கப்பட்ட நிலையிலேயே திடீரென ஜனாதி-பதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

முஸ்லிம்களிடையே வளர்ச்சி பெற்று வந்துள்ள எதிர்ப்புணர்வு ஜனாதிபதித் தேர்தலில் முக்கியமான விளைவை ஏற்படுத்தப் போகின்றது.

மைத்திரிபாலவை இதுவரை காலமும் பொதுமேடைகளில் கூட நெருக்கமாக அறிந்திராத முஸ்லிம் மக்கள் ஆதரித்து வாக்களிக்க வேண்டுமென பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மைத்திரி வெற்றி பெற்றால் முஸ்லிம் மக்களுக்கு எதைச் செய்வார்? ஏற்பட்ட காயங்களுக்கு எவ்வாறான கைமாறு செய்வார்? என்பது தொடர்பாக எந்த முஸ்லிம் தலைமையும் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளவில்லை.

அரசியலை விமர்சிப்போராக தம்மை காட்டிக்கொள்ளும் புத்திஜீவிகள் என்போரும் ஊடகத்தினரும் முஸ்லிம் மக்களிடையே ஆட்சி மாற்றம் ஒன்றுக்கான வற்புறுத்தலை செய்து வருகின்றனர்.

ஆனால் தேர்தலுக்குப் பின்னர் வழங்கப்பட்ட வாக்குகள் வெறுமெனவே ஆட்சி மாற்றம் ஒன்றைத் தவிர வேறு ஒன்றையும் சாதிக்கப்போவதில்லை. ஆகவே உணர்ச்சிக்கு இடம் கொடுக்காமல், அறிவுக்கு வேலை கொடுத்து சிந்தித்தால் முஸ்லிம் மக்களுக்கு எதிர்காலம் எவ்வாறு இருக்கப்போகின்ற என்பதை எவரும் தெளிவு படுத்துவதாகத் தெரியவில்லை.

ஒருவேளை மைத்திரிபால வெற்றி பெற்றால் பின்னர் மைத்திரியை எதிர்த்து இன்னொருவரை ஆட்சிபீடம் ஏற்றுவதற்கு முயற்சிக்க வேண்டிய தேவை ஏற்படுத்தப்படலாம்.

இவ்வாறான பிற்போக்கு அரசியலை இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றார்கள். அந்த அரசியலால் தமிழ் மக்கள் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வந்திருக்கின்றார்களே தவிர வெற்றிகளை அனுபவித்ததில்லை.

துரதிர்ஷ்டவசமாக தற்போதை இரண்டும் கெட்டான் அரசியல் கோமாளிகளின் செயற்பாடுகளால் யுத்தகாலத்திலும் வெற்றிகரமான அரசியலை செய்துவந்த முஸ்லிம் மக்களை தவறாக வழி நடத்தி அரசியல் அநாதைகளாக மாற்றிவிடுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

தமிழ் மக்களின் நிலைமையும் திரிசங்கு நிலைதான். மைத்திரிபால தமிழ் மக்கள் தொடர்பாக வாய் திறக்கவே பயந்து நடுங்குகின்றார். ஜனாதிபதியானால் நூறு நாட்களுக்குள் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கி,ரணில் விக்கிரம சிங்கவை பிரதமராக்குவதையும் தவிர அவர் அடுத்து என்ன என்பது தெரியாமலே தேர்தலில் போட்டியிடுகின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவையும் சிங்கள மக்களுக்குத் தெரியாமல் மறைமுகமாகவே எதிர்பார்க்கின்றார். கடந்த வாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளின் தலைவர்கள் மைத்திரிபாலவை இரகசியமாக சந்தித்து உரையாடியுள்ளனர்.

அந்தச் சந்திப்பிலும் மைத்திரி தமிழ் மக்களின் தீர்வு தொடர்பாக எதையும் பேச விரும்பவில்லை என்பதை தெளிவாகக் கூறியுள்ளார். அந்தச்சந்திப்பு தொடர்பாக கூட்டமைப்பினர் வெளியில் எதையும் கூறமுடியாமல் மௌனமாகி விட்டார்கள்.

கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ்பிரேமச்சந்திரன், மைத்திரிபாலவின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது, மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனம் ஏமாற்றமளிப்பதாக கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைக்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக தீர்வொன்றைக் காண்பது என்பதைத் தவிர்த்து, குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாமல் சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுக்க விசாரணைக்கு அமைப்பது, பாதுகாப்பு வலயங்களாக இருக்கும் தமிழ் மக்களின் நிலங்களை முக்கிய பாதுகாப்புக் காரணங்கள் தவிர்ந்த ஏனைய நிலங்களை உரியவர்களிடமே மீண்டும் கையளிப்பது, நாட்டின் பாரிய அபிவிருத்தித் திட்டமான தேசத்தின் மகுடத்தை எதிர்காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் நடத்துவது, நாட்டில் வாழும் மூவின மக்களினதும் பாதுகாப்பு, மத, வழிபாட்டு சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது, அதற்கு எதிராக செயற்படுவோருக்கு எதிராக கடுமையாக நடவடிக்கை எடுப்பது என இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களின் பிரச்சனைகளுக்கும் தீர்வுகளை முன் மொழிந்து தனது விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளார்.

அதாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுகின்ற ஒருவர் இந்த நாட்டிலுள்ள அனைத்து இன மக்களினதும் ஆதரவைப் பெற்றவராக இருப்பதே நாகரீக உலகின் முன்னால் கௌரவமாக இருக்கும் என்பதை புரிந்து கொண்டுள்ளார். ஆனால் மைத்திரிபாலவோ, தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் ஒதுக்கிவிட்டு சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று தன்னை கடும்போக்கு சிங்களத் தலைமையாகவே காட்டிக் கொள்ள விரும்புகின்றார்.

ஜனாதிபதியாக தெரிவானால் 19ஆவது திருத்தச் சட்டத்தை முதலில் அமுல்படுத்துவதாக கூறியிருப்பதை தமிழ், முஸ்லிம் மக்கள் சிந்திக்க வேண்டும்.

அந்தச் சட்டம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாது செய்யும், கூடவே மாகாண சபைகள் சட்டம் மேலும் வலுவிழக்க செய்யப்பட்டு நாளடைவில் இல்லாமலே போகலாம். ஆகவே மாகாண சபைகள் இல்லாமல் போகும். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் மாகாண சபையை ஒழித்துக் கட்டுவதற்காக ஒருவேளை மைத்திரிபாலவுக்கு வலிந்து ஆதரவை வழங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இதில் ஆபத்து என்னவென்றால் தமிழ் மக்கள் தீர்வுகளுக்கான எல்லா வாய்ப்புக்களையும் இழந்து வெறுங்கையோடு இருக்கின்ற நிலையில் மாகாண சபையும் இல்லாதுபோனால் மீண்டும் மத்திய அரசின் காலடியில் போய் விழச்செய்யும்.

மாகாண சபையை முன்னோக்கி வெற்றிகரமாக நடத்தாமல் அதையும் இழந்துவிட்டால், அடுத்து என்ன வாய்ப்பு தமிழ் மக்களுக்கு உள்ளது என்பதை கூட்டமைப்பினரால் கூற முடியுமா?

மாகாண சபை அதிகாரத்தையும் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கும் 19ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாது செய்து, பெரும்பான்மை மக்கள் பேசும் சிங்களத்தை மட்டும் அரச கரும மொழியாக பிரகடனம் செய்து இந்த நாட்டை தனிச் சிங்கள பௌத்த நாடாக மாற்ற வேண்டும் என்று ஹெல உறுமய கேட்ட மாற்றங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஏற்றுக்கொள்ளாத காரணத்தினாலேயே அவர்கள் ஜனாதிபதியோடு கோபித்துக் கொண்டு மைத்திரியோடு ஒரு இணக்கப்பாட்டைக் கண்டு ஆதரவு தெரிவிக்கின்றார்கள். அந்த இணக்கப்பாடு எதுவாக இருக்க முடியும்? என்பதை புரிந்து கொள்வது எவருக்கும் கடினமாக இருக்காது.

இதுவரை சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளோடு அறியப்படாத மைத்திரிபாலவை விடவும் சில ஏமாற்றங்களை தந்திருந்தாலும் பிரச்சனைகளைத் தெரிந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே மேல் என்று கூறப்படுவதையும் நிராகரிப்பதற்கில்லை.

மைத்திரிபால ஜனாதிபதியா-னால் சர்வதேச போர்க்குற்ற விசாரனை எனும் விவகாரம் நீர்த்துப்போய்விடும் என்றும், தமிழ் மக்களின் உரிமைக் குரலுக்கான வலிமை குறைந்துபோய் விடும் என்றும் கூறப்படுகின்ற அதேவேளை, மீண்டும் மகிந்த ராஜபக்சவே ஜனாதிபதியானால்தான் போர்க்குற்ற விவ-காரம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். எதிர்ப்பு அரசியலின் ஆயுள் நீண்டதாக இருக்கும் என்றவிதமான கருத்துக்களும் தற்போது பேசுபொருளாக உள்ளது.





# புலிகளின் வதை முகாமில்

மணியம்

வதை 145

அதாவது அந்தக் கிராமத்தின் வடக்குப் புறமாக வயல்களும் காடும் இருக்கிறது. அதற்குள்ளால் சில மைல்கள் கால்நடையாகப் பயணம்செய்தால், யக்காவ முகாமுக்குப் போகாமல் வவுனியாவின் சில கிராமங்களுக்கோ, மன்னார் வீதியில் இருந்த சில கிராமங்களுக்கோ போகலாம் என்பதுதான் அவர் சொன்ன யோசனை.

அவ்வாறு எம்மைப் பாதுகாப்பாகக் கூட்டிச்செல்வதற்குதான் சிலரை ஏற்பாடு செய்வதாகவும், அவர்களுக்கு சிறிது பண உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

முன்னர் பலரை இராணுவத்துக்குத் தெரியாமல் அவ்வாறு அழைத்துச் சென்றுவிட்டதாகவும் கூறினார். எமக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காக இராணுவத்தினர் சிலருக்கும் இந்த விடயம் தெரியுமென்றும், அவர்கள் கண்டும் காணாமல் விடுவதற்காக அவர்களுக்கு சம்திங் கொடுப்பதாகவும் சொன்னார்.

அவரது யோசனை எமது மனதில் ஒரு நப்பாசையையும் சலனத்தையும் ஏற்படுத்தியது. அதேவேளை பயத்தையும் உருவாக்கியது. தற்செயலாக அவ்வாறு செல்கையில் இராணுவத்திடம் அகப்பட்டால், எம்மீது புலி முத்திரை குத்தப்பட்டு சுடுகாட்டுக்கு அனுப்பப்படுவோம் என்பது நிச்சயம். அத்துடன் எம்மைக் கூட்டிச் செல்பவர்கள்கூட அந்தக் காட்டுப்பாதையில் வைத்து எமக்கு ஏதாவது செய்துவிட்டு, எம்மிடம் உள்ள பணத்தையும் பொருட்களையும் கொள்ளை அடித்துச் செல்லலாம் என்ற அச்சமும் இருந்தது. எனவே அந்த யோசனையை முற்றிலுமாக நிராகரித்துவிட்டோம்.

எமது பயண முயற்சி யக்காவ இராணுவ முகாமுக்கு அப்பால் நகர்வதற்கு வாய்ப்பில்லாத சூழ்நிலையில் எமது வாகனங்கள் மீண்டும் கொழும்புக்குத் திரும்பத் தீர்மானித்தன. பிற்பகலில் நாம் புறப்பட்டோம்.

இந்தப் பயணங்களின்போது புதிதுபுதிதாக பலரின் அறிமுகம் கிடைத்தமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது. இந்த இரண்டாவது பயணத்தின் போது சிதம்பரநாதன் என்ற ஒருவரின் அறிமுகமும் நட்பும் கிடைத்தது. நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர், பூநகரியில் திருமணம்செய்து அங்கு வாழ்ந்துவந்தார். அதே நேரத்தில் ஒட்டிசுட்டான் - முத்தையன்கட்டு படித்த வாலிபர் குடியேற்றத்திட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீரிறைக்கும் இயந்திர இயக்குநராகப் பணி புரிந்துவந்தார். எனக்கு ஏற்கெனவே நெடுந்தீவிலும் பல் குடியேற்றக் கிராமங்களில் வாழ்ந்த அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் மத்தியிலும் பல தோழர்களும் நண்பர்களும் இருந்ததால், அவருடன் வெகு விரைவிலேயே நட்பு ஏற்பட்டு விட்டது.

எமது வாகனங்கள் முன்னிரவு நேரத்தில் புத்தளம் நகரை அடைந்தன. அன்றிரவு அங்கு தங்கிவிட்டு காலையில் பயணத்தைத் தொடரலாம் என எண்ணினோம். ஆனால் எங்கு தங்குவது என்ற பிரச்சினை மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. அங்குள்ள கடைகளில் இரவு உணவு அருந்தியபின் ஒரு கடைக்காரரிடம் ஆலோசனை கேட்டோம். முதல் நாள் இரவும் சில தமிழர்கள் காடையர் கூட்டத்தால் தாக்கப்பட்டதாக அவர் சொன்னார். சற்றுத் தள்ளி ஒரு பிள்ளையார் கோவில் இருப்பதாகவும், அங்கு சென்றுதங்குவது சற்றுப் பாதுகாப்பாக இருக்கும் என்று அவர் ஆலோசனை கூறினார். அவரிடம் வழியைக் கேட்டுத் தெரிந்துகொண்டு அங்கு பயணமானோம்.

அந்தக் கோவில் அவ்வளவு பெரிய கோவில் அல்ல. ஆனால் நல்ல முறையில் பராமரிக்கப்படுவது தெரிந்தது. தண்ணீர் பெறுவதற்கு வசதியாக கிணறு ஒன்றும் இருந்தது. கோவிலுக்கு அருகே ஓடை ஒன்றும் இருந்ததாக ஞாபகம். நாம் அங்கு சென்று தங்கினாலும் இரவில் ஏதாவது அசம்பாவிதங்கள் நிகழலாம் என்ற அச்சத்துடனேயே அன்றிரவைக் கழித்தோம். அதனால் அன்றிரவு எம்மில் பலர் தூங்காமலேயே இருந்தோம்.

அதிகாலையிலேயே முகம் கழுவிக்கொண்டு கொழும்பு நோக்கிப் புறப்பட்டோம். அங்கு சென்றதும் நானும் நண்பர் சிதம்பரநாதனும், அவரது ஆலோசனைக்கிணங்க மருதானைக்குச் சென்று முஸ்லீம் ஒருவருக்குச் சொந்தமான சற்று மலிவு வாடகையிலான விடுதி ஒன்றில் தங்கினோம்.

அடுத்த நாள் காலை வழமையாக நாம் கூடும் பம்பலப்பிட்டி பிள்ளையார் கோவிலுக்குச் சென்று மீண்டும் யாராவது பயண முயற்சிகளைச் செய்கிறார்களா என ஆராயத் தொடங்கினோம்.

**நீண்ட பயணத்தின் மூன்றாவது அத்தியாயம்!**

சில நாட்கள் ஓடிக்கழிந்தன. என்றாலும் நானும் நண்பர் சிதம்பரநாதனும் தினசரி பம்பலப்பிட்டி சென்று யாராவது புதிதாகப் பயண ஏற்பாடுகள் ஏதாவது செய்கிறார்களா என ஆராய்ந்துவந்தோம். எப்படியும் யாழ்ப்பாணம் திரும்பிவிட வேண்டும் என்பதில் எம்மைப் போன்ற பலர் தீராத ஆவல் கொண்டிருந்தனர். குடும்பங்களைப் பிரிந்து இருந்ததில், அவர்கள் கவலையும் மன உளைச்சலும் கொண்டிருந்தனர். மறுபக்கத்தில் பணம்கொடுத்து விடுதிகளில் தங்கியிருந்ததால், பணம் வேறு செலவாகிக் கொண்டு இருந்தது. எனவே பலரும் பம்பலப்பிட்டி பிள்ளையார் கோவிலில் கூடுவது நாளாந்த நிகழ்ச்சியாக இருந்தது.

அதேநேரத்தில் யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் அரச படைகளுக்கும் புலிகளுக்கும் நடைபெற்றுவந்த யுத்தம் சம்பந்தமாக வந்த அரசல்புரசலான செய்திகளும் எழக்குக் வலை அளிப்பதாகவே இருந்தது. இதற்கிடையே எம்மைப் போன்றவர்களில் ஒருசிலர் தமிழ்நாட்டிலிருந்து படகுகள் மூலம் யாழ்ப்பாணம் செல்வதற்காக விமானம்மூலம் இந்தியா சென்றதாகவும் செய்திகள் அடிபட்டன. தரைமார்க்கமாகவோ, கடல்மார்க்கமாகவோ அல்லது ஆகாயமார்க்கமாகவோ எமக்கு ஒரு ஒழுங்கான பயண ஒழுங்கு அமையாவிடின், நாமும் இந்தியா சென்று யாழ்ப்பாணம் செல்லும் வழியைத்தான் நாடவேண்டிவரும் என எண்ணினோம்.

நிலைமை இவ்வாறு போய்க்கொண்டிருக்கையில், இருளில் தோன்றிய ஓர் ஒளிக்கீற்றாக அரசாங்கமே எம்மை யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளதாக ஒரு செய்திவந்தது. அது எமக்கு சற்று ஆறுதலைத் தந்தது.

இதில் குறிப்பிடவேண்டிய இன்னொரு விடயம், எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பற்ற நடத்தை. அப்போது ஐக்கிய தேசியக் கட்சி ஆர்.பிரேமதாச தலைமையில் ஆட்சியில் இருந்தது. அந்த அரசாங்கத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கே.டபிள்யூ.தேவநாயகம், செல்லையா இராசதுரை ஆகியோரும், வவுனியா பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவான திருமதி இராஜமனோகரி புலேந்திரன் அவர்களும் அமைச்சர்களாக இருந்தனர்.

அதேபோல தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பலர் பாராளுமன்ற புருசலட்சணத்துடன் பவனி வந்து கொண்டிருந்தனர்.

ஆனால் இந்த ஐ.தே.க தமிழ் அமைச்சர்களோ அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களோ யுத்தம் நடைபெற்று வந்த பகுதி மக்களை ஏறெடுத்தும் பார்க்காதது மட்டுமின்றி, எம்மைப் போல கொழும்புக்கோ, தென்னிலங்கைக்கோ வந்து ஊர் திரும்ப முடியாமல் சிக்கிக் கொண்டிருந்தவர்கள் பற்றியும்கூட எவ்வித கரிசனையும் காட்டவில்லை. குறைந்தபட்சம் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து ஓர் அனுதாப வார்த்தையாவது சொல்லவில்லை.

(வதை தொடரும்...)



# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை

"இன்றைக்கு இரும்புப் பெட்டகங்களுக்குள் தங்கம் இல்லை"

"தெரியும்"

"பின்னர் எதற்காக தேவையில்லாமல் இந்த வேலை"

"நாங்கள் தேவையில்லாமல் எதுவும் செய்வதில்லை"

ரெயில்வே கார்ட்டுக்குப் பதில் கூறியபடியே றொபேர்ட் தனது காரியத்தில் கவனமாக இருந்தார். முதலாவது சாவியைத் திருப்பியபோது துல்லியமாக வேலை செய்தது. இரண்டாவது சாவியும் சரி.

மூன்றாவது சாவி ஒழுங்காகத் திறக்கவில்லை.

சாவியை வெளியே எடுத்தார். "சிறிய பிழைதான். சரி செய்துவிடலாம்"

மீண்டும் தான் கொண்டுவந்திருந்த தோல் பையைத் திறந்து அதிலிருந்து இரும்புத்துண்டு ஒன்றை எடுத்தார். சாவியின் முனைப்பகுதியில் லேசாக உராய்ந்தார். மீண்டும் ஒருமுறை திறக்க முயற்சித்துப் பார்த்தார்.

இம்முறையும் திறக்கவில்லை.

சாவி வெளியே எடுக்கப்பட்டு அரத்தால் உராயப்பட்டது. இப்படி நான்கைந்து தடவைகள் சாவியின் முனை தேய்க்கப்பட்ட பின்னர், மறுபடியும் முயற்சிசெய்து பார்க்க பூட்டுத் திறந்தது.

நான்காவது சாவி துல்லியமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் பிரச்சினை இருக்கவில்லை.

நான்கு சாவிகளாலும் திறந்தபின்னர் இரும்புப் பெட்டகத்தின் கதவைத் திறக்க முடிந்தது. எல்லாம் சரியாக வேலை செய்கிறது.

"சாவிகள் சரியாக வேலை செய்கின்றனவா என்று பார்ப்பதுதான் இன்றைய வேலையா"

"இருக்கலாம்"

"அப்போ இன்னொருநாள் ட்ரெயினில் தங்கம் கொண்டு செல்லப்படும்போது மறுபடியும் வரவேண்டும் இல்லையா"

"இருக்கலாம்"

மறுபடியும் இரும்புப் பெட்டகத்தின் கதவைச் சாத்தி. நான்கு சாவிகளாலும் பூட்டினார் றொபேர்ட். சாவிகளை துவாரங்களில் இருந்து வெளியே எடுத்த பின்னர் சாவித்துவாரங்களில் பூசப்பட்டிருந்த கிரீஸை தான் கொண்டு வந்திருந்த துணி ஒன்றினால் துடைத்து எடுத்தார். தோல் பையில் இருந்த இரண்டாவது ஜாடிக்குள் அற்கஹோல் இருந்தது. மற்றொரு துணியால் அற்கஹோலை எடுத்து சாவித் துவாரங்களை நன்றாகத் துடைத்துக் காயவிட்டார்.

"ஏற்பாடுகள் பலமாகத்தான் இருக்கின்றன"

"அப்படியா"

"இரும்புப் பெட்டகத்தைத் திறக்கலாம். அட. தங்கப் பாளங்களையும் எடுத்துவிடலாம். எடுப்பதை எப்படி வெளியே கொண்டுபோகப் போகிறீர்கள்"

"அதை நாங்கள் செய்யும்போது நேரில் பார்த்துக் கொள்ளலாம் நீங்கள்"

இதற்குப் பிறகு றொபேர்ட்டிடம் பேச்சுக் கொடுக்கவில்லை ரயில்வே கார்ட். அடுத்த ஒரு மணிநேரம் ட்ரெயின் ஓடும் டக் டக் என்ற சப்தம்தான் கேட்டுக் கொண்டிருந்தது.

ட்ரெயின் போக்ஸ்டோன் ஸ்டேஷனில் நின்றது. அங்கே புலிக்கூண்டை இறக்குவதற்கு ஒருவர் காத்திருந்தார்" எட்வேர்ட்!

ரெயில்வே கார்ட் பெட்டிக்குள் இருந்து தள்ள, றொபேர்ட்டும் எட்வேர்ட்டும் பிளாட்போர்மில் இருந்து இழுக்க, புலிக் கூண்டு இறக்கப்படுவதை பிளாட் போர்மில் இருந்த மற்ற பயணிகள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"எப்படி. எல்லாம் சரியாக வேலை செய்கிறதா"

"மூன்றாவது வேலைசெய்யாமல் முரண்டுபிடித்தது. இப்போது சரி செய்து விட்டேன்" "நான்கும் நன்றாக வேலை செய்கின்றனவா"

"கத்தியால் பட்டர் பூசுவதுபோல கச்சிதமாக வேலை செய்கின்றன"

"அதைத்தான் எதிர்பார்த்தேன்"

"எப்போது செய்யப்போகிறோம்"


"அடுத்த மாதம் பதினைந்தாம் திகதி"

கூண்டிலிருந்த புலி ஒருமுறை உறுமியது.

எல்லாம் சரியாக இருந்தும் அடுத்த மாதம் அவர்களால் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. அடுத்தடுத்து இடையூறுகள் வரத்தொடங்கின.

முதலாவது இடையூறு. சாவிகள் வேலை செய்கின்றனவா என்று ட்ரயல் பார்த்த தினத்துக்கு மறுதினமே வந்தது.

(கொள்ளை தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம்

134

பா.ராகவன்

அவர் சொன்னது உண்மைதான் என்று அடுத்த ஒரு மணிநேரத்தில் உறுதியானது. ஆகவே நாசர், யுத்தத்தை இஸ்ரேலே ஆரம்பிக்கட்டும் என்று காத்திருக்கத் தீர்மானித்தார்.

இஸ்ரேலும் ஒரு முடிவில்தான் இருந்தது. சிரியாவுடனான தண்ணீர்ப் பிரச்சினை, எகிப்துடனான கப்பல் போக்குவரத்துப் பிரச்சினை, ஜோர்டனுடனான மேற்குக் கரைப் பிரச்சினை உள்ளிட்ட தன்னுடைய சொந்தப் பிரச்சினைகளுக்கு அமெரிக்காவோ, ஐ.நா. சபையோ ஒரு தீர்வு கொண்டுவரா விட்டால், தனக்குத் தெரிந்தமுறையில்



தானே நடவடிக்கையில் இறங்கிவிடலாம் என்பதுதான் அது!

அந்த ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி மோசே தயான் என்கிற மூத்த இராணுவ அதிகாரி ஒருவரை இராணுவத் தளபதியாக நியமித்தார். இஸ்ரேலியப் பிரதமர் லெவி இஸ்கல். ஓர் அவசர யுத்தத்தைத் திட்டமிட்டு நடத்தக்கூடிய வல்லமை பொருந்தியவர் என்பதால்தான் இந்த திடீர் பதவி மாற்றம்.

இதை கவனித்ததுமே அமெரிக்க அதிபர் ஜோன்சன் இஸ்ரேலியப் பிரதமரைத் தொலைபேசியில் அழைத்தார். வேண்டாம். யுத்த முஸ்தீபுகள் இப்போது தேவை யில்லை என்று எச்சரிக்கை செய்தார்.

ஆனால் இஸ்ரேல் கேட்கக்கூடிய நிலையில் இல்லை. அமெரிக்கா சொன்னதைக் கேளாமல் யுத்தத்தை ஆரம்பித்துவிட்டாலும் பின்னால் சமாதானம்பேசி வழிக்குக்கொண்டு வந்துவிடலாம் என்று முடிவு செய்தார் இஸ்ரேலியப் பிரதமர்.

ஆகவே எகிப்தின்மீது தாக்குதல் தொடங்க உத்தரவிட்டார். அன்றைக்கு திகதி ஜூன் 5.

இஸ்ரேலின் முதல் இலக்கு, எகிப்தின் விமானப்படையை ஒழித்துக் கட்டுவது தான். அன்றைய திகதியில், மத்திய கிழக்கில் மிகவும் சக்திவாய்ந்த விமானப் படை வைத்திருந்த ஒரே தேசம் எகிப்து. காரணம் சோவியத் யூனியனின் ஒத்துழைப்பு. உலகில் விமானக் கட்டுமாணத்தில் என்னென்ன நவீன உத்திகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ அவை அனைத்தையும் எகிப்து விமானப் படைக்கு வந்துசேர வேண்டும் என்பதில் எகிப்தைக் காட்டிலும் அப்போது சோவியத் யூனியன் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தது.

மத்திய கிழக்கில்தான் பங்கேற்கக் கூடிய பெரிய யுத்தம் என்று ஏதேனும் வருமானால், அப்போது அதிநவீன எகிப்து விமானப்படையை உபயோகித்துக் கொள்ளலாமே என்கின்ற முன்யோசனை யுடன் தான் சோவியத் யூனியன் எகிப்து விமானப் படையை ஒரு செல்லநாய்க் குட்டி போலப் பராமரித்துவந்தது.

இது ஒரு வெளிப்படையான ரகசியம். அன்றைக்கு உலகம்முழுவதுமே இந்த விசயம் தெரியும். தன்னுடைய விமானப் படையின் பலம் குறித்த பெருமையுடன் இருந்த எகிப்து அதனாலேயே மற்ற படைகள் சற்று முன்பின்னாக இருந்தாலும் பெரியதாக அலட்டிக்கொள்ளாமல் இருந்தது.

இதனால்தான் இஸ்ரேல் முதலில் எகிப்தின் விமானப்படையை துவம்சம் செய்துவிட முடிவு செய்தது. மொத்தம் 385 போர் விமானங்கள், அத்தனையும் சோவியத் யூனியன் சரக்கு. அவற்றுள் நாற்பத்தைந்து விமானங்கள் TU 16 Badger என்கிற நடுத்தர குண்டுவீச்சு விமானங்கள்.

இந்த விமானங்களைக் கொண்டு தான் முன்னதாக எகிப்துப் படைகள் இஸ்ரேலின் எல்லைப் பகுதிகளில் அடிக்கடி குண்டுவீசித் தாக்குதல் நடத்திவந்தன. ஆகவே இவற்றை முதலில் ஒழித்துவிட வேண்டும் என்கிற குறிக்கோளுடன் ஜூன் 5 ஆம் திகதி இஸ்ரேலிய நேரம் காலை 7.45 இற்கு அனைத்து இஸ்ரேல் போர் விமானங்களும் எகிப்து விமானத் தளங்களைக் குறிவைத்துப் புறப்பட்டன.

முன்னதாக இஸ்ரேல் முழுவதும் யுத்த எச்சரிக்கை செய்யப்பட்டது. எல்லையோர மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். முக்கிய அரசு அலுவலகங்களுக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, இரவோடு இரவாக தேசம்முழுவதும் ரிசேர்வ் பாதுகாப்புப் படையினர் பணியில் நிறுத்தப்பட்டார்கள்.

எகிப்துவசம் நல்ல தரமான போர் விமானங்கள் இருந்தனவே தவிர, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவுமே கிடையாது. அதன் விமானத்தளங்கள் அனைத்தும் கார்பரேசன் மைதானம் போலத்தான் இருக்கும். விலை மதிப்பு மிக்க போர் விமானங்களைப் பாதுகாக்கக் கூடிய பங்கர் என்று சொல்லப்படும் இராணுவத் தளபாடங்கள் அப்போது எகிப்திடம் இல்லை.

இந்த விசயத்தை மனதில் கொண்ட இஸ்ரேல், எந்தத் திசையில் இருந்து தாக்குதலைத் தொடங்கலாம் என்று ஆறஅமர யோசித்து, இறுதியில் மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து ஆரம்பிப்பதே பலம்தரும் என்று முடிவு செய்தது. அனைத்து இஸ்ரேலியப் போர் விமானங்களும் எகிப்துப் பக்கம் திரும்பு முன் மத்திய தரைக்கடலின்மீது வானில் அணி வகுத்துப் பறந்தன.

நாசர் கவலைகொண்டார். என்ன செய்யலாம் என்று யோசித்தார். அவருக்கு வேறு ஒரு பிரச்சினை இருந்தது. அறிவிப்பில்லாமல் இஸ்ரேல் யுத்தத்தைத் தொடங்கியிருக்கிறது. இந்த விசயம் எகிப்து மக்களுக்கு முதலில் முறைப்படி தெரியப்படுத்தப்படவேண்டும்.

(தொடரும்...)

# காதல் ஊழல்

22



அவளும் வானொலியில் கவிதை வாசித்தால் விடுதலையை வாழ்த்திவரும் தொலைபேசி அழைப்புக் களைப்போலவே புஸ்பாவிற்கும் வாழ்த்து அழைப்புக்கள் வரும்!

அன்றும் வழமைபோல் வெள்ளிக்கிழமை நடக்கும் வானொலி கவிதை நிகழ்ச்சியில் கலந்து கொண்டாள்!

மறுகணமே ஒரு அழைப்பு வந்தது. பாராட்டுகள் கூறி புஸ்பாவின் மனதை சிறகடிக்க வைத்தது! ஆனால் புஸ்பாவிற்கு கிடைத்த பரவச சிறகுகள் வாழ்த்துக்கூறிய வாயால் வினவிய சொற்கள் அவ்வளவு தொலைவில் பறக்கவிடவில்லை!

புஸ்பாவின் சிறகுகளை அன்று துவக்கம் துண்டிக்கத்துவங்கின. அன்று துவக்கம் அவளை இரண்டாது போருக்குள் இழுத்துச் சென்றது இன்றும் போராடுகிறாள்!

வாழ்த்திய வவுனியா யுவதி புஸ்பாவின் கன்னத்தில் இரும்புக் கரத்தால் அறைவதுபோல் கேட்டாள்.

"புஸ்பா நீங்கள் விடுதலையின் லவ்வராமே"

புஸ்பா "ஓம்" என்று வார்த்தை ஓய்வதற்குள் அழைப்பு துண்டிக்கப் பட்டது!

புஸ்பாவின் இதயம் சந்தோஷமும் கவலையும் சண்டையிட்டு துண்டாகியும் ஒட்டியும் மாறிமாறி துடித்தது!

விடுதலை தங்கள் காதலை கூறியிருக்கலாம் எனும் சந்தோஷம்.

அவள் அப்படிக் கேட்டவள், இப்படியேன் அழைப்பை துண்டிக்கவேணும்?

இல்லை. அவளின் தொலைபேசியில் பணம் தீர்ந்திருக்கலாம்! என்று மாறிமாறி மனசுடன் கதைத்துக் கொண்டிருக்கையில்... மீண்டும் ஒரு மின்னல் வேகத்தில் ஒரு அழைப்பு அவசரமாக கை பேசியை கையில் எடுத்தாள் அது வேறு யார்தான்?

அவளுடையவன்!

"ஹலே சொல்லுங்க அண்ணா"

"அடியேய் உனக்கு எண்ட மானத்தை வாங்கணுமா?" என்று ஒரு எதிரி ஆயுததாரியுடன் அணுகுவதுபோல் ஆவேசத்தில் வார்த்தைகளை உச்சரித்தான் விடுதலை!

தொடர்ந்தும் சொல்லமுடியாத வார்த்தைகளுடன் தொடர்ந்தான்!

மௌனித்திருந்த புஸ்பா மெல்ல முல்லை மலர் விரிவது போல் "ஏன் அண்ணே இப்படிப்பேசுறீங்க?"



என்று தன்னிதழ் விரித்தாள்.

"நீ என்னடி ஊர்முழுக்க என்ன காதலிப்பதாய் சொல்லித் திரியிறியாம்? உனக்கும் எனக்கும் தெரிந்தால் போதாதா?" என்று இன்னும் இம்சைப் படுத்தும் விதமாக கேள்விகளையும் கேவலவார்த்தைகளையும் அள்ளிவீசினான்!

அந்த நிமிடம்வரை அமுதமாயிருந்த காதல் நஞ்சாகத்துவங்கியது. எந்தளவிற்கு காதல் சுகமானதோ அதைவிட ஆயிரம் மடங்கு சுமையானது. அந்த சுமையை உண்மையில் புஸ்பாவால் சுமக்க முடியவில்லை!

விடுதலை கொடுத்த சுமை அவளுடைய வாழ்க்கையில் முதலாவது சுமை! எத்தனையோ சுமைகளை ஏற்றுக்கொண்ட புஸ்பாவால் இந்தச் சுமையை எந்தவகையிலும் ஏற்க முடியவில்லை!

அவளால் மட்டுமல்ல... எவராலும் முடியாது!

ஒரு நாளைக்கு பல தடவை அழைப்பெடுப்பாள். சில நாட்களில் ஒரு நாளில் உள்ளடங்கியிருக்கும் நிமிடங்களைவிட அதிகமாக அழைப்பெடுப்பாள். பதில் பூஜ்ஜியமாகும். இதயம் போர்க்களமாகும். இடையிடையே குறுந்தகவலும் அனுப்புவாள். சிலவேளை பதில்வரும்! கூர்வாள் சுமந்துவந்து குத்தும். இல்லையேல் வேல்நெஞ்சில் பாயும்! உண்மையில் புஸ்பா விற்கு ஒரு காதலன் விடுதலைக்கோ பல காதலிகள்!

புஸ்பா தினமும் விடுதலை நினைவில் காலம் கடத்தினாள். விடுதலையோ ஒரு நாளைக்கு ஒரு காதலியென்று காலம் கடத்தினான்!

(ஊழல் தொடரும்...)

மிஹிந்தலை A.பாரிஸ்



வே. அர்ச்சுனன்

# யாழில் இருந்து 21 முள்ளிவாய்க்கால் வரை

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் தொடங்கி அது முடிவுறுகின்ற காலகட்டங்கள் வரை நோர்வேயே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கடுமையான போக்கை கடைப்பிடிக்காதவாறு அமெரிக்கா கையாண்டு வந்தது. அதாவது கடுமையான இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்வதற்கு ஜப்பானையும் மென்மையான போக்கை கடைப்பிடிக்க நோர்வையையும் அமெரிக்கா பயன்படுத்தி வந்தது.**

அமெரிக்கா நோர்வேயூடாக தெட்டத் தெளிவாக கூறிய செய்தியானது இங்கு ஜப்பானிய சிறப்பு சமாதான தூதுவரின் கருத்துக்களுக்கு செவிமடுத்து அவரின் சொல் கேட்டு நடந்தால் உங்களால் இலங்கையில் தொடர்ந்து இயங்க முடியும். இல்லை என்றால் இலங்கை அரசாங்கம் போர் தொடுக்கும் என்ற போது இலங்கை அரசாங்கத்திற்கு உதவுவதை தவிர வேறு மார்க்கங்களோ அல்லது தெரிவுகளோ அமெரிக்காவிற்கு இருக்காது என்ற செய்தியை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நோர்வேக்கு தெரியப்படுத்தியதுடன் இந்தக் காட்டமான இறுக்கமான செய்தியை நோர்வே குழுவினர் புலிகளிடம் எடுத்துச் செல்ல வேண்டாம் என்றும் ஜப்பானிய சமாதான தூதுவர் யசூசிஅகாசியூடாக இந்த தகவலை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பரிமாறுமாறும் அமெரிக்க ஆலோசனை கூறியது.

அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் தொடங்கி அது முடிவுறுகின்ற காலகட்டங்கள் வரை நோர்வேயே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கடுமையான போக்கை கடைப்பிடிக்காதவாறு அமெரிக்கா கையாண்டு வந்தது. அதாவது கடுமையான இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்வதற்கு ஜப்பானையும் மென்மயான போக்கை கடைப்பிடிக்க நோர்வையையும் அமெரிக்கா பயன்படுத்தி வந்தது.

பேச்சுவார்த்தைகள் முழுமையாக தோல்வி கண்டு யுத்ததிற்கான முழுமையான முனைப்புக்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த சூழ்நிலையிலும் கூட நோர்வே குழுவினர் கிளிநொச்சிக்கு வந்த பொழுது அவர்களை சிரித்த முகத்தோடு வரவேற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்ச்செல்வன் வழமையிலும் பார்க்க விசேடமான உணவு வகைகளை பரிமாறியதுடன் அவர்களுடன் மனம் விட்டு கதைப்பதற்கும் தவறவில்லை.

இவ்வாறு நோர்வே குழுவினரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மனம் திறந்து பேசிய போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்ச்செல்வன், நாங்களும் நீங்களும் சந்திக்கின்ற இறுதிச் சந்திப்பாக பார்க்கப் படுகிறது. என்று கூறிய பொழுது இதற்குப்பதிலளித்த நோர்வேகுழுவினர் நீங்கள் மனம் வைத்தால் நாங்கள் உங்களை தொடர்ந்து சந்திக்கவும் உங்களது வான்கோழிக்கறியை சுவைத்து சாப்பிடவும் சமாதான முயற்சிகளை முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றது எனக்கூறியபொழுது இதற்குசிரித்தவாறு பதிலளித்த தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இனிமேலும் விட்டுக்கொடுப்புக்களிற்கு அல்லது இறங்கி வரவோ தயாராக இல்லை என்று பதிலளித்து நோர்வே குழுவினரை சிரித்த முகத்துடன் இலங்கை விமானப்படை உலங்கு வானூர்தியில் அவர்கள் செல்வதைப் பார்த்தவாறு வழியனுப்பி வைத்தார். நோர்வே குழுவினரை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்ச்செல்வன் சந்தித்த அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களை சந்தித்த இறுதிச் சந்திப்பாக இருந்தது.

இச் சந்திப்பின் பின்னர் ஊடகங்கள் தமிழீழ விடுதலைப் புலிகிகளின் அரசியற்துறைப் பொறுப்பார் சு.பதமிழ்ச்செல்வனிடம் கேள்விக்கணைகளை தொடுத்த போது பேச்சு வார்த்தைக்கான அனைத்து வழிமுறைகளையும் இலங்கை அரசாங்கம் அடைத்து விட்டது என்றும் அவர்கள் பேச்சுவார்த்தை கதவுகளை மூடிவிட்டதால் அல்லது எங்களது கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளத் தவறுவதால் நாங்கள் எங்களின் மக்களின் விடுதலைக்கான போரை தொடங்குவதற்கான சூழ்நிலையில் இருக்கின்றோம் என்று சாரப்பட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்ச்செல்வன் கூறிய போது இச் செய்தியைக் கேட்ட மக்களது முகங்களில் நம்பிக்கை ஒளிக்கீற்றுக்கள் முற்றாக மாறி தாம் இனிமேல் சந்திக்கப் போகும் அவலங்களை நினைத்து ஏங்கத் தொடங்கினர். நோர்வே குழவினரின் இறுதி முயற்சிகள் தோல்வி அடைந்த போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கடுமையான செய்தியைத் தெரிவிப்பதற்கு ஜப்பானிய தூதுவர் வன்னிக்கு வருவதற்கு தயாராகிக் கொண்டு இருந்தார்.

இந்நிலையில் நோர்வேயின் சமாதான குழுவினர் வன்னிக்கு வந்து சென்றவுடன் தமிழீழ விடுதலைப் புலிகின் தலைவர் வே.பிரபாகரன் வட்டக்கச்சியிலுள்ள அவர்களது மறைவிடம் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏனைய தளபதிகளை சந்தித்து நிலமைகளை விளக்கும் கூட்டம் ஒன்று இடம் பெற்றது. இக் கூட்டத்தில் தளபதிகள் பலரும் பல்வேறு கோணங்களில் கேள்விகளைத் தொடுத்த் போது அதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக தொடர்பாடல் பொறுப்பாளர் திரு கஷ்ரோ எனப்படும் மணிகண்டன் "என்பவன் அண்ணா நீங்கள் இப்பவும் எரிக்சொல்ஹெய்மை நம்புகிறீர்களா?" என்று கேள்வி கொடுத்தார்.



இதற்குப் பதிலித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நான் இப்பொழுதல்ல எப்பொழுதுமே அவரை மட்டுமல்ல நோர்வேயின் எந்தக் குழுவினரையும் அல்லது யாரையுமே நம்பியது கிடையாது அதாவது எங்களது ஆயுதப் போராட்டத்தை அழிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் தமிழர் தாயகத்திற்கு வந்து அமைதி நாடகம் ஆடுகின்றது. சொன்னதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்று சில நாடுகள் தீர்மானம் எடுத்துள்ளன என்றும் அவை அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலிலேயே இடம் பெற்று வருகின்றது என்றும் நோர்வேயின் சமாதானபீடம் இன அழிப்பு நாடகத்திற்கான ஒரு பாத்திரம் என்றும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழிக்க முயன்ற முதலாவது சக்தி அமெரிக்கா என்றும் இரண்டாவது சக்தியாக இந்தியா உள்ளது என்றும் ஆனால் அமெரிக்கா தானே அதை நேரடியாக செயற்படுத்தாமல் மறைமுகமாக நின்று நோர்வேயின் அனுசரணையுடன் இத்னை செயற்படுத்துகின்றது. என்றும் எங்களது இயக்கம் ஒரு படைவலுவுடன் இருப்பதால் எமது இயக்கத்தை ஆயுத ரீதியாக இலங்கை அரசால் அழிக்க முடியாது என்பது அமெரிக்காவிற்கு நன்றாக தெரிந்த விடயம் இதற்காகவே சமாதானப் பேச்சுவார்த்தை என்ற நாடகத்தை ஆடி இச் சமாதான காலத்தில் எங்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்தி எங்களைப் பலவீனப் படுத்தும் நடவடிக்கையில் அமெரிக்கா வெற்றி கண்டது.

அதாவது கருணாவின் உடைவு என்பது இதற்கு சிறந்த உதாரணம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அன்று கூறிய போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத முகவரான கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன் அக்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மறைமுகமாக செயற்பட்டதை தமிழீழ விடுதலைப புலிகளின் தலைவர் வே.பிரபாகரனோ அல்லது ஏனைய தளபதிகளோ அறிய வாய்ப்பில்லை அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளின் பாணியில் சொல்லப் போனால் கே.பி அடிவருடியாக விலைக்கு வாங்கப்பட்டார் என சொல்லலாம்.

பிரபாகரனுக்கு நல்லவன் போல நடித்த கே.பி பணத்தை கண்டதும் குணம் மாறினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் அழிவிற்கு அவரும் ஒரு காரணம் ஆகின்றார். ஆனால் இதை தமிழீழ விடுதலைப் புலிகள் இறுதி வரைக்கும் அறிந்திருக்கவில்லை. தாங்கள் கே.பியை ஓரம்கட்டுகிறோம் என்று புலிகள் இறுமாப்புடன் எண்ணிய போதிலும் கே.பி புலிகளை ஓரம் கட்டியதே உண்மை அதாவது இலங்கையில் புலனாய்வுத் துறையின் வழியில் சிக்கிய கே.பி உடனடியாகத் தனது உண்மை முகத்தை வெளிப்படுத்தாமல் புலிகளுடன் விசுவாசியாகவே இறுதிவரை நடித்தார்

கருணாவைப் போல உடனடியாக தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து பிரிகின்ற முடிவை எடுக்காமல் மறைமுகமாக அழிக்க அரசுடன் கைகோர்த்தார் என்பதே உண்மை. இதன் பின்னனியில் அமெரிக்காவின் புலனாய்வுக் கட்டமைப்பும் தனது செயற்திறன்களையும் ஆலோசனைகளையும் பரிமாறிக் கொண்டமை மேலும் வழிசேர்த்த ஒன்றாகும். அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளை கூண்டோடு அழிக்க வேண்டும் என்ற செயற்திட்டத்தில் அமெரிக்கா இருந்தமைக்கான பிரதான காரணம் 2001செப்டெம்பர்11 உலக வர்த்தக மையம் மீது நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலாகும். இந்த தாக்குதல்களை தொடர்ந்து அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான முழுமையான நிகழ்ச்சி நிரல்களை செயற்படுத்த தொடங்கியது. இவ் நிகழ்ச்சி நிரலில் தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்வாறு உள்ளடக்கப் பட்டனர் என்ற விடயத்தை மேலோட்டமாக பார்த்தவாறு செல்வது பொருத்தமாக இருக்கும் அமெரிக்காவின் அந்நிகழ்ச்சி நிரல் என்ன? அந்த நிகழ்ச்சி நிரல் தமிழீழ விடுதலைப் புலிகளை முள்ளிவாய்க்கால் வரை எவ்வாறு இழுத்துச் சென்றது என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# சித்திரவதைகளும் மனித உரிமைகளும்...

## சர்வதேச விவகாரம்

பகுதி - 02

**போல்,** தனது திரைக்கதையில் எதையெல்லாம் சேர்க்க அனுமதிக்க வேண்டுமென்பதில் சி.ஐ.ஏ. விழிப்புடன் இருந்தது. அமெரிக்க இராணுவத் தின் பல சித்திரவதை முறைகள் ஏற்கனவே பொதுப்படையாக அம்பலப்படுத்தப்பட்டிருந்த காரணத்தால் மட்டுமே, அவர்கள் குறிப்பிட்ட சித்ரவதைக் காட்சிகளை அனுமதித்தனர். மொத்தத்தில், ஹாசன் குல் மற்றும் அபு. பராஜின் திரைப்படத்தில் (அல் கொய்தா செயல்பாடுகள் என்று குற்றம் சாட்டப்பட்ட) இருக்கும் விசாரணைக் காட்சிகள் மேம்பட்ட விசாரணை யுக்திகளை (EIT) உள்ளடக்கியது போல் இருக்கும். அவை ஏற்கெனவே நீதித்துறை சட்ட ஆலோசனை அலுவலக அறிக்கையில் வெளிப்படையாக இருப்பவ்வ என்று ஏஜென் சியின் ஆணைக்குறிப்பு தெரிவிக்கிறது.

எந்த ஒரு புறநிலை பார்வையாளரையும் அமெரிக்க கொள்கைக்கு எதிராக திருப்பும் அளவுக்கு அதன் சித்ரவதைக் காட்சிகள் மிகவும் கவலைப்படும்படியாக இருப்பதாக, Zero Dark Thirty இன் ஆதரவாளர்கள் வாதிடுகிறார்கள். உண்மையில், அடிப்படையில் நேர்மையான ஒரு காரணத்தின் தொடர்ச்சியில் "தீவிரவாதத்திற்கு எதிரான போரிலும், 9/11இற்காக அவர்களது பழிவாங்கும் ஆர்வத்திலும், அமெரிக்க அதிகாரிகள் எப்போதாவது (மற்றும் எல்லா விஷயங்களையும் கருதும்போது,மன்னிக்கத்தக்க வகையிலும்) எல்லை மீறியிருக்கிறார்கள் என்பதாக இத்திரைப்படத்தின் மையக்கருத்து இருக்கிறது. மனதை பாதிப்பதாக கருதப்படும் படத்தில் பார்த்த எந்த காட்சிகளும் சி.ஐ.ஏ.வின் தெளிவான அனுமதியின்றி திரைப்படத்தில் இடம்பெற்றிருக்காது அல்லது வைக்கப்பட்டிருக்காது.

குடித்த பிறகு ஒரு அதிகாரி, ஏகே - 47 துப்பாக்கியால் வெளியில் சுட்டு மகிழ்கிறார். குடிவகையையும் துப்பாக்கிகளையும் கலப்பது ஒரு முக்கிய விதிமீறல் மற்றும் நிஜ வாழ்க்கையில் இது போன்ற செயல் நடப்பதில்லை(!) என நாம் வலியுறுத்தினோம். திரைப்படத்திலிருந்து இக்காட்சியை நீக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொண்டோம். இதனை படத்திலிருந்து எடுத்து விட்டதாக போல் உறுதிசெய்தார். என்கிற முன்மொழியப்பட்ட ஒரு காட்சியையும் சி.ஐ.ஏ விதிவிலக்காக எடுத்துக் கொண்டது,

சிலர் சித்ரவதை செய்யப்படுவதும் மற்றும் தவறான முறையில் நடத்தப்படுவதை உள்ளடக்கிய கைதிகள் விசாரணை ஒளிப்பதிவுகளை மாயா பார்வையிடுகிற ஒரு நீளமான காட்சிக்கும் சி.ஐ.ஏ. எதிர்ப்பு தெரிவித்தது. "கைதிகளின் விசாரணைகள் ஒளிப்பதிவு செய்யப்படவில்லை,ஆராய்ச்சி செய்யப்பட்டு பகுத்தாய்வும் செய்யப்படவில்லை" என்று பொது விவகாரத்துறை அதிகாரிகள் (OPA) தெரிவித்தனர். "ஒரு சுவாரஸ்யமான சினிமா பாணியில் காட்சி ரீதியாக.... ஆராய்ச்சிகளை காண்பிப்பதற்கான ஒரே வழி அதுதான்" என்று போல் அந்த மறுப்புக்கு பதிலளித்தார்.அதனால் சி.ஐ.ஏ. அதற்கான கண்டிப்பை குறைத்தது. தண்ணீரில் அழுத்துதலை பயன்படுத்துவது உள்ளிட்ட விசாரணைகளை முகவாண்மை ஒளிப்பதிவு செய்தது என்பதும் அந்த ஒளிப்பதிவுகள் பல பின்னால் சட்டத்திற்குபுறம்பாக அழிக்கப்பட்டன என்பதும் நன்றாக தெரிந்த விஷயம்.

Gawker இற்கான ஒரு மின்னஞ்சல் பதிலில், "செயல்பாடுகளின் விவரங்களையும் அதில் கலந்துகொண்டவர்களின் அடையாளங்களையும் ரகசியமாக வைப்பதற்காக சில வேண்டுகோள்களை நாங்கள் மதித்தோம். ஆனால் எந்த பதிப்பு அல்லது கலைப் படைப்பையும் போன்றே, கதையைப் பொறுத்தவரையில் இறுதி முடிவுகள் திரைப்பட உரிமையாளர்களாலேயே எடுக்கப்பட்டன" என்று போல் எழுதினார்.

சி.ஐ.ஏ.வின் தேவைகளுக்கேற்ப, முகவாண்மையின் செயல்பாடுகள்,யுக்திகள் மற்றும் நடத்தைகளை நீக்குதல் உள்ளிட்ட மாற்றம் செய்யும் நிலை பிகெலோ அல்லது போல் ஆகிய அமெரிக்க இராணுவ-புலனாய்வு அமைப்பின் பணிவான பணியாளர்களுக்கு ஏற்படாது. இது "கலைப் படைப்பு"இன் முடிவில் எவ்விதமான விளைவையும் கொண்டிருக்கலாம்.

Zero Dark Thirty திரைப்பட உரிமையாளர்களின் அரசியல் மற்றும் ஒழுக்க இழிநிலை எல்லை அற்றதாக தெரிகிறது. பயங்கரவாதத்தின் மீதான .போர் என்ற பெயரில் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ., உலகெங்கும் இரகசியமாக ஆட்கடத்தல்- சித்திரவதைகளை நடத்தியிருப்பதை, நியூயோர்க்கைச் சேர்ந்த ஓப்பன் சோசைட்டி பவுண்டேசன் என்ற ஏகாதிபத்தியத் தொண்டு நிறுவனத்தின் புலனாய்வு அறிக்கை (2012-2013) அம்பலப்படுத்தியிருந்தது.. மன்மோகன் சிங்கின் மகள் அம்ரித் சிங் வெளியிட்டுள்ள சித்திரவதையின் உலகமயமாக்கம் என்ற இந்த அறிக்கை, உலகின் 54 அரசுகள், தமது நாட்டு சட்டங்களுக்கே விரோதமாக, தம் நாட்டுக் குடிமக்களையே கைது செய்து சி.ஐ.ஏ.விடம் ஒப்படைத்ததோடு, அவர்களைச் சித்திரவதை செய்யவும் கடத்தவும் உடந்தையாக இருந்ததை அம்பலப்படுத்தியிருந்தது. இப்படி சி.ஐ.ஏ.வுக்கு ஒத்துழைத்த நாடுகளின் பட்டியலில் ஜனநாயகம் தழைத்தோங்கும் ஜெர்மனி, பிரிட்டன், டென்மார்க், கனடா போன்ற நாடுகள் முதல் அமெரிக்காவால் தீய சக்திகளின் ஆணிவேர் என சித்தரிக்கப்படும் சிரியா, இரான் போன்ற இஸ்லாமிய நாடுகள் வரை பலரும் அடக்கம்.

அதிர்ச்சியூட்டும் செய்தி இது மட்டுமல்ல். சி.ஐ.ஏ.வை அம்பலமாக்கும் இந்த அறிக்கையை வெளியிட்டிருப்பவர், அமெரிக்காவில் வசிக்கும் மன்மோகன் சிங்கின் மகள் அம்ரித் சிங். புருவத்தை உயர்த்த வேண்டாம். அது பற்றி ஆராய்வதற்கு முன், அம்ரித் சிங்கின் அறிக்கை கூறும் விவரங்களில் சிலவற்றைப் பார்ப்போம்.


2003-இல் சி.ஐ.ஏ.வின் ஆட்கடத்தலுக்காக உபயோகப்படுத்தப்படும் ரிச்மோர் ஏவியேஷன் நிறுவனத்தின் விமானம், பாங்காக்கிலிருந்து ரித்வான் இசாமுதீனைக் கடத்துவதற்கு முன் தென்னாசிய நாடொன்றில் தரையிறங்கியிருக்கிறது. இவர் பின்னர் மூன்றாண்டுகள் சி.ஐ.ஏ.வின் பல்வேறு இரகசிய முகாம்களில் சித்திரவதை செய்யப்பட்டு, 2006-இல் குவாண்டினாமோ பே சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

2004-ஆம் ஆண்டு பாத்திமா பவுச்சர் என்ற சிரிய நாட்டுப் பெண் கோலாலம்பூர் விமான நிலையத்தில் பிடிக்கப்பட்டு விமான நிலையத்திலேயே உருவாக்கப்பட்ட இரகசிய அறையில் அமெரிக்க உளவுத்துறையினால் பல நாட்கள் சித்திரவதை செய்யப்பட்டார். நான்கரை மாத கர்ப்பமாக இருந்த பவுச்சர், சங்கிலியால் கட்டப்பட்டு, ஐந்து நாட்களுக்குப் பட்டினி போட்டுக் கொடுமைப் படுத்தப்பட்டிருக்கிறார்.

ஈரானில் பிடிக்கப்பட்ட அகமது அல்-தீமா, ஆப்கானிஸ்தானில் அமெரிக்க உளவுத் துறையின் இருண்ட சிறையில் 77 நாட்கள்அடைக்கப்பட்டிருந்தார். அதன் பிறகு பாக்ரம் என்ற இடத்துக்கு கடத்தப்பட்டு கூரையில் கட்டித் தொங்கவிடுவது, நாய்களால் அச்சுறுத்துவது, சித்திரவதை வீடியோக்களை பார்க்க வைப்பது, எந்திரத்தால் அறுக்கும் சத்தத்தோடு வலியால் அலறும் சத்தத்தைக் கேட்க வைப்பது என்று 40 நாட்களுக்குச் சித்திரவதை செயப்பட்டிருக்கிறார்.

-இவை சில எடுத்துக்காட்டுகள். இது போல பல விதமாக அமெரிக்கா நடத்திவரும் மனிதத்தன்மையற்ற, மிருகத்தனமான சித்திரவதைகளுக்கு 54 நாடுகள் முழு ஒத்துழைப்பு கொடுத்துள்ளன.

சி.ஐ.ஏ. செய்த இத்தகைய கொடூரங்கள் வெளியாவது இது முதல்முறையல்ல. சி.ஐ.ஏ.வின் கருந்தளங்கள என அறியப்பட்ட இரகசிய சித்திரவதைக் கூடங்களைப் பற்றியும் அதற்கு ஐரோப்பிய நாடுகள் வழங்கும் ஒத்துழைப்பு பற்றியும் 2005-இல் சில அமெரிக்கப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டன. அப்போது ஐரோப்பிய சபை நடத்திய விசாரணையில் ஏறத்தாழ இருபது நாடுகள் சி.ஐ.ஏ.வுக்குத் துணைபுரிந்தது அம்பலமாகியது. 2006 ஜனவரியில் ஐரோப்பிய நாடாளுமன்றம் அமைத்த மற்றொரு விசாரணைக் குழு அளித்த அறிக்கை, 2001-2005 காலகட்டத்தில் ஐரோப்பிய விமான வழித்தடத்தின் ஊடாக மட்டுமே சி.ஐ.ஏ. விமானங்கள் வழி ஆட்கடத்தலில்1245 தடவை ஈடுபட்டதை அம்பலப்படுத்தியது. 2012-ஆம் ஆண்டு மனித உரிமை கண்காணிப்பகம் என்ற தொண்டு நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், சி.ஐ.ஏ. ஆப்கான் ஆக்கிரமிப்பின் போது



"வாட்டர் போர்டிங்" என்ற கொடூர தண்ணீர் சித்திரவதையை கைதிகள் மீது ஏவியதாகக் குற்றம் சாட்டியது. ஆனால், இந்தச் சித்திரவதைகள் உயர் அரிகளின் வழிகாட்டுதல்படி, அமெரிக்க நலனுக்காகவே நடந்தது என்பதால், அதன் மேல் நடவடிக்கை எடுக்க முடியாது என்றார் அமெரிக்க அட்டர்னி ஜெனரல் எரிக் ஹோல்டர்.

இவ்வறிக்கையை வெளியிட்ட அம்ரித் சிங், சி.ஐ.ஏ. வின் இத்தகைய நடவடிக்கைகள் மீது அமெரிக்க அரசு ஒரு சுயேச்சையான விசாரணை நடத்தி, இந்தச் சித்திரவதை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சி.ஐ.ஏ. அதிகாரிகள் யார் என்பதை அம்பலமாக்க வேண்டும். நடந்துள்ள இந்த முறைகேடுகளுக்கு அமெரிக்கா மட்டுமின்றி, மற்ற நாடுகளும் பொறுப்புதான் என்ற போதிலும், இவ்வாறு சர்வதேச சட்டங்களை மீறி நடந்து கொள்வதன் விளைவாக, உலகளவில் பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு ஆதரவு குறைவதுடன், அமெரிக்காவின் தார்மீகத் தகுதியும் பாதிக்கப்பட்டுவிடும் என்று குறிப்பிடுகிறார்.

அம்ரித் சிங்கின் அறிக்கை, அமெரிக்க அரசு வேறு அதன் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. வேறு போலவும், சி.ஐ.ஏ. என்பது நாட்டாமைக்கு தெரியாமல் ரவுடித்தனம் செயும் தறுதலைப் பிள்ளை போலவும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகிறது. சி.ஐ.ஏ. வுக்கு கிரிமினல் வேலைகளில் ஈடுபடுவதற்கான சுதந்திரமும் சுயேச்சைத்தன்மையும் அமெரிக்க அரசால் திட்டமிட்டேதான் வழங்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு நாடுகளில் டேர்டிவொர்க்ஸ் (Dirty works) என்று வகைப்படுத்தப்பட்டுள்ள ஆட்கடத்தல், சித்திரவதை, கொலை போன்ற இரகசிய வேலைகளில் தொடங்கி, இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகள் வரையில் எல்லா நடவடிக்கைகளிலும் அது ஈடுபட்டிருப்பது மட்டுமின்றி, அமெரிக்க ஏகாதிபத்தியத் தொழில் நிறுவனங்களுக்காக, மற்ற நாடுகளின் வணிக நடவடிக்கைகள், ஒப்பந்தங்களை வேவு பார்ப்பது வரையிலான முறைகேடுகளி லும் அது ஈடுபட்டிருக்கிறது.

சித்திரவதையின் உலகமயமாக்கம் அறிக்கையைத் தொகுத்து வெளியிட்ட அம்ரித் சிங்.இவையெல்லாம் அம்ரித் சிங் அறியாதவையல்ல. சர்வதேச சட்டங்களை மீறி அப்பட்டமான ஆக்கிரமிப்புகளை அதிகாரபூர்வமாகவே அமெரிக்க அரசு அரங்கேற்றி வரும் சூழலில், சி.ஐ.ஏ. இரகசியமாக செய்த சட்டவிரோத சித்திரவதைகளைத் தேடிக் கண்டுபிடித்து, "அமெரிக்காவின் தார்மீகத் தகுதியைக் காப்பாற்றுவதற்காக" விசாரணை கோருகிறார் அம்ரித் சிங். ஏனென்றால், அவர் "ஓபன் சொசைட்டி பவுண்டேசன" என்ற ஏகாதிபத்திய தொண்டு நிறுவனத்தின் "தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்புத் திட்டத்திற்கு" பொறுப்பு வகிக்கும் தலைமை சட்ட அதிகாரி.

ஓபன் சொசைட்டி பவுண்டேசன் என்பது உலகப் பெரும் கோடீசுவரனும், நிதி மூலதனச் சூதாடியுமான ஜோர்ஜ் சோரோஸ் என்பவனால் நடத்தப்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனம். 1980-களில் போலந்தில் போலி கம்யூனிச ஆட்சிக்கு எதிரான மக்கள் கோபத்தை சாலிடாரிட்டி என்ற எதிர்ப்புரட்சி இயக்கத்துக்கு ஆதரவாகத் திருப்புவதில் சோரோஸின் இந்த அமைப்பு முக்கியப் பாத்திரம் ஆற்றியது. மாசிடோனியா, பெலாரஸ், குரோசியா எனப் பல கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிச நாடுகளில் முதலாளித்துவத்தை நிறுவியதும், ஜோர்ஜியாவில் ரோஜாப் புரட்சியை பின்நின்று இயக்கியதும் சோரோஸின் தொண்டு நிறுவனங்கள்தான்.

ஜோர்ஜியாவில் ஆட்சியைக் கைப்பற்றியதும் ஓபன் சோசைட்டி பவுண்டேசனின், பொறுப்பில் இருந்தவர்கள் அமைச்சர்களாயினர். அந்நாட்டின் துறைமுகம், மின்சாரம், ரயில்வே ஆகியவை சோரோஸின் கைக்கு மாறின. மிலோசோவிச்சை ஆட்சியிலிருந்து இறக்கி, யூகோஸ்லாவியாவைப் பிளந்தது மட்டுமல்ல, கொசாவோ விடுதலைப் படை என்ற இசுலாமியப் படைக்கு பணமும் ஆயுதமும் கொடுத்து, பதிலுக்கு அந்நாட்டின் தங்கம், வெள்ளி, காரீயச் சுரங்கங்களைக் கைப்பற்றிக் கொண்டார் சோரோஸ். "முன்னாள் சோவியத் சாம்ராச்சியத்தை இனி சோரோஸ் சாம்ராச்சியம் என்று அழையுங்கள்" என்று திமிராக அறிவிக்கும் அளவுக்கு சோரோஸின் தொண்டு நிறுவனங்கள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் விளையாடின.

ஓப்பன் சொசைட்டி பவுண்டேசன் என்ற தொண்டு நிறுவனத்தை நடத்தி வரும் அமெரிக்கப் பெருமுதலாளி ஜோர்ஜ் சோரஸ்.

சோரோஸின் "இன்டர்நேசனல் கிரைசிஸ் குருப்" என்ற தொண்டு நிறுவனத்தில், தலிபானையும் பின் லாடனையும் உருவாக்கிய முன்னாள் அமெரிக்க பாதுகாப்பு செயலர் பிரசென்ஸ்கி, நேட்டோ படைத் தளபதி வெஸ்லி கிளார்க், யுகோஸ்லேவியாவில் ஆட்சித் தகர்வை முன்னின்று நடத்திய அமெரிக்க முன்னாள் தூதர் வாரன் சிம்மெர்மென் போன்றவர்கள் கவுரவப் பதவி வகிக்கின்றனர். 1998-இலேயே இராக் மீதான தாக்குதலுக்கு அரசியல், இராணுவ வழிகாட்டுதல்களை கிளிண்டனுக்கு வழங்கியவர்கள், சோரோஸின் ஆலோசகர்கள் தான். ஆயுத பேரங்கள் வழி பெரும் இலாபமீட்டும் கார்லைல் என்ற நிதிச் சூதாட்ட நிறுவனத்தில் 100 பில்லியன் டாலர் முதலீடு செய்திருக்கும் சோரோஸுக்கு சீனியர் புஷ், முன்னாள் அமெரிக்க அரசுச் செயலர்கள், பின்லாடனின் உறவினர்கள் ஆகியோர் தொழில் கூட்டாளிகள்.

சோரோஸ் கடைப்பிடிக்கும் உத்தி எளிமையானது. எந்த நாடுகளில் சர்வாதிகாரத்துக்கு எதிரான மக்கள் அதிருப்தி நிலவுகிறதோ, அங்கே சோரோஸின் மனித உரிமை மீட்பர்கள் களமிறங்குவார்கள். அதன் பின்னர் அந்த நாடுகள் பற்றிப் பத்திரிகைகள் வெளியிடும் தலைப்புச் செய்திகளை சோரோஸின் பணம் தீர்மானிக்கும். அரசுக்கு எதிரான மக்கள் கோபத்தை சோரோஸின் அரசியல் மற்றும் அறிவுத்துறை கூலிப்படை தன்வயப்படுத்திய பின்னர், பொருத்தமான நேரத்தில் அமெரிக்க வெளியுறவுத்துறை கண் சிமிட்டும். அந்த நாட்டில் "புரட்சி" அல்லது "ஆட்சிக்கவிழ்ப்பு" அரங்கேறும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விரிவாக்க நடவடிக்கைகளும், சோரோஸின் தொழில் சாம்ராச்சியமும்; அவரது தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இணக்கமான முறையில் பிணைந்திருக்கின்றன.

இதன் பொருள் பிணக்கே இல்லை என்பதல்ல. முதலாளித்துவத்தையும் அமெரிக்க மேலாதிக்கத்தையும் நாசூக்காக, நயவஞ்சகமாக மக்கள் ஆதரவோடு நிலைநாட்ட வேண்டும் என்பது சோரோஸின் அணுகுமுறை. இதை விடுத்து மூர்க்கத்தனமான முறையில் ஈராக் மீது படையெடுத்த காரணத்தினால் ஜூனியர் புஷ்ஷை வெளிப்படையாக எதிர்த்து, பரபரப்பைக் கிளப்பினார் சோரோஸ். அப்போதே சோரோஸின் உண்மை முகத்தை "நியூ ஸ்டேட்ஸ்மேன்" பத்திரிகையில் நீல்கிளார்க் என்ற பத்திரிகையாளர் தோலுரித்தார்.

சோரோஸ் வெளியிட்ட ஆக்கிரமிப்பு எதிர்ப்பு எத்தகையதோ, அத்தகையதுதான் மன்மோகன் சிங்கின் மகள் அம்ரித் சிங் வெளியிட்டிருக்கும் சித்திரவதை எதிர்ப்பு. அப்பன் அமெரிக்க அடிவருடி என்றால், மகள் எதிர்ப்பை நிறுவனமயமாக்கிக் காயடிக்கும் தொண்டு நிறுவன நிர்வாகி. எது கொடியது? சி.ஐ.ஏ. வின் சித்திரவதையா, தொண்டு நிறுவனங்கள் பேசும் மனித உரிமையா?



# ஒழிக்கப்படுமா ஜனாதிபதி ஆட்சிமுறை?

ஒரு வேளை மைத்திரி வென்றுவிட்டார் என்று வைத்துக்கொண்டால் அவரும் சர்வாதிகாரமுள்ள கதிரையினைவிட்டு ஒருபோதும் இறங்கவேமாட்டார். இறங்கப்போவதுமில்லை. தானும் அதிகாரத்தை அனுபவிக்கவே பார்ப்பார். ஏனென்றால் இதற்கு முன்னரும் ஒழிப்பேன், ஒழிப்பேன் என்று ஆட்சிப்பீடம் ஏறியவர்கள் விட்டு விலகினார்களா? இல்லையே. எனவே இவர்களின் 100 நாள் திட்டம் வெறும் சுத்துமாத்து. இதைவிட மைத்திரியின் பாதையில் போய் பார்ப்போமானால், அவர் வென்று நூறு நாட்களில் ஒழிக்கமுடியாது.

அளவெட்டி ப.உதயகுமார்

நாட்டின் அடுத்த தலைவர் யார்??? ஜனவரி 8 ஆம் நாளன்று நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலே இந்தத் தீர்மானத்துக்கு விடை சொல்லப்போகின்றது! யார் வெல்லப்போகின்றார் என்னும் கேள்வியுடன் ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படுமா?? எனும் கேள்வியும் இன்று பரவலாக எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவே அமைந்துவிட்டது.

ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதும் ஆட்சி மாற்றம் ஒன்று உண்டாகவேண்டும் என்பதும் எதிரணி அரசியல்வாதிகளின் விருப்பமாக உள்ளது என்பதே உண்மையான விடயமாகும்.

தனக்குக் கிடைக்காத ஒன்று இன்னொருவரிடம் இருக்கக்கூடாது என்றே அரசியல் தலைமைகள் எண்ணுகின்றன. அதற்காகவே பொது வேட்பாளர் என்றும் எதிரணி என்றும் ரணிலும் - சந்திரிக்காவும் சேர்ந்து மைத்திரியை அடமானம் வைத்துவிட்டனர்.

ஜனாதிபதி ஒருவருக்கு உள்ள சர்வாதிகார மையத்திலே இருந்துகொண்டு ஆட்சிசெய்யவே எல்லா அரசியல் தலைவர்களும் விரும்புகின்றார்கள். அதற்காக நான் பதவிக்குவந்தால் ஜனாதிபதி முறைமையை இல்லாது ஒழிப்பேன் என்றுகூறி பதவிக்கு வருபவர்கள், வந்தவர்கள், பின்பு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மறந்துவிடுவார்கள். இதுதான் இந்த நாட்டிலே நடைபெற்றுவரும் ஒன்றாகும்.

இந்த சர்வாதிகாரமுள்ள ஜனாதிபதி முறையினைக் கொண்டுவந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர்தான். இந்த யானைக் கட்சிதான் இதற்கு சொந்தக்காரர்களும்கூட. தாங்களே சர்வாதிகார முறையை நாட்டிலே அறிமுகம்செய்து நாட்டையும், அரசியல் அமைப்பையும் கேள்விக்குறியாக்கிவிட்டு இப்போது மட்டும் இந்த முறையினை நீக்கவேண்டும் என்று கூக்குரலிடுவது வேடிக்கையானது.

1977ஆம் வருடம் நடைபெற்ற தேர்தலில் முதல் ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நாடாளுமன்றில் ஐந்தில் நான்கு அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றியீட்டினார். இந்த வெற்றியினை கருவியாக வைத்து 1978ஆம் ஆண்டு அவரால் கொண்டுவரப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின்மூலம் நாடாளுமன்றுக்கோ, அன்றி நீதிமன்றுக்கோ வகை சொல்லாத சர்வ அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையினை உருவாக்கினார்.

இந்த முறை நாட்டுக்கு ஒத்துவராத ஒன்று என்று சிறிமா பண்டாரநாயக்கா, கொல்வின் ஆர்.டீ.சில்வா, ஜே.வி.பி.-யின் முன்னாள் தலைவர் றோகண விஜேயவீர, அனுரா பண்டாரநாயக்கா போன்றோருடன் இரண்டு தடவை ஜனாதிபதியாக இருந்து இப்போது மூன்றாவது தடவையாகவும் போட்டியிடும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கடுமையாக எதிர்த்தனர். இருந்தும் யார் எதிர்த்தும் ஒன்றுமே செய்ய முடியாமல்போனது.

ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவும் தன் தலைமையிடம் குவிந்துள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அமைச்சர்களைக்கூட அடக்கி ஒடுக்கி ஆட்சிசெய்தார்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டுவரப்பட்ட சர்வாதிகார ஜனாதிபதி முறை 1994ஆம் ஆண்டு பொதுசன ஐக்கிய முன்னணியினை தொடங்கிய சந்திரிக்காவிடம் போய்ச் சேர்ந்துகொண்டது.

ஆனாலும் 1994ஆம் வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக காமினி திசாநாயக்கா தெரிவுசெய்யப்பட்டு சந்திரிகாவுடன் போட்டியிட்டார்.

சந்திரிகா தேர்தலில்வென்று ஜனாதிபதி முறையினை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்தால் தானும் கட்சியும் ஆதரிப்போம் என்று பகிரங்க அறிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி வேட்பாளரான சந்திரிக்காவும் தான் வென்றால் ஜனாதிபதி முறையினை ஒழிப்பேன் என்று சொல்லியே வாக்குக் கேட்டார். சந்திரிக்கா உண்மையில் ஜனாதிபதி ஆட்சிமுறையினை ரத்துச் செய்வாரேயானால் தான் ஜனாதிபதி வேட்பாளர் பணியிலிருந்து வாபஸ் பெறுவதாக மக்கள் விடுதலை முன்னணி வேட்பாளர் நிகால் கலப்பதி கூறினார்.

1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்பு தான் ஜனாதிபதி முறையினை ரத்துச்செய்வேன் என்று எழுத்து மூலம் உறுதியளித்தார்.

ஆனாலும் ஜனாதிபதியாகியவுடன் எழுத்துமூலம் வழங்கிய வாக்குறுதியினைக் கூட சந்திரிக்கா மறந்துபோனார்.

நாட்டு மக்களுக்கும் கட்சிகளுக்கும் எழுத்துமூலம் உறுதிமொழி வழங்கிய சந்திரிக்காவுக்கு உண்மைத் தன்மை இருந்திருந்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் 1994ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதி முறையினை ஒழித்துக் கட்டியிருக்கவேண்டும். ஆனாலும் சந்திரிக்கா அந்த அதிகார முறையினை அனுபவிக்க எண்ணினார். தன்னிடம் அதிகாரம் இருந்தபோது அன்று செய்ய மறுத்த சந்திரிக்கா இன்று ஜனாதிபதி முறையை 100 நாட்களில் ஒழிப்பேன் என்று சொல்கின்றார். இது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமா??

இவையெல்லாம் வெறும் சுத்துமாத்து. மக்களை ஏமாற்றும் அரசியல் நாடகம். இதனை வாக்களிக்கப் போகும் மக்கள் கட்டாயம் புரிந்துகொள்ள வேண்டும்.

உண்மையை உழைக்க இன்று எந்த அரசியல்வாதிகளும் முன்வருவதில்லை. ஆனாலும் சந்திரிக்காவும், மைத்திரியும், ரணிலும் மூவரும் சேர்ந்து சர்வதேச சதி வலையில் சிக்கிக்கொண்டு சர்வதேச அட்டவணைப்படி இலங்கையிலே ஆட்சி மாற்றம் ஒன்றைக் கொண்டுவர முயற்சிக்கின்றனர் என்பதே உண்மையான நிலைப்பாடாகும்.

சந்திரிக்கா சொல்வதைப்போல நூறு நாட்களில் ஜனாதிபதி முறையினை ஒழிக்கமுடியாது. இதுவே உண்மை. ஏற்கனவே 1995ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் திகதிக்குமுன் ஜனாதிபதி முறையை நீக்குவேன் என்று எழுத்துமூலம் கொடுத்தே ஏமாற்றியவர். மீண்டுமொரு தடவை ஏமாற்ற முனைகின்றார்.

எப்படியாவது ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்று துடிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி பொய்யையும், புரட்டையும் சொல்லி மக்களை நம்பவைக்க முனைந்து நிற்கின்றது.

ஒருவேளை மைத்திரி வென்றுவிட்டார் என்று வைத்துக்கொண்டால் அவரும் சர்வாதிகாரமுள்ள கதிரையினைவிட்டு ஒருபோதும் இறங்கவேமாட்டார். இறங்கப் போவதுமில்லை. தானும் அதிகாரத்தை அனுபவிக்கவே பார்ப்பார். ஏனென்றால் இதற்கு முன்னரும் ஒழிப்பேன், ஒழிப்பேன் என்று ஆட்சிப்பீடமேறியவர்கள் விட்டு விலகினார்களா? இல்லையே.

எனவே இவர்களின் 100 நாள் திட்டம் வெறும் சுத்துமாத்து. இதைவிட மைத்திரியின் பாதையில் போய் பார்ப்போமானால், அவர் வென்று நூறு நாட்களில் ஒழிக்க முடியாது.

ஏனென்றால், இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டவிதிகளின் பிரளயம், ஒரு நடைமுறையிலே இருக்கின்ற ஒரு விடயத்தினை அதுவும் சர்வதேச மட்டத்தில்கூட பேசப்படக்கூடிய, பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற விடயத்தினை மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலமின்றி மாற்றமுடியாது.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்து 2015 ஜூன், ஜூலை அளவிலேயே நாடாளுமன்றத் தேர்தலினை எதிர்பார்க்கலாம். அவ்வாறு தேர்தல் நடைபெற்று மைத்திரி அணி வெற்றிபெற்று (அதுவும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன்) சட்டமூலத்தை நிறைவேற்ற காலம் எடுக்கலாம். அப்போது 2015ஆம் ஆண்டு ஓகஸ்டையும் தாண்டிவிடும். அப்படியானால் தை முதல் ஆவணி வரையான எட்டுமாத காலப்பகுதியில் சுமார் 240 நாட்களை எட்டியும் விடலாம்.

எனவே, மைத்திரி சொல்லும் திட்டம் 100 நாள் என்பது மக்களை ஏமாற்றும் அரசியல் என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது. இது இவ்வாறிருக்கும்போது மைத்திரிக்கும் பொது எதிரணிக்கும் மூன்றில் இரண்டு பலம் கிடைக்குமா? என்பது அடுத்துவரும் கேள்வி.

பொது எதிரணியின் முதல் கோணலே முற்றும் கோணலாகி உள்ளது. ஆக சந்திரிக்காவும், ரணிலும் சேர்ந்து நாட்டையும் மக்களையும் ஏமாற்ற முயல்கின்றனர் என்பதே உண்மையாகும்.

நிலைமை இவ்வாறிருக்கும்போது இப்போதைய ஜனாதிபதி வேட்பாளரும் லேசுப்பட்டவரல்ல. ஏனென்றால் ஏற்கனவே இரண்டு தடவைகள் நாட்டின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியினை நீக்குவேன் என்று சொல்லியே ஆட்சிக்கட்டில் ஏறினார்.

ஆனாலும் அவருடைய காட்டிலே அடை மழை பொழிவதுபோல நாட்டின் யுத்தம் உச்சமடைந்தமை, மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வு என்று. இருந்தமையினால் இப்பிரச்சினையை நாட்டு மக்கள் பெரிதுபடுத்தவில்லை. அரசியல்வாதிகளும் அவ்வப்போது அறிக்கைகள்விட்டதுடன் அடக்கியும் வாசித்தனர். இத்துடன் நாட்டின் போரினையும் முடித்துவைத்தமையினால் பெரும் புகழுக்கு உரியவராக வலம் வந்தமையால் முன்னர்கூறிய இரண்டு கண்டங்களிலிருந்தும் காப்பாற்றப்பட்டார்.

ஆனால், இப்போது மூன்றாவது தடவையிலான போட்டிக்காக அவர்மீது கண்டன எறிகணைகள் வீசப்படுகின்றன. இவை எல்லாம் அரசியலில் சகஜம் என்று கருதினாலும் இப்போதைய ஜனாதிபதி மேற்கொண்ட சில நடவடிக்கைகள் நிறைவேற்று ஜனாதிபதியிடம் இருக்கக்கூடிய அதிகாரங்களை பயன்படுத்தியமையே பாரதூரமான பின் விளைவுகளை உண்டாக்கியது.

* 18 ஆவது அரசியலமைப்பினை மாற்றியது.

* நீதித்துறையின் பிரதம நீதியரசரை நீக்கியமை.

*சரத் பொன்சேகாவை சிறையிலே தள்ளியமை.

போன்ற விடயங்கள் முற்றுமுழுதாக நிறைவேற்று ஜனாதிபதி முறையின் மூலம் செய்யப்பட்டவையாகும்.

எனவேதான் நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவேண்டும் என்பது சந்திரிக்கா, ரணில், மைத்திரி எவருக்கும் விருப்பமில்லை. ஆனாலும் ஆட்சிக் கட்டில் ஏறவேண்டுமாயின் மக்களை ஏமாற்றவேண்டுமாயின், இதுதான் சந்தர்ப்பம் என்று எண்ணியே நிறைவேற்று ஜனாதிபதிமுறை நீக்கப்படல் வேண்டும் என்று கூறுகின்றனர்.

இவ்வாறு கருதும் அரசியல்வாதிகள் நாட்டின் இனப்பிரச்சினை தீரவேண்டும் என்று ஒருபோதுமே எண்ணவில்லை. நான் ஆட்சிக்குவந்தால் அது செய்வேன், இது செய்வேன் என்றெல்லாம் கூறும் மைத்திரிபால சிறிசேனா தமிழருக்கு சமஷ்டி ஆட்சிகூட தரமாட்டேன் என்று பகிரங்கப்படுத்தி கூறியள்ளார். தமிழர்களின் வாக்குகள் வேண்டும் என்று கருதும் மைத்திரி கூட்டணி தமிழுக்கு எதுவுமே தரமாட்டேன் என்று சொல்லும் போது மைத்திரிபால சிறிசேனா ஜனாதிபதியாக வந்தாலும் எங்களின் பிரச்சினையை ஒருபோதுமே தீர்க்கமாட்டார். தீர்க்கப்போவதுமில்லை.

இவ்வாறு மைத்திரியின் கூட்டணி அறிவித்துவிட்டபோதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக் கூத்தாடிகள் மைத்திரியின் பக்கமே போய் நிற்கின்றனர். ரணிலை ஒருபோதுமே ஆதரிக்கமாட்டோம் என்று சம்பந்தன் சறுக்கி விழுந்து அறிக்கைவிட்டார்.

கூட்டமைப்பு என்பது கொள்கையற்றவர்கள் என்பது இதன்மூலம் சாத்தியமாகி உள்ளது. எது எப்படியோ இனப் பிரச்சினை தீரவேண்டும் என்று தமிழர் தரப்பு எண்ணாமல் ஆட்சி மாறவேண்டும் என்று மட்டுமே எண்ணுகின்றனர்.

மைத்திரியின் ஆட்சி அமைந்தால் அவருடனும் பேச்சுவார்த்தை என்று காலம்தள்ளி மீண்டும் ஒரு ஐந்தாறு வருடங்களைக் கடத்தவே கூட்டமைப்பு முனைகின்றது! இதையெல்லாம் வாக்களிக்கப்போகின்ற மக்களே உணர்ந்துகொள்ள வேண்டும்.

எந்த தலைவர் ஆட்சி அமைத்தாலும் நிறைவேற்று ஜனாதிபதி முறை நீக்கப்படல் வேண்டும் என்பது மக்களின் விருப்பு வெறுப்புக்களையும் அறியவேண்டும். அத்துடன் சர்வஜன வாக்கெடுப்பு முறை மூலம் மக்களின் விருப்பு வெறுப்புக்களையும் அறியவேண்டும். அத்துடன் சர்வஜன வாக்கெடுப்பு முறை மூலம் மக்களின் கருத்தினை அறிந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுதான் சாத்தியமான பாதை.

இதைவிட்டு நான் ஆட்சி அமைத்தால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவேன் என்பதெல்லாம் பொய் நாடகமே தவிர. ஒருபோதுமே நிறைவேற்று ஜனாதிபதி முறை நீக்கப்படமாட்டாது. இதுவே சத்தியமான உண்மை.




மார்கழிக்குளிரில்
மாட்டுத் தொழுவில்
மாபரன் யேசு
மகவாய்ப் பிறந்தார்!

மண்ணிலே பாவம்
மலையெனக் குவியவே
விண்ணின்று தேவன்
இறங்கியே வந்தார்!

வானவர் வாழ்த்த
ஆயர்கள் போற்ற
ஞானியர் வணங்க
ஞாலமே வியக்க

மாமரி மடிதனில்
மழலையாய்த் தவழ்ந்தார்!
பாரினை மீட்கவே
பாலனாய்ப் பிறந்த

பரமன் யேசுவின்
பதமலர் பணிவோம்!
பாவங்கள் கரைப்போம்
பரகதி அடைவோம்!

# பாலன் பிறந்தார்!



பாப்பா முரசு சிறுகதை



## வாரம் ஒரு திருக்குறள்

**கேள்வி 414**

**கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாந் துணை.**

நூல்களைக் கற்காவிட்டாலும், கற்றவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டால் அது நடை தளர்ந்தவனுக்கு உதவிடும் ஊன்றுகோலைப் போலத் துணையாக அமையும்.

# பேராசைக்காரன்

முல்லாவும், அவரது நண்பரும் பாதிப் பாதி பங்கு எடுத்துக்கொள்வது என்ற ஒப்பந்தத்தின் பேரில் தென்னை மரம் ஒன்றை வளர்த்துவந்தனர். அந்த மரம் நன்றாகக் காய்க்கத் தொடங்கிவிட்டது. முல்லாவிடம் அவரது நண்பர், முதல் பாதிப்பங்கை எடுத்துக்கொள்ளும் உரிமை என்னுடையதுதானே, மீதிப் பாதியைத்தானே உங்களுக்கு நான் தரவேண்டும் என்றார்.

அதற்கு முல்லா, ஆமாம் அப்படித்தான் என்றார். உடனே முல்லாவின் நண்பர் பேராசைகொண்டு, விளைந்துள்ள காய் களை நாம் பங்கிட்டுக்கொள்ள வேண்டாம். வேர்ப்பகுதியிலிருந்து நடுமரம்வரை உன் பங்கு, அதற்குமேல் காய்க்கின்ற மேல் மரம் என் பங்கு.

இதுதான் நான் பிரிக்கும் பாதிப் பாதி பங்கு முறை' என்றார். முல்லாவும் வேறு வழியின்றி ஒப்புக்கொண்டார். அந்தச் சமயம் தேங்காய்கள் நன்றாகக் காய்த்திருந்தன. அதைப் பறிப்பதற்காக, நண்பர் மரத்தின் மேல் ஏறினார். இந்த வாய்ப்புக்காகக் காத்திருந்த முல்லா கோடரியால் அம்மரத்தை வெட்டத் தொடங்கினார். இதைக் கவனித்த மரத்தின் மேலிருந்த நண்பர், முல்லா உமக்கென்ன பைத்தியமா? ஏன் அடிமரத்தை வெட்டுகிறீர் என்று கேட்டார்.

அதற்கு முல்லா, எனக்குரிய பங்கை நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். அதைக் கேட்க நீ யார்? என்று சொல்ல, உடனே



மரத்தில் இருந்த நண்பர் பயந்துபோய், விளைந்த தேங்காய்களை, ஆளுக்குப் பாதி பாதி எடுத்துக்கொள்வோம் என்று சமாதானத்திற்கு வந்தார். அப்படி வா வழிக்கு என்றார்' முல்லா.

# விடுகதைகள்

1. உச்சியில் பச்சை ரிப்பன், உடம்பெல்லாம் வரிகள், உள்ளே தேன் சாறு. அது என்ன?
2. யாரோ கிள்ள இங்கே சத்தம், கையில் எடுக்க சத்தம் நிற்கும. அது என்ன?
3. காதுண்டு தோடில்லை ஜிமிக்கியில்லை, வாயுண்டு நாக்கெச்சில் பற்களில்லை, வாய்க்குள்ளே பொருட்களுண்டு வாய்திறந்து எடுக்கலாமே. அது என்ன?
4. தண்ணீரே தங்கும் தட்டு, தண்ணீரே தங்காத்தட்டு. அது என்ன?
5. குச்சிப்பெண் தலைமயிரில் பல வண்ணம் குழைக்கிறாள், குழைத்தெடுத்த வண்ணத்தை வெண்பட்டில் விரிக்கிறாள். அது என்ன?
6. மைக்குழம்பு குடித்துவிட்டு மொழிகளாக உமிழ்ந்திடுவேன். அது என்ன?
7. பெட்டிக்குள்ளே பச்சை முத்துக்கள். அது என்ன?
8. விரல் பிடித்த வெள்ளைப் பொடி வீதியெல்லாம் அலங்காரம். அது என்ன?
9. கையில் எடுத்த கட்டி, தினம் கொஞ்சம் கரையும் கட்டி, உடம்பெல்லாம் மணக்கும் கட்டி. அது என்ன?

## விடைகள் :

| | |
|---|---|
| 1)கரும்பு | 2)செல்போன் |
| 3)பை | 4)தாமரை இலை |
| 5)பிர் | 6)பேனா |
| 7)பட்டாணி | 8)கோலப்பொடி |
| 9)சோப்பு | |

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 05.01.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1076**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1074**

சி.டிலக்ஷன்,
சோதி வேம்படி வீதி, மானிப்பாய்.
பரிசுக்குரியவர்: 1074

பாராட்டுக்குரியவர்கள்

01. ப.தாரணி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
02. க.கவிந்தா, புலோலி தெற்கு, புலோலி.
03. சு.சாருஜன், மாசார், பளை.
04. செ.நஸ்மியா, முஸ்லிம் தெரு, யாழ்ப்பாணம்.
05. மு.சர்மி, ஜின்னாநகர், திருகோணமலை.
07. வ.யஸ்மி, பிரதான வீதி, நுவரெலியா.
08. அ.பிரிந்தன், நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.

# கிறிஸ்மஸ் தகவல்கள்

✝ கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் டிசம்பர் 25ஆம் திகதி என்று கி.பி.350-இல் தான் ஆரம்பிக்கப் பட்டது.

✝ கிறிஸ்துமஸ் வாழ்த்தை தபால் தலையாக வெளியிட்ட முதல் நாடு கனடா.

✝ கிறிஸ்துமஸ் தாத்தாவின் படத்தை முதன்முதலாக வரைந்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த தோமஸ் நோஸ்ட் என்பவர்.

✝ 1880ஆம் ஆண்டு வரை அமெரிக்காவிலும் 1992ஆம் ஆண்டு வரை ரஷ்யாவிலும் கிறிஸ்துமஸ் தினத்திற்கு அரசு விடுமுறை கிடையாது.

✝ முதல் கிறிஸ்துமஸ் குடிலை 1722ஆம் ஆண்டு பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த பிரான்ஸ் அரசிதான் அமைத்தார்.

✝ பிரேசில் நாட்டில் கிறிஸ்துமஸ் தாத்தாவை பாப்பா நோயல் என்றும் பிரான்ஸ் நாட்டில் பியர்நோயல் என்றும் இங்கிலாந்தில் பாதர் கிறிஸ்துமஸ் என்றும் அழைக்கிறார்கள்.

✝ கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை 1843ஆம் ஆண்டு சர்ஹென்றி கோல் என்பவரால் முதன்முதலில் அனுப்பப்பட்டது.

✝ 1929ஆம் ஆண்டு எட்டாம் எட்வேர்ட் மன்னருக்கு அளிக்கப்பட்ட வாழ்த்து அட்டைதான் உலகிலேயே மிகச்சிறியது.

## உண்மைத் தொடர்

அதிர் இடி 70

செக்ஸ் என்பது தாகத்திற்காக அவசரத்தில் தண்ணீர் குடிப்பது மாதிரி இருந்தால் சுவையாக இருக்காது. சுகமாகவும் இருக்காது. செக்ஸ் அணு அணுவாக ரசனையுடன் - ரசனையான பொழுதொன்றில் வெகு இயல்பாக அனுபவிக்க வேண்டியது! என்றாள்.

இனி...



பகாயா அவனுக்கு நம்பிக்கை தரும்விதமாக உற்சாகமாகப் பேசினாள்.

செக்ஸ் என்பது தாகத்திற்காக அவசரத்தில் தண்ணீர் குடிப்பது மாதிரி இருந்தால் சுவையாக இருக்காது. சுகமாகவும் இருக்காது. செக்ஸ் அணு அணுவாக ரச்னையுடன் ரசனையான பொழுதொன்றில் வெகு இயல்பாக அனுபவிக்க வேண்டியது! என்றாள்.

என்றவள். இன்னொன்றையும் சொன்னாள்.

எனக்கு ஆண்கள் இப்படி அவசரப்படுவது பிடிக்காது!

சட்டென்று அவளை விட்டு விலகினான்.

என் கடமைதானே அது. உங்கள் புகழ்ச்சிக்கு நன்றி என்றாள் பகாயா.

பகாயாவின் நாகரிகமான பேச்சும். புத்திசாலித்தனமும் அமீனை கவர்ந்துவிட்டது. அவளைப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும்போது இருந்தது.

தன் மனதில் உள்ளதை அவளிடம் மறைக்காமல் கூறிவிட நினைத்தான். பகாயா உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. என் மனம் முழுக்க நிரம்பிக் கொண்டிருக்கிறாய் என்றான்.

பேச்சு விபரீதமான திசைக்கு செல்வதை உணர்ந்த பகாயா அமீனை திசை திருப்புவதற்காக முன்னாள் வெளிநாட்டமைச்சரின் மரணம் தொடர்பாகத்தான் ஐ.நா. சபையில் பலரும் விசாரித்தனர். அநேகமானோர் சந்தோசப்

அழகான பெண்கள் பொய் சொன்னால்கூட செவியில் ஏறுகிறது. என்னை மாதிரி ஆண்கள் உண்மை சொன்னாலும் எவரும் நம்ப மறுக்கிறார்கள் கடகடவென்று சிரித்தான் அமீன்.

பொய்யா?. என்ன பொய்? என்றாள் ஒன்றும் தெரியாதது போல.

அழகான பெண்கள் பொய் கூறலாம். அழகான பெண்களிடம் பொய் கூறக்கூடாது என்று சிரித்தவன் சொன்னான் முன்னாள் வெளிநாட்டமைச்சர் மைக்கெல் ஒண்டேகாவை கொன்றது நான்தான். திமிர் பிடித்தவன் அவன். இந்த அமீனை பகைத்துக்கொண்டு உயிர்வாழலாம் என்ற தப்புக் கணக்குப்போட்டான். அவன் கணக்கையே முடித்துவிட்டேன் என்று சிரித்தான். பயங்கரமான கொலைகாரச் சிரிப்பு.

பகாயாவுக்கு முன்னரே தெரயும் என்றாலும். புதிதாக அறிந்து கொள்வதுபோல ஆச்சரியக்குறி காட்டினாள். அவன் ஆச்சரியப்படும் அழகை உள்ளூர இரசித்தான் அமீன்.

அவளுக்கும் தன்னிடம் ஒரு பயம் இருக்கவேண்டும் என்பதற்காகவே அமீன் அந்த

அற்புதன் எழுதிய

# இடி அமீன்

**நாடு** திரும்பியதும் உங்கள் பணியில் இருந்து என்னால் நீக்கப்படுவீர்கள்!

நாடு திரும்பியதும் ஒருநாள் ஓய்வெடுத்துவிட்டு அமீனின் அலுவலகத்திற்குச் சென்றாள்.

அங்கு அதிர்ச்சியான சம்பவங்கள் காத்திருந்தன.

எலிஸபெத் பகாயா நாடு திரும்பியதும் அமீன் உடனடியாக அழைப்புவிடுத்தான். ஆனாலும் பகாயா ஓய்வெடுத்து தாமதித்தே சென்றாள்.

பகாயா எதிர்பாராதவிதமான வரவேற்பு அமீனின் அலுவலகத்தில் காத்திருந்தது. பகாயாவை திக்குமுக்காடச் செய்யவேண்டும் என்பதற்காக அமீன்செய்த ஏற்பாடுதான் எல்லாம் என்பது பகாயாவுக்குத் தெரியும்.

அமீன் தன்னை வேட்டையாட மிக ஆவலாக உள்ளான் என்பதை உணர்ந்து. அதற்கேற்ப எப்படி நடந்துகொள்வது என்பதையும் மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

அமீன் பிரமாண்டமான அலுவலக அறைக்குள் புகுந்ததும். அமீன் முகமெல்லாம் பல்லாக அவளை வரவேற்றபடி எழுந்துவந்தான்.

பகாயாவுக்குள் எச்சரிக்கை மணி ஒலித்தது. உசாரானாள். ஒப்புக்காக புன்னகைத்தாள். அடுத்து அமீன் என்ன செய்யப் போகிறானோ? என்று படபடப்புடன் நோக்கிக் கொண்டு இருந்தாள்.

நெருங்கிவந்த அமீன் அவளை ஆரத்தழுவினான். மரியாதை கலந்த தழுவல் என்பதால் மறுக்கவும் முடியவில்லை. மறுப்பது புத்திசாலித்தனமும் இல்லை என்பதால் அனுமதித்தாள்.

கன்னத்தில் முத்தமிட்ட அமீன். அவள் அதற்கு அனுமதித்ததை இணக்கமாகக் கருதி. அவள் முகத்தை தன் இரு கைகளிலும் ஏந்தினான்.

அடுத்த வினாடியே அவளின் மென்மையான இதழ்கள் அமீனின் முரட்டுத்தனமான உதடுகளால் கவ்வப்பட்டன.

பகாயா திமிறியிருக்கலாம். தன் முகத்தை பின்னே இழுத்திருக்கலாம். திமிறவில்லை. இழுக்கவில்லை.

அவள் மரக்கட்டைபோல் நின்றாள். அவள் முதுகை வருடிய அமீனின் கரம். அப்படியே கிழிறங்கியது.

இங்கு வேண்டாம். இன்று வேறு நான் களைப்பா இருக்கிறேன் என்றாள் பகாயா.

வேறு எங்கு வேண்டும். என்றான் கையை அகற்றாமலேயே.

அமீன். நான் இதுவரை சந்தித்தவர்களில் வித்தியாசமான பெண் நீதான்! என்றான்.

வித்தியாசமாக இருக்கத்தான் எனக்கும் விருப்பம் என்றாள்.

தன் கதிரையில் சென்றமர்ந்து கொண்ட அமீன். அவளை அமருமாறு கைகாட்டியபடியே மிக மென்மையான இதழ்கள் அதற்கு நேர்மாறான மிகக் கடினமான இதயம் என்று சிரித்தான்.

பெண்களை மென்மையானவர்கள் என்று எண்ணித்தான் ஆண்கள் பலர் ஏமாறுகிறார்கள். தம் இஸ்டம்போல ஆட்டுவிக்கிறார்கள் என்றாள்.

அந்தப் பலரில் நானும் உண்டா என்று கேட்டான் அமீன்.

'இல்லை' என்று கடைந்தெடுத்த பொய்கூறிச் சிரித்தாள்.

அந்தப் பொய்யை இன்பமாக இரசித்தான் அமீன்.

ஐ.நா. சபையில் எமது நாட்டுக்காக நீ ஆற்றிய சேவைக்காக நன்றி என் நம்பிக்கையை காப்பாற்றிவிட்டாய். உகண்டாவின் எதிரிகள் முகத்தில் கரிபூசிவிட்டாய் என்று புகழ்ந்தான்.



பார்வையோடுதான் கேட்டனர் என்றாள்.

நீ அவர்களுக்கு என்ன பதில் கூறினாய் என்ற கேட்டான் அமீன்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கொன்றுவிட்டனர் என்று சொன்னேன் கூறிவிட்டு அமீனின் முகத்தை உற்றுநோக்கினாள்.

"பொய் சொன்னதற்கு நன்றி.

உண்மையைச் சொன்னால் பகாயா விடைபெறும்போது அமீனுக்கு இன்னொரு தடவை அவளை முத்தமிடவேண்டும் போலிருந்தது.

அமீன் எழுந்தபோது. திடீரென்று பகாயா அந்தக் கோரிக்கையை தூக்கிப் போட்டாள்.

**(தொடரும்)**

---

வாசக நெஞ்சங்களே!

**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 605

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| 25 | | 27 | | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 603 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 மா | 3 வா | 4 சை | | 6 மா |
| 7 ம் | 8 அ | 9 க | | 11 ஏ | 12 ன் |
| 13 ச | 14 ன் | 15 பா | | 17 ணை | 18 பு |
| 19 பா | 20 னு | 21 ம | 22 தி | | 24 க் |
| 25 த | | 27 ம் | 28 ச | 29 ல | 30 க |
| 31 ம் | 32 தே | | 34 வு | 35 சா | 36 ர் |

### இடமிருந்து வலம்

01. "...... திருவள்ளுவர் கவிதைக்கு கம்பன்" என்பர்.
07. அடையாளம்; பத்து நூறாயிரம் (குழம்பியுள்ளது)
13. பிரார்த்தனைக்காக முதுகுதோழில் கொக்கியைச் செலுத்தி நூல் சேத்த கயிறு. (குழம்பியுள்ளது)
17. சாபமிடு.
19. எரியிரும்பு; கோடாரி (திரும்பியுள்ளது)
22. கொடை ; தருமம். (குழம்பியுள்ளது)
31. சேக்கிழார் எழுதிய பெரியபுராணம் என்னும் நூல் தமிழ் மக்களைத் ...... தான் முக்கிய குறிக்கோள்.

### மேலிருந்து கீழ்

01. எழுதாவெழுத்து.
02. அணை ; தடுப்பு (குழம்பியுள்ளது)
03. அழிவு. (குழம்பியுள்ளது)
04. ஹிந்தியில் ஸ்ருதிஹாசன் நடித்த முதல் திரைப்படம் (திரும்பியுள்ளது)
05. சீடன். குருவுக்கு கொடுப்பது. (குழம்பியுள்ளது)
18. பூமி. (குழம்பியுள்ளது)
27. சத்வகுணமுடையவன்.

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **05.01.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 605
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167. யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 603 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

றொ.றெஜினா, தாளையடி, செம்பியன்பற்று.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. என்.தவநாதன், அரியாலை, யாழ்ப்பாணம்.
02. எவ்.இம்ராம், தர்ஹாநகர்.
03. க.சர்மிலன், வரணி இயற்றாலை, வரணி.
04. ப.பாவனா, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
05. ந.கவிராஜ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
06. யோ.மாளவிகா, பரந்தன், கிளிநொச்சி.
07. நு.ஹஸ்மியா, முஸ்லிம் தெரு, யாழ்ப்பாணம்.
08. சௌ.முருகானந்தன், பிரதான வீதி, காலி.
09. ச.லக்கியா, செமனரிவத்த றோட், பேராதனை.



நகலபுரம்

## அமலாபாலுக்கு தடை!

நடிகை அமலாபால் இனிமேல் எந்த ஒரு விளம்பரப்படத்திலும் நடிக்கக்கூடாது என எர்ணாகுளம் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. நடிகை அமலாபால் கொச்சியில் உள்ள மில்லியனியம் ஜுவல்லரி விளம்பரத்தில் நடிப்பதற்காக ரூ.30 லட்சம் பெற்றுக்கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்தி திட்டுள்ளார். ஆனால் பின்னர் திடீரென திருமணம்செய்து கொண்ட அமலாபால் திருமணத்திற்கு பின்னர் ஜுவல்லரி விளம்பரத்தில் நடிக்காமல் இழுத்தடித்துக்கொண்டே வந்தார். இந்நிலையில் மில்லியனியம் ஜுவல்லரி நிர்வாகத்தினர் அமலா பால் மீது வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரணை செய்த எர்ணாகுளம் நீதிமன்றம் அமலாபால் இனிமேல் எந்த விளம்பரத்திலும் நடிக்கக்கூடாது எனத் தடை விதித்துள்ளது.



வை ராஜா வை

## ஒற்றை படத்தில் 17 பாடல்கள்!

50 வருடங்களுக்கு முன்னர் ரிலீஸான தமிழ் திரைப்படங்களில் 20-க்கும் மேற்பட்ட பாடல்கள் உள்ள திரைப்படங்கள்தான் வெளி வந்தன. ஆனால் காலம் மாற மாற பாடல்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்து தற்போது ஒரு படத்தில் சராசரியாக ஐந்து பாடல்கள் மட்டுமே உள்ள நிலை உள்ளது. இந்நிலையில் ஒரே படத்தில் 17 பாடல்கள் உள்ள திரைப்படம் ஒன்று தயாராகி வருகிறது. இந்த படத்தின் பெயர் 'வானவில் வாழ்க்கை' ஜேம்ஸ் வசந்தன் இயக்கி இசையமைக்கும் இந்த படத்தில் முற்றிலும் புதுமுகங்களே நடிக்கின்றனர். இரண்டு கல்லூரி இசைக்குழுக்களுக்கு இடையே நடக்கும் போட்டிதான் படத்தின் மையக்கரு. இசைக்குழுக்களில் இருப்பவர்கள்தான் படத்தின் முக்கிய கதாபாத்திரங்கள். இந்த படத்தில் நடிக்கும் நடிகர்களே பாடல்களும் பாடியிருக்கின்றனர் என்பதும் ஒரு புதுமை ஆகும்

ஹொலிவூட்டில் இவ்வகையாக மியூசிக்கல் திரைப்படங்கள் அதிகம் வெளிவரும். ஆனால் தமிழ் ரசிகர்களுக்கு இதுவொரு புது அனுபவமாக இருக்கும் என்கிறார் ஜேம்ஸ் வசந்தன். இந்த படத்தில் நடித்துள்ள நட்சத்திரங்கள் அனைவரும் நடிப்பு, பாடல், இசைக்கருவி வாசித்தல் எனப் பல திறமை-களை கொண்ட இளமை துள்ளும் நட்சத்திரங்கள். இந்த இளைய திறமைசாலிகள் நிச்சயம் பெரிய அளவில் வளர்ந்து ஜொலிப்பார்கள். இப்படம் பெப்ரவரி 14ஆம் திகதி காதலர் தின கொண்டாட்டமாக வெளிவரும் என்றார் ஜேம்ஸ் வசந்தன்.





## செருப்பு விற்கிறார் இலியானா!

வெ… செருப்புக… இறக்குமதி செய்… வியாபாரத்தில் குதித்துள்… இலியானா. இந்த கடையின் மூலம் அவருக்கு அதிக இல… கிடைப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா ஆகி… நாடுகளில் மிகவும் பிரபலமாக உள்ள இந்த நிறுவனத்தின் கிளை ஒன்றை கோடிக்கணக்கான ரூபாய் முதலீட்டில், இலியானா சமீபத்தில் திறந்துள்ளார். விரைவில் இலியானா இன்னும் ஒரு கிளையை தென்னிந்தியாவில் ஆரம்பிக்க உள்ளாராம். எந்த நகரில் ஆரம்பிப்பது என்பது குறித்து அவரது உதவியாளர்கள் ஆய்வுசெய்து வருகின்றனர்.

## தாரை தப்பட்டையுடன் பாலா!

தேசிய விருது பெற்ற இயக்குனர் பாலா இயக்கும் தாரை தப்பட்டை படத்தின் அடுத்தகட்ட படப்பிடிப்பிற்காக படக்குழுவினர் அந்தமான் செல்ல வுள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுவரு…து. சசிகுமார் நாதஸ்வர வித்வானாக… வரலட்சுமி சரத்குமார் கரகாட்ட… நடனப்பெண்ணாகவும் நடித்து … 'தாரை தப்பட்டை' திரைப்பட… இளையராஜா இசையமைக்கி… இது இவருடைய 1000ஆவ… படம் என்பது குறிப்பிடத்… இந்நிலையில் இந்த பட… சில முக்கிய காட்சி… அந்தமானில் எடுக்… முடிவுசெய்துள்… படக்குழுவின… அந்தமா…

## மிஷ்கினின் பார்வையில் விஜய்!

தமிழ் சினிமாவில் மனதில் பட்டதை தைரியமாக கூறுபவர் மிஸ்கின். இவர் தன் ஒவ்வொரு படைப்பிலும் சினிமாவை அடுத்த கட்டதிற்கு எடுத்துச்செல்வார். இவர் தன் பிசாசு படத்திற்காக டுவிட்டரில் ரசிகர்களிடம் உரையாடியபோது நடிகர் விஜய் பற்றி கூறுங்கள் என்று ரசிகர் ஒருவர் கேட்டார். அதற்கு அவர் "விஜய் ஒரு கடின உழைப்பாளி, அவருடன் கண்டிப்பாக ஒரு படத்திலாவது பணியாற்றுவேன்" என்று கூறியுள்ளார்.



காக்கிச்சட்டை



# சி.பி.யின் இரண்டாம் பாகம்!

நீண்ட இடைவெளிக்கு பின்னர் சிபிராஜ் நடித்த 'நாய்கள் ஜாக்கிரதை' திரைப்படம் நல்ல வசூலை கொடுத்ததால் உற்சாகம் அடைந்துள்ள சிபிராஜ், இந்த படத்தின் இரண்டாம் பாகத்தை வெகுவிரைவில் தயாரிக்கவுள்ளதாக கூறியுள்ளார்.

முதல்பாகத்தை இயக்கிய இயக்குனர் சக்தி சௌந்தர்ராஜன் இரண்டாம் பாகத்தையும் இயக்கவுள்ளார். தற்போது அவர் திரைக்கதையை தயார் செய்து வருவதாகவும் விரைவில் படப்பிடிப்பை தொடங்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது 'நாய்கள் ஜாக்கிரதை' படத்தின் இரண்டாம் பாகத்திலும் முதல் பாகத்தில் நடித்த நட்சத்திரங்களே நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் இரண்டாம் பாகத்தில் சத்யராஜ் கௌரவ வேடத்தில் நடிக்கவுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. வரும் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் படப்பிடிப்பு ஆரம்பமாக உள்ளதாகவும், டிசம்பர் மாதத்தில் படத்தை ரிலீஸ் செய்யவும் திட்டமிட்டுள்ளனர்.




## உடைகிறது நடிகர் திலகத்தின் தியேட்டர்

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு சொந்தமான சாந்தி தியேட்டர் விரைவில் இடிக்கப்பட்டு மல்டிபிளக்ஸ் தியேட்டர் மற்றும் வணிகவளாகமாக மாற இருக்கின்றது. இதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும் எனக் கூறப்படுகிறது.

50 வருடங்களுக்கு முன்னர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சாந்தி தியேட்டரை விலைக்கு வாங்கினார். இங்கு அவர் நடித்த அனைத்து படங்களும் திரையிடப்படும். சிவாஜி வாங்கிய இந்த தியேட்டரை காமராஜர் முதல்வராக இருந்தபோது திறந்துவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இரு தியேட்டர்களாக இருக்கும் சாந்தி தியேட்டர் இடிக்கபபட்டு நான்கு தியேட்டர்கள் மற்றும் வணிக வளாகம் என பிரமாண்டமாக கட்டப்பட இருக்கின்றது.

ரிநாட்டு
ளை
யும்
ளார் நடிகை
ாபம்



## பேங் பேங் திரைவிமர்சனம்

இந்திய இராணுவத்தால் தேடப்படும் பயங்கர குற்றவாளியான உமர் என்பவன் லண்டன் பொலிஸாரிடம் பிடிபடுகிறான். அவனை இந்தியாவுக்கு அழைத்துவர லண்டன் சென்ற இந்திய இராணுவ அதிகாரியை கொலை செய்துவிட்டு தப்பிக்கும் உமர், லண்டனில் இருக்கும் விலையுயர்ந்த கோஹினூர் வைரத்தை திருட மிகப்பெரிய பிளான் ஒன்றை போடுகிறான். அதற்குள் நாயகன் ஹிருத்திக் ரோஷன் அந்த கோஹினூர் வைரத்தை திருடி இந்தியாவிற்கு தப்பிவிடுகிறார்.

இதையறிந்த உமர், அந்த வைரத்தை தனக்கு கொடுத்துவிடு மாறும், அதற்கு பதிலாக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்க தயாராக இருப்பதாகவும் உமர், ஹிருத்திக்கிடம் பேரம் பேசுகிறார். பேரத்திற்கு உடன்படும் ஹிருத்திக் தனக்கு ஐந்து மில்லியன் டாலர் வேண்டும் என்கிறார். உமரும் உடனடியாக ஹிருத்திக் கூறிய வங்கிக்கணக்கில் பணத்தைபோட்டு விட்டு வைரத்திற்காக காத்திருக்கும் நேரத்தில் இன்னும் அதிக பணம் வேண்டும் என ஹிருத்திக் கேட்டதால் எரிச்சலடையும் உமர், ஹிருத்திக்கின் காதலி காத்ரீனா கைபை கடத்துவதற்காக முயற்சி செய்கிறார்.

இதை அறிந்துகொண்ட ஹிருத்திக், காத்ரீனாவை அழைத்துச்சென்று தப்பிக்கின்றார். இந்நிலையில் கோஹினூர் வைரத்தை திருடிய தற்காக ஹிருத்திக்கை பொலிஸ் விரட்டுகிறது. பொலிஸிடம் இருந்தும் வில்லன் உமரிடம் இருந்து ஹிருத்திக் ரோஷன் - கத்ரீனா கைப் ஜோடி தப்பித்தார்களா? என்பதுதான் கதை.

வழக்கம்போல ஹிருத்திக் ரோஷன் தனது அமைதியான ஆனால் அழுத்தமான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். அப்பாவித் தனமான முக அமைப்பு, சுண்டி இழுக்கும் உடற்கட்டு என படம் முழுவதும் ரசிகர்களை திருப்திப்படுத்துகிறார். ஹிருத்திக் ரோஷனின் காதலியாக வரும் கத்ரீனா, இந்த படத்தின் கொஞ்சம் அதிகமாகவே கவர்ச்சியை காட்டி ரசிகர்களை கிறங்க வைத்துள்ளார். ஒரு அதிரடி மசாலா படத்திற்கு தேவையான அனைத்து அம்சங் களையும் கலந்துகொடுத்துள்ளார் இயக்குனர் சித்தார்த் ஆனந்த். இம்மாதிரி படத்தில் லொஜிக் எல்லாம் பார்க்காமல் பொழுது போக்கிற்காக பார்த்தால் படத்தை ரசிக்கலாம்.

வும்,
வரும்
திற்கு
ன்றார்.
து
க்கது.
த்தின்
ளை
க பாலா
தால்
ரை வரும்
ன் தீவிற்கு

செல்லவுள்ளனர். பொங்கல்வரை அந்தமானில் படப்பிடிப்பு இருக்கும் என்றுகூறிய படக்குழுவினர் படத்தின் 75 வீதமான படப்பிடிப்பு முடிந்துவிட்டதாகவும், படத்தை மார்ச் மாதம் வெளியிட திட்டமிட்டுள்ளதாகவும் கூறி வருகின்றனர்.



# பாலன் பிறப்போடு பாவவினை அகலும்



தேவ மைந்தனே
மாதா மரியம்மா
தந்த இறைமகனே
பால் வீதி யெங்கும்
நட்சத்திர தோரணம்
கட்டி பாலகனே
விழித்திருந்துமது
பிறப்பை வரவேற்போம்

மயங்கிய நாங்கள்
உம்மை மறந்த காலம்
போய்... விழித்தெழ
உதய கால தீபமாக
இறைவன் வலப்பாகத்தில்
இருந்திறங்கி வாரும்...!

நிதமும் நினைந்து
உருகி வழிபட
இதமான மார்கழி
தவ நாளில் பிறந்தொருகால்
வந்து காட்சி தாரும்....
குமுத மலரென வந்த
அமுத கலசம் நீரே!

மெசியாவே
தூய நல்லாவி ஆனவரே
அதிசயமானவரே
இரக்கத்தின் யேசுவே
தொழுவ மொன்றமைத்து
தோழமையோடு வரவேற்பேன்
இறைமகனே என் வீடும்
மறை யோதும்
உன்னதாகும்!

ஏழ்மையான இதயம்
கொண்டு ஏழையானவர்
விடுதலைக்காக - குடிலில்
அவதாரமான
குமாரனே - முழு
விடுதலை எப்போது
ஐயனே!

பாவிகள் மனம் திரும்ப
பார் வந்துதித்த
பாலகன் யேசுவே

ஆன்ம விடுதலைக்காக
"பெரும்பாவம்" கூட
மனம் திரும்பும் காலத்திலும்
மானிடம் மறுப்பதேன்?

பொய்மையும் பகைமையும்
போயகல புது விதி செய்வோம்!
வசைகள் இலாத திசைகள்
செல்வோம்!
பிறந்தெழுந்து வாரும்...!!

சிலுவை பாதை
நடந்த செம்மலே
கொலைக்கருவியும்
புனித சிலுவையாம்...
இரத்தம் சிந்தவே...

நிறை மகனே நீர்
முள் முடி உறுத்த
வசைகள் சுமந்ததேன்?
வாசல் தோறும்
வரவேற்றோம்... வரவு சொல்ல
ஆசீர்வாதம் தேவையன்றோ...!

இறையும் பொறையும்
நிறைந்த இறை வாழ்வு
காண இறை மகன்
வருகிறான்... மனிதரே!
மனம் திரும்பும்
நாள் பாருங்கள்!!

பாரினில் வந்தே
பாலகன் பிறப்பதோடு
பாவவினை அகலுமினிப்
பாருங்கள்... ஆமென்...

மண்டைதீவு, மகிழ்நன்.

# ஓலம்!

இறந்த பிணங்களின் நடுவில்
தேடுகிறார்கள்.... தேடுகிறார்கள்
குழந்தையை...
காப்பாற்றப் போன தாய்
மனைவியைக்
காப்பாற்றப்போனே... கணவன்
இன்னும்... இன்னும்
காப்பாற்றப் போனவர்களும்
கரைநோக்கி ஓடிவந்தவர்களும்
காணவில்லை... காணவில்லை!
கடலில்... மீன்பிடிக்கப்
போன... கணவர்கள்
வருவார்களா... மாட்டார்களா
தெரியவில்லை!
கரையில்... கணவனுக்காக
காத்திருந்த... மனைவிகள்
இருக்கிறார்களா... இல்லையா
தெரியவில்லை
ஒரு வீட்டில் இழவு... விழுந்தால்
ஊர்கூடி... ஒப்பாரியிடும்
இன்று ஊரெங்கும் இழவு... தான்
ஊர் தான் இல்லை...!



வ.குணபாலசிங்கம், நல்லூர்.

# மறக்கமுடியாதது!

கடலே... கடல் அலையே
நீ... கரைவிட்டு சுழன்று ஒதுங்கியே
பதுங்கி... பதுங்கி சீறிச் சினந்தாயே
பரிசாக சின்னா பின்னங்களை தந்தாயே!

நிந்தன் ஆணவம் அகங்காரமாக
நிலைத்த அகம்பாவம் சிருங்காரமாக
வாழ்வியலை சிதைத்து சீர்குலைத்தே
நீ... சிந்தையை மந்தமாக்கி சென்றாயே!

மடி நிறைத்த முத்தும் பவளமும்
மனம் மறைத்த இருளாக மாறி
நீ... காவுகொண்ட உயிர்கள் ஏராளம்
காவிக் கொண்ட உடைமைகள் தாராளம்!

நீ... நிம்மதியற்ற நிலைமைகளை
நிர்ணயம் செய்தே நிகழ்த்திய
நிர்க்கதியின் அவலங்களை
அள்ளிவீசிட்டே அமைதியானாயே!

அந்தோ... அநாதரவான குழந்தைகள்
நிராதரவான பெற்றோர்கள்
சொல்லியடங்கா பரிதவிப்புக்கள்
தந்தே தரணியை தண்டித்தாயோ???

நீ... செய்திட்ட சாகசங்களின் ஏக்கம்
கதி கலங்கிட்ட தாக்கத்தின் சோகம்
காலத்தால் என்றும் அழியாதது
கடைசிவரை மறக்க முடியாதது!



அப்ரார் ஏ.அஸீஸ், யாழ்ப்பாணம்.

# கண்ணீர இருப்பில்லை

அலைகடலே
உன் கரையில் விளையாடியது
குற்றமென
பிஞ்சுகளின்
உயிரோடு விளையாடிவிட்டாய்.

உன் மடியில்
வலை வீசியது குற்றமென
மீனவர்களின்
உயிரை விலை பேசிவிட்டாய்.

குழந்தைகளை பிரித்து
பெற்றோர்களை அநாதையாக்கினாய்
பெற்றோரை பிரித்து
குழந்தைகளை அநாதையாக்கினாய்.

இன்னும் யாரை பிரிக்க
அலை அலையாய்
அலைந்துகொண்டு இருக்கிறாய்?

இங்கு இறப்பதற்கு
இன்னும் தான் மிச்சமிருக்கிறோம்
இறந்தபின் சிந்துவதற்கு
கண்ணீர்தான் இருப்பில்லை...



பிரவீன் குமார் செ

# ஊக்குவிப்பு உன்னதம்



இன்சியானில் நிறைவடைந்த பதினேழாவது ஆசிய விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற இலங்கையின் ஆடவர் மகளிர் அணி அங்கத்தவர்களுக்கு, தாஜ் சமுத்ர ஹோட்டலில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பணப்பரிசில்கள் வழங்கப்பட்டு உள்ளன. ஆடவர் அணி வீரர்களுக்குத் தலா ஏழு லட்சம் ரூபாவும் (இரண்டு இலட்சம் விளையாட்டுத்துறை அமைச்சு + சிறிலங்கா கிரிக்கெட் சபை ஐந்து இலட்சம்) மகளிர் அணி வீராங்கனைகளுக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய்களும் (விளையாட்டுத்துறை அமைச்சும் சிறிலங்கா கிரிக்கெட் தலா ஒரு லட்சம் பங்களிப்பு) பரிசுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளன. உண்மையில் இலங்கை கிரிக்கெட் அணிகள் இரண்டும் பதக்கங்கள் வென்றமை இலங்கைக்கு பெரும் ஆறுதலாகவே அமைந்தது.

ஆண்கள் அணியினர் தங்கப் பதக்கத்தையும், மகளிர் அணியினர் வெண்கலப் பதக்கத்தையும் வென்று எமக்கு மரியாதையை ஏற்படுத்தியிருந்தனர். இந்த நிகழ்வில் உரையாற்றிய விளையாட்டுத்துறை அமைச்சர், அணிவீரர்கள் தமது உச்சக்கட்டத் திறமைகளை வெளிப்படுத்தினர் என்று கூறிவிடமுடியாது. அவர்கள் அணியில் உள்ள சிரேஸ்ட வீரர்களைப் பார்த்து அவர்களிடம் நிறைய விடயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். எது எவ்வாறாயினும் நீண்டகாலம் எடுக்காமல் முடிந்தளவு விரைவிலேயே பதக்கங்கள் வென்று இலங்கையைப் பெருமைப்படுத்திய இலங்கையின் ஆடவர், மகளிர் வீரவீராங்கனைகளுக்கு பரிசில்கள் கொடுத்து கௌரவித்தமை மிகவும் போற்றுதற்குரிய செயல் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

# என்றென்றும் வாழ்க!

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்த சங்கக்காரா, டெஸ்ட் போட்டியில் இருந்து இன்னமும் ஓய்வுபெறவில்லை. ஓரிரண்டு சீசன்கள் விளையாடிய பின் அது பற்றி யோசிப்பேன் என்று கூறியுள்ளார். அதற்கு முன்னதாக தான் இங்கிலாந்தின் கவுண்டி அணியின் சர்ரே

அணியில் இணைந்து விளையாட விருப்பம் கொண்டுள்ளதாகவும். அது தனக்கு ஒரு கனவென்றும், குறிப்பாக முன்னாள் பயிற்றுனர் கிரகாம் போர்ட் அங்கிருப்பதாகவும், அவர் இலங்கை அணிக்கு அற்புதமான உதவிகள் செய்தவர் என்றும், மேலும் தனக்கு அவர் நிறையவே கற்றுத் தந்தவர் என்றும் அவருடன் இணையத் தான் மிகுந்த ஆர்வமுள்ளவராக இருப்பதாகவும் கூறியுள்ளார். கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்றதும் வீட்டுக்குள் இருந்து மற்றவர்களுக்கு உபத்திரம் கொடுத்துக் கொண்டு இருப்பதில் எனக்கு விருப்பம் இல்லை. நான் இங்கிலாந்து சென்று என் திறமைகளை மேலும் வெளிப்படுத்த ஆர்வமாக உள்ளேன் என்றும் கூறியுள்ளார். உலகக் கிண்ணத்தின் பின் சில டெஸ்ட் தொடர்களில் சங்கா விளையாடுவார் என்று கூறுகிறார். ஆனாலும் சர்வதேச மட்டத்தில் ஒரு கிரிக்கெட் வீரராக சங்கக்காரவைப் பார்க்க முடியாவிட்டாலும் இங்கிலாந்து கவுண்டி, ஐ.பி.எல் வேறும் சில நாடுகளின் உள்ளூர் சுற்றுப்போட்டிகளில் இவரைப் பார்க்கமுடியும் என்பது மகிழ்ச்சியான செய்தி. இவர் எங்கு சென்று விளையாடினாலும் அது இவருக்கு மட்டும் பெருமையல்ல. இலங்கைக்கும் பெருமைதான். அப்படிப்பட்ட கௌரவமான மனிதர் இவர்.





# வேண்டாம் போதை

அவர்களும் இதனைக் கண்டு அஞ்சுகிறார்கள். அதாவது நியூசிலாந்து தன் நாட்டின் விளையாட்டுக்கள் மதுபான வகை அனுசரணையாளர்கள்பால் இருப்பதைத் தடை செய்யவேண்டும் என்று அரசு கூறுகிறது. முன்னதாகவே மதுபான அனுசரணைகள் பிரான்சில் விளையாட்டுத்துறையில் தொடர்புபடுத்தப் படுவதைத் தடைசெய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டது.

இத்தகைய அனுசரணைகள் இளம் வயதினரை மிக இலகுவில் மதுப் பழக்கத்துக்கு அடிமைப்படுத்தி விடுவதாகக் கூறுகிறார்கள். நியூசிலாந்து நாட்டில் காணப்படும் இந்த நிலை அக்கறையுடன் கவனிக்கப்படவேண்டியது என்கிறது நியூசிலாந்து. அருந்துவதற்கான ஊக்குவிப்பை விளையாட்டு மைதான மதுபான விளம்பரங்கள் அதிகரிக்கின்றன என்பதோடு, ஒளிபரப்பு போன்றவற்றிலும் கவனம் செலுத்தவேண்டும் என்கிறார்கள்.

இந்தவகையில் 5இல் இருந்து 10 வருட காலத்துக்குள் இத்தகைய விளம்பரங்கள் விளையாட்டில் இருந்து முற்றாக நீக்கப்படும் என்கிறார்கள். இன்னொருபுறம் சிறிய விளம்பர நிறுவனங்கள் விளையாட்டுக் கழகங்கள், மதுபான விளம்பரத் தடைகளால் பாதிக்கப்படும் என்ற அச்சமும் நிலவுகிறது. (பொன் கத்தி என்பதால் மார்பில் குத்திக்கொள்ள முடியாதல்லவா) ஆனாலும் நியூசிலாந்து அரசு இந்த விடயத்தில் கண்டிப்பாகவே இருக்க உத்தேசித்துள்ளது.

இந்த நடைமுறையைக் கொண்டுவருவதால் எதிர்பார்க்கப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அவர்கள் நடவடிக்கை எடுக்கத்தயாராகவே இருக்கிறார்கள். ஆனால் விளையாட்டுக்களின் ஊடாக, மதுவின் ஆசை இளம் மட்டத்தைக் கவர்வதை அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதாவது நியூசிலாந்தின் பிரபல விளையாட்டுக் கழகங்கள், அதுவும் கதாநாயகர்களாக மதிக்கப்படும் வீரர்கள் மதுபான இலச்சினைகளை அணிந்துகொண்டு விளையாடுவது என்பன இளமட்டத்திற்கு மோசமான முன்னுதாரணம் என்றும் சரியாகவே கூறுகிறார்கள்.

இதேவேளை நாணயத்துக்கு இருபக்கம் என்பதுபோலவே மதுவகை விளம்பர நிறுவனங்கள் தம் கருத்தையும் முன்வைக்கின்றன. அதாவது பொறுப்புவாய்ந்த நியூசிலாந்து மக்கள் தமது கலை கலாசார விளையாட்டு நிகழ்வுகளை மகிழ்ச்சியாக கொண்டாடும் சூழலை இத்தடை பாதிக்கும் என்கிறார்கள்.

அதற்கும் மேலாக மதுபான விளம்பரங்கள் அல்ல. மாறாக நண்பர்கள், குடும்பத்தினர் என்போர்தான் இளமட்ட மதுபாவனையை ஊக்குவிப்பவர்களாக இருக்கிறார்கள் என்றும் ஒரு ஆய்வுகூறுவதாக எடுத்துக்காட்டுகிறார்கள். என்றாலும் பொதுநலன் கருதி நியூசிலாந்து அரசு முன்வைத்த காலைப் பின்வைக்காது என்றே எல்லோரும் நம்புகிறார்கள்.

# அத்திவாரம் அசையாது

அடுத்த வருடம் அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை சார்பாக, டில்ஷானுடன் இணைந்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களம் இறங்கப் போகிறவர் யார்?, குஷால் ஜனித் பெரேரா எதிர்பார்த்த அளவு சோபிக்காததால் இறுதி இரண்டு போட்டிகளிலும் அந்த இடத்தை மஹேல ஜயவர்த்தன ஏற்றுக்கொண்டார். ஆனால் குஷால் இளமை நிரம்பிய அதிரடி வீரர். ஆட்டத்தின் போக்கை ஆரம்பத்திலேயே மாற்றக்கூடியவர். இவர் பற்றி டில்ஷானும் மிகுந்த நம்பிக்கைகொண்டவராகவே காணப்படுகிறார். அதோடு என்னுடன் இணையாக யார் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களம் இறங்குவார் என்பது எனக்குப் பிரச்சினையில்லை. நான் எனது இயல்பான விளையாட்டை வெளிப்படுத்துவேன் என்று' கூறியுள்ளார்.

அடுத்த உலகக் கிண்ணப் போட்டியுடன் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறப்போவதாக மஹேலவும் சங்கக்காராவும் அறிவித்துள்ள நிலையில் டில்ஷான் வேறுவிதமாக யோசிக்கிறார் போலத்தெரிகிறது. 38 வயதாகும் இவர் உலகக் கிண்ணப்போட்டிகளின் பின்னரும் ஓரிரண்டு வருடங்கள் விளையாட உத்தேசித்துள்ளதாகவும், தற்போது ஓய்வு பற்றிச் சிந்திக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.




ஒப்பீட்டளவில் அணியில் உள்ள சில இளம் வீரர்களைவிட டில்சான் அற்புதமாகக் களத் தடுப்பு செய்கிறார் என்பதும் உண்மை. இலங்கை இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் போட்டிகளில் இதனை நன்றாகவே பார்க்கமுடிந்தது. டில்சான் துடுப்பாட்ட வீரராக, பந்துவீச்சாளராக, களத்தடுப்பாளராக எல்லாவகையிலும் சிறந்தவர். அதுவும் அணியின் மிக மூத்த உறுப்பினராக இவர் அணிக்கு பெரும் வரப்பிரசாதமாகவே இருப்பார். ஏஞ்சலோ மெத்தியூஸும் அனுசரித்துப்போகும் இயல்புள்ள ஒரு சிறந்த அணித்தலைவர். எனவே இரண்டு ஜாம்பவான்கள் கௌரவமாக ஓய்வுபெறும் வேளையில் அவர்களைப் போன்ற திறமைகள் அனைத்தையும் கொண்டுள்ள டில்சான் அணியில் நீடிப்பார் என்பது மிகவும் ஆறுதலான செய்திதான்.






சிலருக்கு எப்போதும் தலைமுடி கசகசவென பிசுபிசுத்து கிடக்கும். வியர்வை நாற்றமும் அடித்து சங்கடப்படுத்தும் இதற்கும் ஒரு எளிய சிகிச்சை இருக்கிறது. மிளகு, ஓமம், சீரகம்... மூன்றையும் சம அளவு எடுத்து தண்ணீரில் சேர்த்து கொதிக்கவையுங்கள்.

அந்த நீரில் சீயக்காயைக் கரைத்து, தலைக்குப்போட்டு குளியுங்கள். வாரம் இருமுறை இப்படி குளித்துவந்தால், தலையில் வியர்வை நாற்றம் நீங்கி, முடி பொலிவுடன் ஜொலிக்கும். தலை அரிப்பையும் இது கட்டப்படுத்தும் தலைக்குக் குளித்வுடனே சிலருக்கு தலையில் நீர் கோர்த்து அவதிப்படுவார்கள்.

அரை கரண்டி மிளகு,

1 கரண்டி வெந்தயம்,

கால் கரண்டி ஓமம்.

மூன்றையும் நைஸாக அரைத்துக்கொள்ளுங்கள். இதோடு 2 கரண்டி நல்லெண்ணெய் கலந்துசூடாக்கி, மிதமான சூட்டில் உச்சநிலையில் நன்றாக தேய்த்து மசாஜ் செய்யுங்கள். அரை மணிநேரம் கழித்து அலசுங்கள்.

இப்படி செய்துவந்தால், தலையில் கோர்த்த நீர் வடியும். உஷ்ணம் நீங்கி கண்கள் குளிர்ச்சியாக இருக்கும். சிறிதளவு மிளகை, பொடி செய்து துணியில்கட்டி ஆவியில் வைத்து எடுத்து, அதை உச்சந்தலையில் வைத்தாலும் நீர்வடிந்துவிடும். தலைமுடி பிளவுபடுவது என்பது ஒட்டுமொத்த முடி வளர்ச்சிக்கும் பாதிப்பு உண்டாக்கும் விஷயம்!

# கூந்தலின் நுனி பிளவா?

பல சகோதரிகளையும் மனம் கலங்க வைத்திருக்கும் முக்கிய பிரச்சினை இது. அவர்களின் தலைமுடி ஆரோக்கியத்துக்கு முக்கிய கவசமாகவே உதவுகிறது இந்த விசேஷ எண்ணெய்,

கடுக்காய் 20 கிராம், மிளகு 20 கிராம்

இரண்டையும் ஒன்றிரண்டாக பொடி செய்துகொள்ளுங்கள். அரை கிலோ நல்லெண்ணெயை காய்ச்சி, இந்தப் பொடியைப் போட்டுக் கலக்குங்கள். இந்த எண்ணெயைத் தினமும் தடவுங்கள். டிரையர் பயன்படுத்துபவர்கள், மிதமான சூட்டில் மசாஜ் பண்ணலாம். (அ) சூடான தண்ணீரில் டவலை நனைத்து ஒத்தடம் கொடுக்கலாம். பிறகு, சீப்பால் வாரி பின்னிக் கொள்ளுங்கள். நுனி பிளவு போய், முடி நன்றாக வளரத் தொடங்கும்.

# வீட்டு வேலை செய்யும் பெண்களுக்கு முதுகு வலி வருமா?



முதுகுவலி முதியவர்களுக்கு மட்டும்தான் வரும் என்றில்லை. இளைஞர்களையும் இப்போது பாடாய்படுத்திக்கொண்டிருக்கிறது. பெண்களும் முதுகுவலி கழுத்து வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

முதுகெலும்பின் அமைப்பிலோ, செயல்பாட்டிலோ ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் இல்லை. ஆனால் முதுகெலும்பின் வளைவுகளில் சிறு வித்தியாசம் இருக்கும். வளைவு ஆண்களை விட பெண்களுக்கு சற்று அதிகமாக இருக்கும். பெண்கள் கோலம் போடுதல், வீடு பெருக்குதல், துணி துவைத்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு முதுகு வலி வராது.

பெண்கள் 45-50 வயது வரை வீட்டுவேலைகளை செய்வது நல்லது. வீட்டுவேலைகளால் முதுகெலும்பிற்கோ, எலும்புகளின் நடுவில் உள்ள டிஸ்கிற்கோ எந்த பாதிப்பும் வராது. ஆனால் முதுகெலும்பில் ஏதாவது பிரச்சினையோ, நோயோ ஏற்பட்டிருந்தால் கடினமான வேலைகளை செய்யாமல் இருக்கவேண்டும்.

இடுப்பில் தண்ணீர்க்குடத்தை தூக்குவதாலும், குழந்தைகளை இடுப்பில் தூக்குவதாலும் பெண்களின் முதுகெலும்பில் பொதுவாக பாதிப்பு ஏற்படுவதில்லை. கர்ப்பம், பிரசவத்திற்கு தக்கபடி பெண்களின் முதுகெலும்பு கட்டமைப்பில் ஏதேனும் மாற்றங்கள் இருக்கிறதா? பெண்களின் அடி முதுகு வளைவு அவர்களது கர்ப்ப காலத்தில் வயிற்றின் முன்பக்க வளர்ச்சிக்கு ஏற்ப, பின்பக்கம் சாய்ந்து கொள்ளக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது.

இதனால் வயிற்றில் குழந்தை வளர வளர முன்பக்க பாரத்திற்கு ஈடுகொடுக்கும் விதத்தில், பின்புறமாக சாய்ந்துகொண்டு கர்ப்பிணிகளால் அன்றாட வேலைகளை செய்யமுடியும். இதற்கு கர்ப்ப காலத்தில் சுரக்கும் ஹோர்மோன்களும் உதவிபுரிகின்றன.

# மில்க்மெய்டு சொக்லெட்

### தேவையான பொருட்கள்



மில்க்மெய்ட் - அரை மேசைக்கரண்டி

முந்திரி - ஒரு மேசைக்கரண்டி (இரண்டாக உடைத்தது)

பாதாம் - ஒரு மேசைக்கரண்டி (இரண்டாக உடைத்தது)

வெண்ணெய் - அரை கப்

சர்க்கரை - அரை கப்


கொக்கோ - மூன்று மேசைக்கரண்டி

### செய்முறை:

அடிகனமான பாத்திரத்தில் மில்க்மெய்டு, வெண்ணெய், சர்க்கரை, கொக்கோ ஆகியவற்றை சேர்த்து மிதமான சூட்டில் கிளறவும்.

கெட்டியானதும் இறக்கி, நெய் தடவிய தட்டில் கொட்டி சமப்படுத்தி, மேலே முந்திரி, பாதாம் தூவி துண்டுகள்போடவும்.

# பெண் குழந்தையின் மீது கவனம் செலுத்துங்கள்



பெண் குழந்தைகளின் வளர்ப்பில் தாயின் அன்பும், அரவணைப்பும் கட்டாயமாக தேவைப்படுகிறது. பெண் குழந்தைகளின் வளர்ப்பில் தாய்மார்கள் தங்களின் பொறுப்பை உணர்ந்து செயற்படவேண்டும்.

வீட்டை விட்டு வெளியே செல்கிற பெண் குழந்தைகள் யாரிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும். எத்தகைய பாதுகாப்பான இடைவெளியைப் பின்பற்ற வேண்டும் என்பதை கட்டாயம் கற்றுத்தர வேண்டும். இந்தக் காலத்தில் ஆணும், பெண்ணும் வேலைக்குச் சென்றால்தான் குடும்பத்தை நிர்வகிக்கமுடியும் என்ற நிலை வந்துவிட்டது.

வேலைக்குப் போகிறோம், சம்பாதிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு பெண் குழந்தைகளை அலட்சியமாக விட்டுவிடுதல் கூடாது. அதேபோன்று வீட்டில் இருக்கும் பெண்கள் எப்போதும் தங்கள் வீட்டுப்பணிகளை செய்வதில் நேரத்தை செலவிடாமல், பெண் குழந்தைகளின் கவனிப்பில் அக்கறை செலுத்தவேண்டும்.

குழந்தைகள் பள்ளிக்கும், டியூஷனுக்கு செல்லும்போது மற்றவர்களின் துணையை நாடுவது ஆபத்தை விளைவிக்கும். முடிந்தவரையில் பெண் குழந்தைகளை தாய்மார்கள் அழைத்துச் சென்றுவருவது பாதுகாப்பாகும். ஏனெனில் இன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை.

வேலைக்குப்போகும் பெற்றோர் பெண் குழந்தைகளை பார்த்துக்கொள்ள நியமிக்கும் ஆட்கள் உங்களுக்கு நன்கு தெரிந்தவராக இருக்கும்படி பார்த்துக்கொள்ளவும். மேலும் பெண் குழந்தைகளுக்கு துணையாக இருப்பவர் பெண்ணாக இருந்தால் நல்லது. பெண் குழந்தைகளின் ஒவ்வொரு நடவடிக்கையையும் தாய்மார்கள் கவனிக்கவேண்டும்.

அதற்கென்று எதற்கெடுத்தாலும் கண்டிப்பு கூடாது. இதனால் தேவையற்ற மன உளைச்சலுக்கு தள்ளப்பட்டு, எல்லா விஷயங்களையும் மறைக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றும். பெண் குழந்தைகளை தன்னுடைய மகளாக நினைக்காமல் தோழியாகக் கருதி, அனைத்து விஷயங்களையும் வெளிப்படையாக பகிர்ந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு தாய்மார்களும் பெண் குழந்தையை பாதுகாத்து, அரவணைத்து செயற்பட்டால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தவிர்க்கலாம்.

250/= பரிசு வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-451

**கேள்வி: பெண் குழந்தைகளுக்கு தாயிடம் இருந்து கிடைக்கவேண்டியவை எவை?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 05. 01. 2015

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 451
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 449 இற்கான விடை :-

ஐ ஷேடோ, ஐ லைனர்

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :-

G.சுலக்ஷிகா,
முத்துமாரியம்மன் வீதி,
கிளிநொச்சி.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

451

பெயர் : ..................

முகவரி : ..................

..................

தே.அ. அட்டை இல : ..................

விடை : ..................

..................

கையொப்பம் : ..................

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் பல்வேறு வகையான தேர்தல் பிரச்சாரங்கள் நடந்த வண்ணமிருக்கின்றன. கிழக்கைப் பொறுத்தவரையில் தமிழ் முஸ்லிம் சிங்கள மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மாகாணத்திற்கு கடந்த 19ஆம் திகதி ஜனாதிபதி வேட்பாளரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ச வருகை தந்திருந்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலும். மட்டக்களப்பில் நகர் மற்றும் காத்தான்குடியிலும் இரண்டு கூட்டங்களிலும். அக்கரைப்பற்றில் நடைபெற்ற கூட்டங்களிலும் அவர் கலந்துகொண்டு உரையாற்றினர்.



# வெற்றியளிக்குமா ஜனாதிபதியின் கிழக்குப் பயணம்?

19ஆம் திகதி மட்டக்களப்புக்கு அவர் வருகை தரவிருந்த நிலை யில் கடும் மழை கொட்டியது. கூட்டத்துக்காக அமைப்பாளர்கள் கட்சிகளின் ஏற்பாட்டில் வருகை தந்திருந்த மக்கள் குடைகளுடன்தான் நின்றிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிந்தது.

மீள்குடியேற்றப் பிரதி அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உபதலைவர்களில் ஒருவருமான வி.முரளிதரன். முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியிக் தலைவருமான மாகாண சபை உறுப்பிருமான சி.சந்திரகாந்தன். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மட்டக்களப்பு தொகுதி அமைப்பாளர் அருண் தம்பிமுத்து. பட்டிருப்பு தொகுதி அமைப்பாளர் இராஜபுத்திரன் சாணக்கியன். ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் அலிசாகிர் மௌலானா. முன்னாள் மட்டக்களப்பு மாநகர சபை மேயர் திருமதி சிவகீதா பிரபாகரன் உள்ளிட்ட பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது.

கடந்த கால யுகத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். பல விதமான கஸ்ரங்களுடன் இருந்தீர்கள். அது மாத்திரமல்ல சுனாமி யினால் கஸ்ரப்பட்டீர்கள். அதே போன்று கடந்த இருள் சூழ்ந்த யுகத்தினால் கஸ்ரப்பட்டிர்கள். ஆனால் எமது அரசினுடைய அபிவிருத்திகள் ஊடாக பல விதமான நன்மைகளைப் பெற்றுத்தர எம்மால் முடியும் என்று முதலில் கூறி வைக்கின்றேன்.

நர்ங்கள் எவ்வளவோ மணித்தியாலங்களை கடந்து வரவேண்டிய தூர ங்களையெல்லாம் குறுகிய காலத்துக்குள் வந்து சேரக்கூடிய வாய்ப்புக்களையும் வசதிகளையும் உங்களுக்குப் பெற்றுத் தந்திருக்கிறோம். அது மாத்திரமல் பாதைகள், பாலங்கள், குடிநீர் வசதிகள் என அத்தியாவசிய வசதிகளைப் பெற்றுத் தந்திருக்கிறோம். இனிவரும் காலத்தில் எல்லா வீட்டிற்கும் குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்களை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்.

இந்த மாகாணத்தில் பல விதமான அபிவிருத்திகளை செய்திருக்கிறோம் முக்கியமாக சுற்றுலாத் துறை அபிவிருத்தி. விமான நிலைய அபிவிருத்திகள் மூலம் பெருமளவான வேலைவாய்ப்புக்களை உருவாக்கியிருக்கிறோம்.

அது மாத்திரமல்ல விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பலவிதமான உதவிகளை வழங்கி அவர்களது வாழ்க்கையை சிறப்பாக நடத்துவதற்கு வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறோம் அது மாத்திரமல்ல நெல் விளைச்சல் வந்தவுடன் அதனைச் சரியான விலைக்கு கொள்வனவு செய்யாது அவர்கள் விரும்பிய விலைகளுக்கு கொள்வனவு செய்தார்கள் அந்த நிலையை மாற்றுவதற்காக நெல் சந்தைப்படுத்தும் சபையை வலுப்படுத்தி மேலும் வளப்படுத்தவுள்ளோம்.

பாடசாலை செல்லும் பிள்ளைகளின் வசதிகளுக்காக மகிந்தோதைய விஞ்ஞான ஆய்வு கூடங்களை ஏற்படுத்தி கல்வியை மேம்படுத்தி வளப்படுத்த ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.

நாங்கள் இந்த நாட்டில் அரச சேவைகளை மேலும் வலுப்படுத்தியுள்ளோம். கடந்த காலத்தில் இருந்த அரசுகள் அரச சேவைகளில் இருந்த 6 தொடக்கம் 7 லட்சமானவர்களை 3ஆகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முயன்றனர். அதனை நாங்கள் 15 லட்சமாக அதிகரித்துள்ளோம். அது மாத்திரமல்ல கடந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மேலும் ஒன்றரை லட்சம் பேரை அரச வேவையில் அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம்.

**- கிழக்கான் -**

உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. மீன்பாடும் தேன்நாட்டில் கடந்த 30 வருடகாலமாக இருந்த துன்பம் இப்போது இல்லை. நீங்கள் எங்கு சென்றாலும் அபிவிருத்தி வேலைகளைக் காண்பீர்கள்.

என்னைக் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெல்லச் செய்தீர்கள் இந்தத் தேர்தலிலும் வெல்லச் செய்வீர்கள். நாம் எப்போதும் சொன்னதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம். எமது தேசம் இன்னும் இன்னும் முன்னேறவேண்டும். நீங்களும் முன்னேறவேண்டும் குடும்பமும் முன்னேற வெண்டும். பொய்ப் பிரச்சாரங்களை நம்ப வேண்டாம். குறுகிய அரசியல் நோக்கம் ஒரு நாளும் வேண்டாம். நாம் எங்களுடைய காலத்தில் செய்த அபிவிருத்திகள் போன்று வேறு ஒரு காலத்திலும் யாரும் செய்ததில்லை. பெருந்தொகையினருக்கு அரச நியமனம் வழங்கியுள்ளோம். விவசாயம். மீன்பிடி. சுயதொழில் சுற்றுலா. சுகாதாரம் என பல துறைகளிலும் அபிவிருத்திக்காக செயற்பட்டுள்ளோம். நாட்டில் சமாதானம் தான் தேவை. நாட்டின் அபிவிருத்திதான் தேவை. எனவே வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களியுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த இடத்தில் கேள்வி என்ன வென்றால் மிகப் பெரியளவான எதிர்பார்ப்புக்கள் இருந்த நிலையில் மிகவும் தாமதமாக வந்து சேர்ந்த ஜனாதிபதி மிகவும் குறுகிய நேரமே மட்டக்களப்பு நகரத்தில் நின்றிருந்தார். அதே நேரம். அவரது உரையானது பல எதிர்பார்ப்புகளுடன் இருந்த நிலையில் மிகவும் சுருக்கமாகவும் எந்தவிதமான அரசியல் கருத்துக்களும் இல்லாது ஏன் இருந்தது என்பதுதான்.

கிழக்கைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் பலம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. என்றே சொல்லவேண்டும். இந்த நிலையில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதியின் வருகையினால் ஏதாவது மாற்றத்தினைக் கொடுவருமா என்ற கேள்வி அடுத்ததாக இருக்கிறது.

இங்குள்ள இன்னமும் முக்கியமானதும் பெரியதுமான கேள்வி என்னவென்றால். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் எவ்வாறு நடந்து கொள்ளப் போகிறார்கள் என்பதுதான்.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதயைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முக்கியத்துவம் மிக்க தேர்தலாக அமையப்போகிறது. இதற்குள் கிழக்கின் நிலைப்பாடு எப்படியிருக்கும் என்ற எதிர்பார்ப்புகள் இருந்த நிலையில் அமைந்திருந்த ஜனாதிபதியின் வருகையானது பெரியளவான மாற்றம் எதனையும் செய்து விடவில்லை என்றே சொல்லப்படுகிறது.

10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்து வந்திருந்தனர். இந்த மக்கள் தொகையே கிழக்கில் நடைபெறிருந்த கூட்டங்களுக்கு வருகை தந்த அதிக தொகையாக இருக்கும்.

கிழக்கு மாகாணம் மூன்று இனங்களையும் உள்ளடக்கியது என்றாலும் கிழக்கின் நிலைப்பாடு என்பது தமிழ் பேசும் மக்களின் நிலைப்பாட்டையே குறிக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஏனெனில் முஸ்லிம் மக்களது அதிக வாக்குகள் அரசாங்கததிற்கு கிடைப்பதும் அதில் ஒரு பகுதிபொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடைப்பதும் தான் முடிவாக இருக்கும் என்பதும் இப்போதைய நிலைப்பாடாக இருப்பதனால் இந்த வார்த்தைப் பிரயோகம் சரிப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் யார் ஜனாதிபதிக்கு எதிராகப் போட்டியிடுவார் என்ற கேள்விகள் இருந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பாரிய பிளவு ஏற்பட்டது. இதனால் உருவான மாற்றம் சரியான முறையில் எல்லா இடங்களுக்கும் சென்று சேரக்கூடி நேரமில்லாது தேர்தல் நடைபெறுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக கேள்விகள் பல எழுப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கட்சியும் தமது நிலைப்பாடுகளைச் சரியாக அறிவிப்பதில் தாமதங்களையே காண்பித்து வருகின்றன. ஏன் இந்தத் தாமதம் என்பதும் யாருக்கும் தெரியாமலேயே இருக்கிறது. மாற்றம் ஒன்றே இப்போதைய தேவை என எல்லோரும் சொன்னாலும் இம்முறை எந்தவொரு அரசியல் கட்சியினுடைய முடிவையும் மக்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதும் தங்களுடைய விருப்பத்துக்கே முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்பதுமே வெளிப்படையாகத் தெரிகிறது

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சி மாற்றங்கள் ஏற்படவுள்ளன என்றே எண்ணப்பாடுகள் இருந்தன. ஆனால் பெரியளவான-தொரு இறுக்கம் உருவாகி ஒரு நிலைமைக்கப்பால் எல்லாமே நின்று போயின. இந்த நிலையில் இப்போது கிழக்கு மாகாணத்திற்கு ஜனாதிபதி செய்த விஜயமானது பெரியளவில் மாற்றம் எதனையும் உருவாக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இத்தடவை தேர்தலில் சிறுபான்மையினத்தவர்களின் வாக்குகள் தீர்க்கமானதொரு பங்கை வகிக்கக்கூடிய அரசியல் சூழ்நிலை காணப்படுகின்றபோதிலும் ஜனாதிபதி முழுமையான அக்கறையில்லாத தன்மையுடன் இருப்பதாகவும் கருத்துக்கள் நிவலவுகின்றன. ■


CCTV- CAMERA
NEW YEAR OFFER
கண்காணிப்பு கமெராக்கள் விசேட விலையில்



CAMERA STARTING FROM: RS. 4250/=



# Sony Effio E Chipset, 960H Resolution, 700tvl+DWDR
# 2.8-12mm Manual Zoom Lens, Able to View Currency

04 CHANNEL CAMERA SYSTEM
04X Micro Vision 1200tvl Outdoor Water Proof Bullet Camera with Night Vision, 04Chanel DVR 500GB Toshiba HDD, 08 BNC, DC Connector with 5Amp Center Power Packs, 19" LED Monitor
----------- From Rs: 49,850/= ----------

08 CHANNEL CAMERA SYSTEM
08X Micro Vision 1200tvl Outdoor Water Proof Bullet Camera with Night Vision, 08Chanel DVR 1 TB Toshiba HDD, 16 BNC, DC Connector with 10Amp Center Power Packs, 19" LED Monitor
---------- From Rs: 77,700/= ----------

16 CHANNEL CAMERA SYSTEM
16X Micro Vision 1200tvl Outdoor Water Proof Bullet Camera with Night Vision, 16Chanel DVR 2 TB Toshiba HDD, 32 BNC, DC Connector with 18Amp Center Power Packs, 19" LED Monitor
---------- From Rs: 134,550/= ---------

உங்கள் கமெராத் தெரிவுகளை நீங்களே பரிசோதித்து தரத்தை உறுதிசெய்யுங்கள்

# 1-2 Years Warranty For Camera, DVR, HDD & LED
# Free Mobile View & Online Setting
# 100% After Service
# Currency & Number Plate Viewing Ability

எமது சேவை வடக்கு மாகாணம் முழுவதும்


NORTH LEAD CCTV SECURITY SYSTEM
No : 328, Stanly Road, Jaffna.
Tel : 021-222 4459, Mob : 0774192275
Branch : No : 12, Kanagapuram Road, Kilinochchi.
Tel : 021-206 0909, Mob : 0772533390

# பொதுபலசேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

தொடர் - 35

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

> **தற்போது ஒன்று சேர்ந்திருக்கும் எதிரணி கூட்டணியானது வெற்றி பெற்றால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.**
>
> **அது தொடர்பாக நாம் மக்களை தெளிவுபடுத்துவோம். அதேவேளை, எமது அமைப்பானது எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்கத் தீர்மானிக்கவில்லை.**
>
> **நாம் ஒரு அரசியல் கட்சியல்ல. அத்தோடு எமது செயற்பாடுகளும் தீர்மானங்களும் அரசியல் நோக்கம் கொண்டதுமல்ல.**
>
> **மாறாக நாட்டிற்காகவும் நாட்டின் எதிர்காலத்திற்காகவும் நாம் எப்பொழுதும் முன் நிற்போம்.**



### கிழக்கு மாகாணத்தில் பயங்கரவாத அமைப்புக்கள் பொதுபல சேனாவின் கண்டுபிடிப்பு

கிழக்கு மாகாணத்தில் பயங்கரவாத அமைப்புக்கள் இயங்கிவருவதாகவும், அவற்றின் நடவடிக்கைளை இல்லா தொழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சிங்கள பௌத்த கடும்போக்கு அமைப்பான பொதுபலசேனா, அரசைக் கேட்டுள்ளது.

கிழக்கு தீவிரவாத இயக்கங்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரின் எச்சரிக்கைகளை அரசாங்கம் உதாசீனம் செய்து வருவதாகவும் பொதுபலசேனா இயக்கத்தின் தலைவர் கலகொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தானில் இடம்பெற்ற துயரமான சம்பவங்கள் இலங்கையிலும் இடம்பெறக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் கிழக்கில் தீவிரவாத அமைப்புக்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் தீவிரவாத இயக்கங்கள் இயங்கி வருவதாக சர்வதேச அமைப்புக்கள் கூட எச்சரிக்கை விடுத்துள்ளது .ஆனால் அவை தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு கிழக்கு தீவிரவாத அச்சுறுத்தல்கள் குறித்து மெத்தனப் போக்கைப் பின்பற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் தீவிரவாத அமைப்பு இயங்கி வருவதாக முன்னரும் பொதுபலசேனா இயக்கம் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் சிங்கள பௌத்த கடும்போக்கு அமைப்பான பொது பலசேனா அமைதியாக இருப்பதாகவும் அவர்களை கண்டுபிடிக்க வேண்டியுள்ளது எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் ஊடகங்களுக்கு தகவல் வெளியிட்ட நிலையில். 16.12.2014 அன்று பொதுபலசேனா மேற்படி கருத்துரைத்துள்ளது.

**மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து ஊடாக சதித்திட்டம்**

மலேசியா, சிங்கப்பூர். இங்கிலாந்து ஊடாக இலங்கைக்கு எதிரான சதித்திட்டம் முன்னெடுக்கப் படுவ தோடு கோடிக்கணக்கான பணமும் பொது எதிரணிக்கு வந்து சேர்கிறது.

எனவே ஜனாதிபதித் தேர்தலில் இவ் அணி வெற்றி பெற்றால் அது சிங்கள பௌத்தர்களுக்கு சாவுமணியாக அமையும். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இலங்கையிலும் தலைதூக்கலாம். எனவே உளவுப் பிரிவினர் உஷாராக இருக்க வேண்டுமென்று பொதுபலசேனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு கிருலப்பனையிலுள்ள பொதுபலசேனா அலுவலகத்தில் 16.12.2014 அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர்,சந்திரிகாவின் 'ஈ' திட்டத்தின் கீழ் சர்வதேசம் மற்றும் தேசிய சதிகாரர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு நாட்டின் சமாதானத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொது எதிரணியை சுற்றி முஸ்லிம், கிறிஸ்தவ அடிப்படைவாதச் சக்திகளே உள்ளன.

புத்தர் மனித மாமிசம் உட்கொண்டார் என பிரசாரம் செய்த தௌஹீத் ஜமாத் அமைப்பு உட்பட முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்களும் கிறிஸ்தவ அடிப்படைவாத அமைப்புக்களுமே பொது எதிரணிக்கு ஆதரவு வழங்குகின்றன.

இது மிகவும் பயங்கரமானது இவ் அணி வெற்றி பெற்றால் சிங்கள பௌத்தர்களுக்கு அதுவே சாவுமணியாக அமையும்.

அது மட்டுமல்லாது பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால 100 நாட்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படுமென்று கூறுகின்றார்.

மறுபுறம் ஜே.ஆரின் அரசியலமைப்பு முழுமையாக ஒழிக்கப்படமாட்டாது என்று ரணில் சொல்கிறார். திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்கிறார்.

இவ் அணியில் ஒரே கொள்கையுடைய தலைவர்கள் இல்லை. பலரும் பல்வேறு கொள்கைகளை கொண்டுள்ளனர்.

இவர்களால் எப்படி நாட்டுக்கு தலைமைத்துவத்தை வழங்க முடியும். இந்த ஜனாதிபதி தேர்தல் நாட்டுக்கு தீர்க்கமானது. சர்வதேச. உள்நாட்டு சதிகாரர்களால் நாடு சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

மலேசியா. இங்கிலாந்து. சிங்கப்பூர் ஊடாகவே இச்சக்தி முன்னெடுக்கப்படுவதோடு அந்நாடுகள் ஊடாக பல கோடி ரூபாய் இவ் அணிக்கு வந்து சேர்கின்றது.

இந்தியாவிலும் உலகிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். முஸ்லிம் பயங்கரவாதம் வியாபித்துக் கொண்டு வருகின்றது.

இலங்கையின் கிழக்கில் முஸ்லிம் பயங்கரவாத அமைப்புக்கள் தலைதூக்கி வருவதாக அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. யும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொழில் செய்யாமல் கஷ்டப்படாமல் பணம் உழைக்கக் கூடியதுதான் பயங்கரவாதம். எனவே எமது உளவுப் பிரிவினர் உஷாராக இருக்க வேண்டும்.

பணம் கொடுத்து எதனையும் செய்யும் நிலைமை நாட்டுக்குள் தலைதூக்கியுள்ளது.

கடந்த காலங்களில் இங்கு வந்த வெளிநாட்டவர்கள் பணம் கொடுத்து தேசிய அடையாள அட்டை கடவுச் சீட்டுக்களை பெற்றனர்.

இது தொடர்பில் நாங்கள் பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவித்து அதற்கெதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

வெளிநாட்டவர்கள் ஏன் இங்கு வந்து இவற்றை பெற வேண்டும். எதற்காக என்பது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும்.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டை நினைத்து வாக்களியுங்கள் என்றும் ஞானசார தேரர் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் பொதுபலசேனாவின் தேசிய அமைப்பாளர் விதாரன்தெனியே நந்ததேரர், நிர்வாகப் பணிப்பாளர் கலாநிதி டிலந்த விதானகேயும் கலந்து கொண்டனர்.

நாட்டைப் பிரிப்பதற்கு நாம் ஒரு போதும் இடமளியோம்- பொதுபலசேனா எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டிடும் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிப்பதற்காக ஒன்று சேர்ந்திருக்கும் கட்சிகள் மற்றும் அமைப்புக்களினதும் கூட்டமைப்பின் செயற்பாடுகள் குறித்து சந்தேகங்கள் நிலவுகின்றன.

எனவே அவற்றைக் கூர்ந்து அவதானித்து மக்களை தெளிவுபடுத்தும் பொறுப்பு பொதுபலசேனவிற்கு உள்ளது என அவ்வமைப்பின் நிறைவேற்று அதிகாரியான நிலாந்த வித்தானகே தெரிவித்தார்.

நாட்டைப் பிரிப்பதற்கு பல்வேறு சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறான சூழ்ச்சி வலைகளில் இன்று பலர் சிக்கியுள்ளனர்.

எந்த சக்திகள் கூட்டு சேர்ந்தாலும் நாட்டைப் பிரிப்பதற்கு நாம் ஒரு போதும் இடமளியோம். அதே வேளை எந்தக் கட்சிக்கு அல்லது எந்தவேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பதை விட நாடும் நாட்டின் எதிர்காலமும் முக்கியம் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுபலசேனா அமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தால் தான் அரசாங்கத்துடன் இருக்கப் போவதில்லையென் பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்திருந்தார். அது குறித்து பொதுபலசேனாவிடம் வினவிய போது அவர் இவ்வாறு கூறினார்.

எந்தவொரு அரசியல்வாதியினதும் கருத்திற்கு எம்மால் பதில் கூற முடியாது. ஆனால் நாட்டினது தேசிய பாதுகாப்பு விடயத்தில் நாம் மிகுந்த அவதானமாக செயற்படுவோம்.

நாட்டில் தற்போது பாதுகாப்பான அமைதி சூழல் நிலவுகிறது. இவ்வாறான ஒரு நிலைமை முன்பு காணப்படவில்லை.

எனவே அதனை குழப்பி மீண்டும் பிரிவினைவாதத்தை ஏற்படுத்த சிலர் முயன்று வருகின்றனர். அதற்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

தற்போது ஒன்று சேர்ந்திருக்கும் எதிரணி கூட்டணியானது வெற்றி பெற்றால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

அது தொடர்பாக நாம் மக்களை தெளிவுபடுத்துவோம். அதேவேளை. எமது அமைப்பானது எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்கத் தீர்மானிக்கவில்லை.

நாம் ஒரு அரசியல் கட்சியல்ல. அத்தோடு எமது செயற்பாடுகளும் தீர்மானங்களும் அரசியல் நோக்கம் கொண்டதுமல்ல.

மாறாக நாட்டிற்காகவும் நாட்டின் எதிர்காலத்திற்காகவும் நாம் எப்பொழுதும் முன் நிற்போம். நாட்டின் ஒருமைப்பாட்டை குலைத்து அதனூடாக அரசியல் செய்ய எவ்வகையான சூழ்ச்சிகளை யார் மேற்கொண்டாலும் அதற்கெதிராக நாம் போராடி நிற்போம் எனவும் கலகொடத்தே ஞானசாரர் குறிப்பிட்டார்.

(தொடரும்)

# வாய்ப்புண் வருவது ஏன்?





**வா**ய்ப்புண் வருவது மிகவும் சாதாரண விஷயம்தான். ஆனால், அதைக் கவனிக்காமல் விட்டாலோ, அடிக்கடி வந்தாலோ பிரச்சினை பெரிதாகிவிடும். தொடக்கத்தில் உதடு, கன்னம், நாக்கு, அண்ணம் ஆகிய பகுதிகளில் கடுகளவு தோன்றும் கொப்புளங்கள், சில நாட்களில் உடைந்து, உளுந்து அளவுக்குக் குழிப்புண்களாக மாறி வலியை ஏற்படுத்தும் சாப்பிடும்போதும் பேசும்போதும் வலி அதிகமாகும். கழுத்தில் நெறி கட்டும் காய்ச்சல்வரும் உடல்வலி, தலைவலி எனத் தொல்லைகள் தொடரும்.

### யாருக்கு வரும்?

குழந்தை முதல் முதியோர்வரை இது எல்லோருக்கும் வரலாம். பொதுவாக, ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளவர்களுக்கு வாய்ப்புண் வரும் வாய்ப்பு அதிகம். அடுத்து, நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்களுக்கும், இரைப்பையில் புண் உள்ளவர்களுக்கும் இதன் தாக்கம் அதிகம்.

தவிர வெற்றிலை, புகையிலை, பான்மசாலா போடுபவர்கள், புகை பிடிப்பவர்கள், மது அருந்துபவர்கள், நீரிழிவு நோயாளிகள் ஆகியோருக்கு அடிக்கடி வாய்ப்புண் வரலாம். எந்த நேரமும் வேலை, வேலை என்று பரபரப்பாக இருக்கிறவர்களுக்கும், மன அழுத்தம் உள்ளவர்களுக்கும் வாய்ப்புண் மீண்டும் மீண்டும் வந்து தொல்லை கொடுக்கும்.

### காரணம் என்ன?

நீண்ட நாட்களுக்குச் சரிவிகித உணவைச் சாப்பிடாதவர்களுக்கு இரும்புச் சத்து, போலிக் அமிலம், விற்றமின் பி6 மற்றும் பி12 குறைபாடு ஏற்படும். இதனால் ரத்த வெள்ளை அணுக்கள் குறைந்துவிடும். இதன்விளைவாக உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து வாய்ப்புண் வரும்.

ஆண்களைவிடப் பெண்களுக்கு இந்தத் தொல்லை அதிகம். காரணம், பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஹோர்மோன் மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு. இதனால் இவர்களுக்கு வாய்ப்புண் வருகிறது. அடுத்து, இவர்கள் சாப்பிடும் கருத்தடை மாத்திரைகளும் வாய்ப்புண் ஏற்படக் காரணமாகின்றன.

வாய்ப்புண் வருவதற்கு ஒவ்வாமையும் முக்கிய காரணம்தான். உணவு ஒவ்வாமை - குறிப்பாகச் செயற்கை வண்ண உணவுகள் - மருந்து ஒவ்வாமை, பற்பசை ஒவ்வாமை போன்றவற்றை உதாரணங்களாகக் கூறலாம். அதிகமாகக் கவலைப்பட்டாலும் வாய்ப்புண் வரும்.

விற்றமின் பி2 குறைபாடு இருந்தால், வாயின் இரண்டு ஓரங்களிலும் வெள்ளை நிறத்தில் வெடிப்புகள் தோன்றும்.

பல் துலக்கும்போது பிரஷ் குத்துவதால் புண் உண்டாகலாம். செயற்கைப் பற்கள் சரியாகப் பொருந்தவில்லை என்றால், அடிக்கடி வாய்ப்புண் வரும். மிகச் சூடாக கோப்பி அல்லது பால் குடித்தால்கூட வாய்ப்புண் வருவதுண்டு. சிலர் வாயின் ஒரு பக்கத்தில் மட்டுமே உணவை மெல்லுவார்கள். இது நாளடைவில் வாய்ப்புண்ணுக்கு வழியமைக்கும்.

### என்ன சிகிச்சை?

பெரும்பாலான வாய்ப்புண்கள் சரியான உணவுமூலமே குணமாகிவிடும். அதே நேரத்தில், வாய்ப்புண் வெகுநாட்களுக்கு ஆறாமல் இருந்தால், அது புற்றுநோயாக மாறுவதற்கும் வாய்ப்புண்டு. ஆகவே வாய்ப்புண்தானே என்று அலட்சியமாக இருக்காமல், காரணம் அறிந்து சிகிச்சை பெறவேண்டியது அவசியம்.

மருத்துவரின் ஆலோசனைப்படி அன்ட்டிசெப்டிக் திரவத்தைப் பயன்படுத்தி வாய்கொப்பளித்தால் வாய்ப்புண் சீக்கிரத்தில் குணமாகும். ஸ்டீரோய்டு மற்றும் வலி மரத்துப் போகச்செய்யும் களிம்புகளை வாய்ப்புண்ணில் தடவலாம். இவற்றோடு வலி நிவாரணி மாத்திரைகளையும் ஒரு வாரம் சாப்பிடவேண்டும். லக்டோபேசில்லஸ் (Lactobacillus) மருந்து கலந்த மல்ட்டி விற்றமின் மாத்திரை மற்றும் இரும்புச்சத்து. போலிக் அமிலம் மாத்திரைகளை ஒரு மாதம் சாப்பிடவேண்டும். அப்போதுதான் வாய்ப்புண் மீண்டும் வராது.

### தடுப்பது எப்படி?

வாய்ச்சுத்தம் காப்பது வாய்ப்புண்ணைத் தடுப்பதற்கான முதல் படி. ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பல் மருத்துவரிடம் காண்பித்து "ஸ்கேலிங் முறையில் பற்களைச் சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். கூரான பற்களைச் சரிசெய்யவேண்டும். செயற்கைப் பல்செட்டால் பிரச்சினை வருகிறது என்றால், அதை மாற்றிவிடுவது நல்லது. "சோடியம் லாரி சல்பேட் (Sodium laury sulphate) கலந்திருக்கும் பற்பசையைப் பயன்படுத்தக்கூடாது. புகைபிடிக்கக் கூடாது.

### எந்த உணவு முக்கியம்?

பால், தயிர், முட்டை, இறைச்சி, ஈரல், மீன், நண்டு, கீரை, பச்சையிலைக் காய்கள், சர்க்கரை, தேன், பேரீச்சை, முளை கட்டிய பயறுகள், கொண்டைக் கடலை, பச்சைப் பட்டாணி, கோதுமை, கேழ்வரகு, சோயாபீன்ஸ், தக்காளி, முருங்கைக்காய், சுண்டைக்காய் ஆகியவற்றை அடிக்கடி சாப்பிட்டால் ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக வாய்ப்புண் ஏற்படுவதை நிச்சயம் தடுக்கலாம்.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...

வாரமொரு சிறுகதை

# தாய்ப்பாசம்



1952ஆம் ஆண்டு. கொரியா சிவில் யுத்தத்தின் பிடியில் அகப்பட்டிருந்த நேரம். ஒரு கிறிஸ்மஸ் இரவில் அமெரிக்கக் கர்ப்பிணிப் பெண் ஒருத்தி உதவிக் காகக் கெஞ்சிக்கொண்டிருந்தாள்.

அசரடிக்கும் குளிர், விறைக்கும் தேகம். உதவிக்கு யாரும் வர வில்லை. வழியே சென்றவர்களும், "எங்கே உன் அமெரிக்கப் புருஷன்?" என ஏளனமாய் விரட்டிவிட்டனர்.

பக்கத்து ஊரில் ஒரு மிஷனரி உண்டு என்பதை அறிந்திருந்த அந்தப் பெண் அந்த ஊரை நோக்கி நகரத் துவங்கினாள். முடியவில்லை பிரசவ நேரம். ஒரு பாலத்தின் அடியில் சென்று ஒதுங்கினாள். அங்கே அவளுக்குப் பிரசவம் நடந்தது. குழந்தையைத் தன்னந் தனியனாய்ப் பெற்றெடுத்த அவளுக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. பனிபொழிந்து கொண்டு இந்தது.

அந்தப் பெண் தனது துணிகளையெல்லாம் கழற்றி அந்தக் குழந்தையைப் பொதிந்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

மறுநாள் காலையில் அந்த வழி யாக மிஷனரிகள் வந்தபோது ஒரு குழந்தையின் அழுகுரலைக் கேட்டனர். குரல்வந்த திசையில் சென்றுபார்த்த அவர்களுக்கு அதிர்ச்சி. உறைந்து போன நிலையில் இறந்து கிடந்த தாயின் கரங்களில் ஒரு ஆண் குழந்தை. குழந்தை காப்பாற்றப்பட்டான். பையன் காப்பகத்தில் வளர்ந்தான்.

தனது பத்தாவது வயதில் அவனிடம் அந்த உண்மையை காப்பகத்தினர் சொன்னார்கள்.

அதற்கு அடுத்தநாள் காலையில் படுக்கையில் அந்தப் பையனைக் காணவில்லை. அவனை அவர்கள் தேடினார்கள். அதே பாலத்தின் அடியில் அவனைக் கண்டார்கள். கண்டவர்கள் அதிர்ந்துபோனார்கள். தனது ஆடைகளையெல்லாம் களைந்துவிட்டு. விறைக்கும் குளிரில் இருந்த அந்தப் பையன் அழுதுகொண்டே "இந்தக் குளிரையெல்லாம் நீ எனக்காகத் தாங்கினாயாம்மா" என நடுங்கிக் கொண்டே அழுதான். பார்த்தவர்கள் நெகிழ்ந்துபோனார்கள்.

தாயின் அன்பு அளவிட முடியாதது. அந்தத் தாய் மறந்தாலும் நான் மறக்கமாட்டேன் எனச் சொன்ன இயேசுவின் அன்பு அனைத்திலும் உயர்ந்தது.

# சுனாமியின் வடுகள்

**சுனாமிப் பேரலை தன் கோர முகத்தைக் காண்பித்து 10 ஆண்டுகள் கடந்திருக்கின்றது. இந்நிலையிலும் அதன் பசிக்கு வாழ்வாதாரங்களையும் உறவுகளையும் இரை கொடுத்த ஆயிரக்கணக்கான மக்கள் அதன் வடுக்கள் அகலாதவர்களாக நம் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த வடுக்களில் இருந்து விடுபடவேண்டும் என்ற பிரார்த்தனை யோடு சுனாமிப் பேரலை பலியெடுத்த உயிர்களின் நினைவுகூரும் முகமாக இக்கதை உருவாக்கப்பட்டுள்ளது.**



சசிகுமார் - றசி, அச்சுவேலி

அன்று விடுமுறை நாள் என்பதால் சற்று தாமதமாகவே கண் விழித்தான் சங்கர். சுவர்மீது நிழல் படமாய் தொங்கும் அந்த இரு ஜீவன் களை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்ட இருந்து விட்டு எழுந்து கடற்கரை நோக்கி நடந்தன. கடல் அலைகள் ஒன்றோடு ஒன்று முட்டிமோதி வெண்நுரை பொங்க கரையை முத்தமிட்டு செல்லும் அழகைப் பார்த்து கண்ணீர் வடித்தான். தான் இவ்வளவு அழகாக, சந்தோசமாக இருக்கும் கடல் அன்னை ஏன் அன்று மட்டும் சீற்றம் கொண்டு என் சந்தோசத்தை கெடுத்தது. எவ்வளவு அழகான என் குடும்பம். எப்படி எல்லாம் சந்தோசமாக வாழ்ந்தேன். இன்று கண்ணீரே மிச்சமாகிவிட்டதே எனப் பெருமூச்சுவிட்டான்.

சங்கரின் மனதில் அந்த பசுமையான நினைவுகள் பாலைவனமாய் வந்து போனது. சங்கரின் குடும்பம் மிகவும் வசதியான குடும்பம். அவனது தந்தை ஒரு பெரிய சம்மாட்டி. பல தொழிலாளர் க்ள் அவருடன் வேலை செய்தார்கள். அப்படி வேலை செய்தவர்களில் ஒருவரின் மகள்தான் கயல்வழி. கயல்விழி சங்கரின் வீட்டுக்கு வந்துபோவாள். ஆனாலும் சங்கரை அவள் பார்ப்பதோ கதைப்பதோ இல்லை. தன் வேலை முடித்துக்கொண்டு போய்விடுவாள். ஆனாலும் சங்கருக்கு கயல்விழியுடன் கதைக்கவேணும் என்று ஆசை அதற்கான. சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்தான்.

அன்று சங்கரின் வீட்டில் யர்ரும் இல்லை. அவனே தனியாக நின்றான். கயல்விழி வந்தாள். வாங்கோ கயல்விழி. வீட்டில் யாரும் இல்லையா? ஏன் நான் நிக்கிறேன்தானே.

உங்க அம்மா இல்லையா? இல்லை கயல்விழி. அம்மா கடைக்கு போயிட்டா. கொஞ்சம் நில்லுங்கோ வந்திடுவா. சரி கயல்விழி என்ன விசயமாக வந்தீங்கள். அது உங்க அம்மாகூடத்தான் கதைக்க வேணும். ஏன் என்கிட்ட சொல்லக்கூடாதா என சங்கர் அவளை கேள்விமேல் கேள்வி கேட்டான். அப்போது அவனுடைய தாய் அங்கே வந்தாள். கயல்வழி சங்கருடன் கதைத்துக் கொண்டு நிற்பதைக் கண்டதும் கோபம் பொத்திக்கொண்டு வந்தது.


ஏய்... வீட்டில் ஆக்கள் இல்லை என்றால் போக வேண்டியதுதானே... பிறகு என்ன யாரும் இல்லாத இடத்தில் வயசுப்பையன்கூட கதைச்சுக்கொண்டு நிக்கிறாய் என எரிந்து விழுந்தாள். இல்லை அம்மா நான் போகத்தான் நின்றேன். நீங்களும் இப்ப வந்திடுவீங்கள் என்று, உங்கள் மகன்தான் மறித்துவைத்திருந்தார் என தயங்கி தயங்கிப் பதில் சொன்னாள் கயல்விழி.

உங்க குடும்பத்துக்கும் எங்க குடும்பத்துக்கும் ஏணிவைத்தாலும் எட்டாது. எங்க வீட்டுப் படியிலேயே ஏறக்கூட உங்களுக்கு தகுதி இல்லை. எங்களிட்ட கைநீட்டி சம்பளம் வாங்கும் சாதாரண தொழிலாளர் நீங்கள். ஊர்க் குருவி ஊர்க்குருவிதான். பருந்தாக நினைக்கக்கூடாது என வாய்க்கு வந்தவாறு திட்டி தீர்த்தாள். எதுகும் அறியாத கயல்விழி வெட்கித்தலை குனிந்தவளாய் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தாள். அவளது கண்களில் இருந்து கண்ணீர் அருவியாக ஓடியது. ஏழைக் குடும்பத்தில் பிறந்த குற்றத்துக்காய் இன்று இவ்வளவு தண்டனை. பணம் பொருள், பண்டம் எல்லாம் கூடப் பிறப்பதும் இல்லை. அவர்கள் சாகும் போதுகூடப் போவதுமில்லை. இதை சில மனிதர்கள் உணர்வதில்லை. என்னசெய்வது எல்லாம் இறைவனின் சோதனைதான் என நினைத்தவள் வீடு வந்து சேர்ந்தாள்.

தாய் கயல்விழியை பேசிய வார்த்தைகள் சங்கரின் இதயத்தில் ரணமாய் வலித்தது. சீ... என்ன மனிதர்கள். ஏழை என்றால் இப்படியா நடப்பது? என்னால்தானே அவளுக்கு இவ்வளவு தண்டனை. அவன் இதயம் அவளுக்காய் கண்ணீர வடித்தது. அன்றில் இருந்து அவள்மீது ஒரு பரிதாப உணர்வே சங்கருக்கு இருந்தது. இதுவே பின் காதலாக மலர்ந்தது. கயல்விழியிடம் அவன் தன் காதலை சொன்னான். அவள் அதை ஏற்கமறுத்தாள். உங்க குடும்பம் பணம்படைத்த குடும்பம். என் குடும்பம் உங்களிட்ட கைநீட்டி காசு வேண்டும் குடும்பம். இதெல்லாம் சரிப்பட்டுவராது. தயவுசெய்து என்னை மறந்திடுங்கள். எனக்கு உங்களை பிடிக்கல்ல. கயல்விழி கூறி முடித்தாள். ஆனால் சங்கரோ கேட்கவில்லை. அவளைப் பின் தொடரந்தான். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதுபோல் கயல்விழியும் கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்தாள். அவர்களின் காதல் செடி மலர்ந்தது. இது சங்கர் வீட்டுக்கு தெரியவர வீடு இரண்டாகியது.

நிலைமை மோசமாகு வதை உணர்ந்தான். கயல் விழியைக் கூட்டிக்கொண்டு போனான். சங்கரின் குடும்பம் அவனை கைவிட்டது. ஏதோ தன்னால் இயன்றளவு கஸ்ரப்பட்டு கயல்விழியை கண்கலங்காது பார்த்தான் சங்கர். அவர்களின் குடும்பம் அழகான பூந்தோட்டமாய் மணம் வீசியது. அந்தப் பூந்தோட்டத்தில் அன்பு ஊற்றாய் அழகான பெண் குழந்தையை பெற்றெடு த்தாள் கயல்விழி. அவர்கள் நகமும் சதையுமாக வாழ்ந்தார்கள். யார் கண்பட்டதோ அன்றும் வழக்கம்போல காலைக் கதிரவன் தன் பொன் ஒளியைப் பரப்பி உலகிற்கு ஒளிகொடுக்க தயாரானான். அன்றாடக் கடமைகள் எல்லாம் இனிதே நடந்து கொண்டிருந்தது. கடல் அன்னை தன் மேனிதொட்ட மீனவர்களை சுடந்து நின்றாள். திடீரென என்ன நினைத்தாளோ சினம் கொண்டு சீறிப்பாய்ந்து எழுந்தாள். அலை வடிவில் ஊருக்குள் நுழைந்து தன் பசி அடங்கும்வரை மாணிட உயிர்களை தின்று தீர்த்து விட்டுச்சூசென்றது.

சங்கரின் குடும்பம் சின்னாபின்னம் ஆகியது. மூன்று நாட்களில் பின் நினைவு திரும்பிய சங்கர் கண்விழித்து தன் மனைவி, பிள்ளையை தேடினான். அவனுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. அவர்கள் அன்னையின் கோரப்பசிக்கு இரையாக்கிவிட்டார்கள். பணம், பொருள், பண்டம், கௌரவம் என வாழ்ந்த அவன் தாய் எல்லாம் இழந்து தனிமரமாய் சங்கர் அருகில் நின்றாள். அவன் குள்றி அழுதான். தன் மனைவி பிள்ளைக்காய் கண்ணீர்வடித்தான். அன்றில் இருந்து இன்றுவரை அவர்களின் நினைவுடனே வாழ்ந்துகொண்டிருக்கிறான் சங்கர். அவன் இதயத்தில் அழியாத சுவடுகளாய் சுனாமியின் நினைவுகள் வாட்டி எடுக்கின்றது.






# கடவுள் ஏன் கல்லானான்?

'அனுபவித்தே தான் அறிவது வாழ்வெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்!
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
அனுபவம் என்பதே வாழ்க்கை என்றான்.!!!!'

என்றான் அநுபவக் கவியரசன் கண்ணதாசன்.
இந்த அநுபவக் கவிஞனின் தத்துவப்
பாடல் ஒன்று பற்றி சற்றுப் பார்ப்போமே...

**கடவுள் ஏன் கல்லனான் - அவன்**
**கல்லாய்ப் போன மனிதர்களாலே**

**கொடுமையைக் கண்டவன்**
**கண்ணை இழந்தான் - அதை**
**கோபித்துத் தடுத்தவன் சொல்லை**
**இழந்தான்**
**இரக்கத்தை நினைத்தவன் பொன்னை**
**இழந்தான் - இங்கு**
**எல்லோர்க்கும் நல்லவன் தன்னை**
**இழந்தான்**

இறைவன் மனிதனைப் பண்டத்தானா'?
அல்லது 'மனிதன் இறைவனைப் படைத்தானா'?
என்ற கேள்வி மனதில் எழும்போது
அதற்கு 'கடவுள் ஏன் கல்லானான்?' என்று
பகுத்தறிவு வினா எழும்புகிறது.

மனச்சாட்சியைத் தூக்கி எறிந்து விட்டு.
இறைவனைத் தேடி அலைவதில்
அர்த்தம் என்ன இருக்கிறது?
மனிதனைக் கல்லாய்
வைத்து கடவுளைக் கல்லால் செய்து
கருணைக்கு கடவுள் பெயரைக் கருத்தினில்
நிறைத்துக் கொண்டு. கண்டதே காட்சி என்றும்.
கொண்டதே கோலம் என்றும்.
காலத்தின் கோலமாக கண்களைக்
குருடாய் வைத்த விந்தையை உலகம்
போற்றுகின்றது.

இவ் உலகிலே கொடுமைகள் நாலா திசைகளிலும்
கண்ணை மூடிக் கொண்டு அரக்கத்தனமாக
நடந்தேறி வருகின்றன.
அவைகளை நேரில் கண்ணால் கண்ட போதும்.
கண்ட கொடுமையை
நாலு பேருக்குச் சொல்லி
அதற்கான தீர்ப்பை.
நியாயத்தை நிலை நாட்ட முடியாத
காலமாகும். கண்ணால் கண்டதைக்கூட
வெளியே சொல்ல முடியாது மனத்திலே வைத்து.
இறுதிவரை வெதும்பும் நிலமைதான்
இன்றைய நிலையாகும்.
இரக்க மனஞ் உடையவனுக்கோ
எல்லோர்க்கும் உதவி செய்ய வேண்டுமென
அவன் உள்ளம் துடிக்கும்.
அப்படிப்பட்ட மனிதனுக்கு அவன்
மனம் போல் உதவி செய்ய பொருள் இருக்காது.

மனதினுள் நல்லிரக்கம் கொண்டு ஓடி ஓடி
எல்லோர்கும் உயிரைக் கொடுத்து
உதவி செய்யும் போது. உதவி பெறும் மட்டும்
நல்லவர்களாக நடித்து
அவனைக் கருவறுத்து தன் வாழ்வைச் செப்பனி
நினைப்பவர்கள்தான் இவ்வுலகில்
மலிந்து காணப்படுகின்றார்கள். இப்படிப்
பட்டவர்கள் இறுதியில் நல்மனம் கொண்டவனை
பாதாளத்திற்கு தள்ளி விழுத்தி
விடுகின்றனர். உதவி செய்ய நினைத்து
இறுதியில் உபத்திரவத்தைத் தேடிக்
கொள்ளும் நிலையை விளக்கும்
கருத்தினை அருமையாகச் சொன்னான் கவிஞன்.

**நெஞ்சுக்கு தேவை மனசாட்சி**
**அது நீதி தேவனில் அரசாட்சி**
**அத்தனை உண்மைக்கும் அவன் சாட்சி**
**மக்கள் அரங்கத்தில் வராது அவன் சாட்சி.**

மனிதனின் மனதினுள் ஒளிந்து
கொண்டிருக்கும் மனச்சாட்சி. தவறுகள் செய்யும்
போது வெளிவருவதில்லை.
தவறுகள் என்று தெரிந்திருந்தும்.
தவறு செய்பவர்கள் தங்கள் தவறுகளை
மற்றவர்கள் கண்டு
கொள்ள வில்லை என்ற துணிவுடனே செய்து
கொண்டிருக்கிறார்கள். ஆம்!
பூனை கண்ணை மூடிக் கொண்டு
பாலைக் குடிக்கும் போது.
மற்றவர்களுக்கு தெரியாது என்று
நினைப்பதுபோல். இவர்களும் மற்றவர்கள்
காணவில்லை என நினைக்கிறார்கள்.

தாம் செய்யும் தவறுகளுக்கு சாட்சிகள்
இல்லை யென்று ஊரைக் கொள்ளையடித்து.
சரித்திரத்தில் நல்ல மனிதர்கள்
என்ற போர்வையில் வேக்ஷங்கள் போடும் மாந்தர்
விந்தையை் இறைவன் ஒருவன் வேடிக்கை பார்ப்பான்.
ஓர் நாள் விளையாட்டுக் காட்டுவிப்பான்.
இன்றல்ல என்றோ ஓர் நாள்
இறைவனின் சபையில் தவறு செய்தவன்
இறைவனின் தீர்ப்பை பெற்றே தீர்வான்.
அதிலிருந்து ஒரு போதும் அவன் தப்பிவிட முடியாது.
தவறுகள் செய்யும் போது தெரிந்திடா மனதின் சாட்சி
தவறுகள் செய்த பின்பு வருந்திடும் நிலையைச் சொல்லும்.

அவன் செய்த தவறுகள் வெளி அரங்கத்தில் வராது விடினும்.
மனிதன் மனத்தினுள் அரங்கம் ஏறும்.
தவறு செய்தவனின் மனத்தினுளிருந்து
அவனை அடிக்கடி தட்டித் தட்டி
அந்நிகழ்வை ஞாபகப்படுத்திய வண்ணமே இருக்கும்.

தான் செய்த தவறை மறக்க முடியாது வெம்மி.
வெதும்பி இறுதிக் காலம் வரை
வருத்தி அழுத்தும். ஆகவே மனச் சாட்சிதான்
உயர்ந்த சாட்சி என்பதை அழகா நான்கு வரிதனில் நயம்படக்
கூறுகிறார் கவிஞர்.

**சதிச் செயல் செய்தவன் புத்திசாலி - அதை**
**சகித்துக் கொண்டிருந்தவன் குற்றவாளி**
**உண்மையைச் சொல்பவன் சதிகாரன் - இது**
**உலகத்தில் ஆண்டவன் அதிகாரம்**

விதியின் வாள் தங்கள் கையில் இருப்பதாக.
வரிந்து கட்டிக் கொண்டு. சதி
செய்து புத்திசாலிகளாக தங்களைக்
காட்டிக் கொண்டவர்கள் ஏராளம். அவர்கள்
சதி செய்கிறார்கள் என்பதை
மதி தன்னில் புரிந்து கொண்டும்.
'சரி செய்து விட்டுப் போகட்டும்' என்று
அவற்றைத் தாங்கிக் கொண்டிருப்பவர்கள்
குற்றவாளிகளாகத் தண்டிக்கப்படுவதும்
உண்மையை உரைப்பவன் 'சதிகாரன்'
'இளிச்சவாயன்' என்ற பெயர் கேட்ப தும் இந்த உலகத்தில்
நியதியாகி வருவதைகவிஞர் ஜதார்த்தத்தை நிலை நிறுத்தி
விடுகின்றார். இந்தப் பாடலில்
கண்ணதாசன் 'மனச் சாட்சியே இறைவனின் மறு வடிவம்'
என்று மிக நயமாகக் கூறுகின்றார்.




**சிந்தியா! அமைச்சர் ரிசாத் பதியுதீன் பற்றி ஒன்றுக்கொன்று முரணான செய்திகள் வருகின்றவே. எநதப் பக்கம் தாவப்போகின்றார்?**

**எம்.ஏ. அன்வர், புத்தளம்.**

தாவிவிட்டார் எதிரணிப்க்கம்! அன்வர்: ஆளும் தரப்பில் இருக்கின்றவர்கள் தங்கள் நிலைப்பாடுகளை அறிவிப்பதற்கு பின்னடிக்கும் போதே அவர்கள் தாவப்போகின்றார்கள் என்பதை ஊகித்துக்கொள்ளலாம்.

எனவே இதனை ஜனாதிபதியும் ஏற்கனவே ஊகித்துவிட்டார். இருந்தாலும் முடிந்தவரை பிளவுகளை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே அமீர் அலி எம்.பி யாக்கப்பட்டார். இவர்களும் இறுதிவரை இருந்து கிடைப்பதைப் பெற்றுக் கொண்டு போவோம் என்ற தீர்மானத்துடன் இருந்திருக்கிறார்கள் போலும். அரசியலில இதெல்லாம் சகஜமப்பா.

**சிந்தியா! அனைத்துத் தமிழர்களும் வாக்களிக்க வேண்டும் என்று கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளதே?**

**எம்.ரசிசங்கர், கிளிநொச்சி.**

கூட்டமைப்பு மட்டுமல்ல இன்னும் சில கட்சிகள் விடுகின்ற கருத்துக்களையும் அறிக்கைகளையும் ஊடகங்களில் பார்க்கும்போது பல தடவைகள் எனக்குள் நானே சிரித்திருக்கின்றேன்.

ஏனெனில். தங்கள் ஆணை கேட்டு புள்ளடிபோட இப்போதும் மக்கள் தயாராய் இருப்பதாக இவர்கள் இப்போதும் பகல் கனவு கண்டுகொண்டிருக்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரையில் மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள் அவர்களுடைய குறுகிய வட்ட நோக்கங்கள். சிந்தனைகள் எல்லாவற்றுக்கும் அப்பால் இத்தேர்தலில் யாருக்குப் புள்ளடி இட வேண்டும் என்பதை மக்கள் தீர்மானித்துவிட்டார்கள்.

❊❊❊❊❊❊❊❊❊❊

**சிந்தியா! சிறந்த கதையம்சங்கள் கொண்ட படங்கள் வெற்றிபெற்றும் கூட இப்போதும் க்வர்ச்சி தலைகாட்டுகிறதே!**

**எம்.மதுஷன், யாழ்ப்பாணம்.**

எல்லாம் வலைதான். கதையம்சம் கொண்ட படங்களில் கூட ஏதோ ஒரு வகையில் கவர்ச்சி தன்னை நிலைநிறுத்திக்கொண்டுதான் இருக்கும்.

**சிந்தியா! நடுநிலையான ஊடகம் என்றால் ஏன்ன? முரசு நடுநிலைப் பத்திரிகையா?**

**ஓவியன், கொழும்பு.**

முரசு நடுநிலையான பத்திரிகை இல்லை. என்னைப் பொறுத்தவரையில் பாம்புக்கு வால் மீனுக்குத் தலை என்று இரண்டு தரப்புக்களுடனும் சமரசம் செய்துகொள்வதுதான் நடுநிலை. ஆனால் முரசைப் பொறுத்தவரையில் என்றுமே நீதிக்கு எதிராக சமரசம் செய்துகொண்டதில்லை. தான் சார்ந்த சமூகத்தின் பக்கம் சார்ந்து நின்று சரியான கருத்துக்களை நேர்மையான விமர்சனத்தோடு முன்வைத்து வருகின்றது.

❊❊❊❊❊❊❊❊❊❊

**சிந்தியா! வெற்றி - தோல்வி இதில் எது நிரந்தர மானது?**

**க.ரமணி, வவுனியா?**

ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள். மகாபாரதப் போரில் கண்ணனிடம் பாஞ்சாலி கேட்கிறாள் "கண்ணா! இந்தப் போரில் நாம் வெற்றிபெறுவோமா?"

அதற்கு கிருஸ்ணர் " நாம் வெற்றி பெறுவோமா என்று கூற முடியாது. இந்தப் போரில் எதிரியான துரியோதனன் நிச்சயமாகத் தோற்பான். அவனது தோல்வியை நாங்கள் வெற்றியாகக் கொண்டாடுவோம்." என்றாராம்.



# பேராசிரியர் கைலாசபதியின் பார்வையில்

# உலகமயமாக்கலின் ஊடுருவலும் இனப்பிரச்சினையும்

**இன்று தமிழ் மக்கள் மத்தியிலே போர்காலச் சூழலில் இலைமறைகாயாக மறைந்திருந்த சாதிய உணர்வு என்பது பல வடிவங்களில் முனைப்படைந்து வருகின்றன. மறுபுறத்தில் இனவாதமும் பௌத்த மேலாதிக்கவாதமும் பல முனைகளில் வளர்த்தெடுக்கப்படுகின்றன. அந்தவகையில், இன்றைய சூழலில் தமிழர்களின் வாழ்வு என்பது பல் வேறுபட்ட முரண்பாடுகளுக்கும் நம்பிக்கையீனத்திற்குள்ளும் சுழன்று கொண்டிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியத்தின் தவறை இயக்கச் செல்நெறியில் ஏற்பட்ட விமர்சன ரீதியாக அணுகி, அதன் சாதக, பாதகங்கள் குறித்து தெளிவான, தீட்சண்யமான பார்வையை வளர்த்துக் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.**

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்தப்பின்னணியில் அத்தகைய அரசியல் போக்குகளின் விளைபொருளே தமிழத் தேசிய போராட்டமாகும். தமிழ்த் தேசியவாதப் போராட்டத்திற்கான முக்கிய காரணியாக அமைந்தது இலங்கை அரசால் 1970களில் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறையாகும். கல்வியின் மீதான ஆர்வமும். அதனூடான சமூகப்பெயர்ச்சியில் நம்பிக்கையும் கொண்டிருந்த யாழ்பாண இளைஞர்களின் பல்கலைக்கழக அனுமதியை தரப்படுத்தல் முறை வெகுவாகப் பாதித்தது. அத்துடன் இனவாத அடிப்படையில் காலங்காலமாக மேற்கொள்ளப் பட்டு வந்த அடக்குமுறைகள், யாழ். நூல எரிப்பு, இன்னும் இது போன்ற அம்சங்கள், இந்நாட்டில் வாழ்ந்த தமிழர் சமூகத்தை வெகுவாக பாதித்திருந்தது. இப்பின்னணியில் தீயாய், கனலாய் மூண்ட உணர்வின் வெளிப்பாடே தமிழ்த் தேசிய இயக்கங்களாகும். இவ்வுணர்வை தமிழ் முதலாளித்துவ சக்திகள் தமது வர்க்க நலனுக்காக தமிழ் இனவாதத்தினுள் அமிழ்த்திச் சென்றனர். 1960களில் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் ஏற்படுத்தி இருந்த போராட்ட உணர்வுகளை இச் சக்திகள் குறுகிய தமிழ்த் தேசிவாத அரசியலுக்குப் பயன்படுத்திக்கொண்டன. இடதுசாரிகள் அன்று சிங்கள மக்களுடன் ஐக்கியப்படுதல் என்பதன் அடுத்த பக்கமாகச் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகப் போராடுதல் என்ற அம்சத்தினையும் கவனத்தில் கொண்டு தமது போராட்டங்களை முன்னெடுத்திருப்பார்களாயின் தமிழ் ஜனநாயக சக்தியின் ஒரு பகுதியினரை வென்றெடுத்திருக்க முடியும்.

இவ்விடத்தில் பிறிதொரு விடயத்தினையும் சற்று அழுத்திக் கூற வேண்டியுள்ளது. அதாவது அன்றைய காலச் சூழலில் இடதுசாரிகள் தமிழ் தேசியம் குறித்த தெளிவான பார்வையைக் கொண்டிருக்கவில்லை என்கின்ற அதே நேரத்தில் தமிழத் தேசியவாதப் போராட்டத்தின் சிதைவிற்கு, அதன் பிழையான பக்கத்திற்குக் காரணமாக அமைந்தவர்கள் அமிர்தலிங்கம் போன்ற பிற்போக்குத் தலைமைகளே என்பதை வரலாறு எண்பித்திருக்கின்றது என்பதும் இலகவில் மறந்துவிடத்தக்க ஒன்றல்ல.

இந்தப் பின்னணியில் மூண்ட இளைஞர்களின் கோபத்தைத் தமது அரசியலுக்குச் சார்பாகத் தமிழர் கூட்டணியினர் பயன்படுத்திக்கொண்டனர். மறுபுறத்தில் இந்த இளைஞர்களின் கோப உணர்ச்சிக்கு அப்பால் தமது பாரளுமன்றப் பதவிகளையும் சலுகைகளையும் பாதுகாத்துக் கொள்வதிலும் மிகக் கவனமாக இருந்தனர். இந்தப் பின்னணியில், 1977 ஆம் ஆண்டுத் தேர்தலுக்கான செயற்பாடாக இனக் கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்ட வேளையில் அதன் அதிர்வு உலகின் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது. அன்றைய சூழலில் தமிழ் ஈழம் கேட்ட தமிழத் தலைவர்களைப் பேட்டி காணுவதற்காக இலங்கை வந்த பத்திரிகை நிருபர், கொழும்பில் கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரபலமான ஹோட்டல் ஒன்றில் அமிர்தலிங்கத்தாரைப் பேட்டி எடுத்துள்ளார். அதனை விசித்திரமான பேட்டி என்றும் தமது பத்திரிகையில் விவரித்திருக்கின்றார். இது பற்றிக் கைலாசபதியின் பின்வரும் வரிகள் நமது கவனத்தை ஈர்க்கின்றன:

**"உண்மையான போராட்டத்தை அறியாத பத்திரிகை அறிக்கை தள(ர்)பதிகளையும், செயலாளர் நாயகங்களையும், காரிலும் ஜீப்பிலும் ஓடித்திரியும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்களையும் ஹோட்டல்களில் குஷியான சூழ்நிலைகளில் பேட்டிக் காணாமல் வேறெங்குதான் பேட்டி காண முடியும்?**

**"விடுதலைக்காகப் போராடும் உண்மையான தலைவர்களுக்கு, போராளிகளுக்குப் பிரயாணம் செய்வதே கஷ்டமான காரியம். சில நாடுகளுக்கு அவர்கள் விஸா பெறுவதே வில்லங்கமானதாயிருக்கும். ஆனால் தமிழீழ தள(ர்)பதிக்கோ எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் எங்கும் இராஜாங்க சலுகை சுங்கப்பகுதி கூட சோதனைப்போடுவதில்லை. உலகில் பலருக்கு இதனைப் புரிந்து கொள்வது கஷ்டமாயிருக்கும். அரசாங்கமே தமது அமைச்சர் ஒருவரை 'எதிர்க் கட்சித் தலைவராக' ஆக்கி வைத்தது போல இருக்கிறது. அமிர்தலிங்கம் எதிக் கட்சித் தலைவராகவும், தமிழீழத் தலைவராகவும் இருப்பது இரண்டில் ஒன்று தான் உண்மையாக இருக்க முடியும்! சினிமா நட்சத்திரங்கள் போல ஊருக்கு ஊர், இடத்திற்கு இடம் உடைகளை மாற்றிக் கொண்டு, உலகம் சுற்றும் போது (இயக்கத்திற்கு பிறர் வழங்கிய நிதியில்) 'அசல்' எதிர்க் கட்சி தலைவராகவும், ஆளும் வர்க்கத்தில் ஒருவராகவுமே அமிர்தலிங்கம் தோற்றமளிப்பதாக உலகின் பல பகுதிகளில் அனுபவமிக்க அவதானிகளும் அரசியல் நிருபர்களும் குறிப்பிட்டிருக்கின்றனர்" (1981 ஆவணி).**

அமெரிக்காவில் வாஸிங்டனில் உலக வங்கியாளர்களிடமும் அது சாந்த நிறுவனங்களுடனும் பேரம் பேசுகின்ற போது இலங்கையில் தோன்றியுள்ள ஏகாதிபத்தியச் சார்பு அரசாங்கத்திற்கான விசுவாசியான தமிழ்த் தலைவர்கள் இலங்கையிலும்- யாழ்ப்பாணத்திலும்- தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுக்கான பேட்டியின் போதும் தமிழ்க் காவலர்களாக இரட்டை வேடம் அளித்திருந்தனர் என்பதை மேற்குறித்த பந்தி வெளிப்படுத்தியிருக்கின்றது. இவ் வேடமாற்றங்கள் தனிநபர்களைப் பாதிப்பதாக அல்லாமல் ஒரு இனத்தையே அழிப்பதாக அமைந்திருந்தமை நாம் கவனத்திலெடுக்க வேண்டிய அம்சமாகும்.

இவ்வகையில் நோக்குகின்ற போது, தமிழர் கூட்டணியானது தமக்குப் போட்டியாகவும் தமது ஊழல்களை மக்கள் மத்தியில் பரப்பக் கூடிய சக்தியாகவும் இருந்த முற்போக்கு சக்திகளையும் தேசிய முதலாளித்துவ சக்திகளையும் மொழியையும் இனவொடுக்குதலையும் கேடயமாகக் கொண்டு இலங்கையின் அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்த முயன்றனர். அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர் என்றே கூறவேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியம் தமது அரசியலை இருப்பை இலங்கையில் நிலைநிறுத்துவதற்கு ஜே.ஆர். அரசாங்கத்தை பயன்படுத்திக் கொண்டது போன்று தமிழர் மத்தியில் எழக் கூடிய போராட்டங்களைத் திசை திருப்பி மக்களை அமைதிப்படுத்துவதற்கு தமிழ்த் தளபதியார் அமிர்தலிங்கத்தைப் பயன்படுத்திக்கொண்டது. ஜே.ஆரும் அமிர்தலிங்கத்தாரும் அடிப்படையில் கம்யூனிச விரோதி- பொதுவுடமைத் துரோகி- என்பதை நன்கு அறிந்திருந்த அமெரிக்கா யூ.என.பி. காலத்தில் பிரச்சனையை பிரதேசமயப் படுத்திப் பாராளுமன்ற மாயை விஸ்தரித்து சிங்கள தமிழ் மக்களை ஏமாற்ற மட்டுமன்று அவர்களை ஓட்டாண்டியாக நடுரோட்டில் நிறுத்துவதற்கும் பயன் படுத்திக்கொண்டது என்பதைக் கைலாசபதி "தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு விடுதலை இயக்கமா? அமிர்தலிங்கம் விடுதலை இயக்கத்தின் தலைவர் என்ற தலைப்பிலான கட்டுரையில் சிறப்பாகத் தெளிவுபடுத்தியிருக்கின்றார். மேலும் அதே கட்டுரையில் முன்னர் ஆட்சியிருந்த சுதந்திரக் கட்சியின் மக்கள் சார்பான பக்கத்தைச் சிதைக்கும் வகையிலும் குறிப்பாக தமிழ் மக்களை நசுக்கும் யூ.என்.பி. அரசாங்கத்தை அபிவிருத்தியின் பேரில் அரவணைத்து தமது வர்க்க சமரசத்தைத் தமிழர் கூட்டணியினர் செய்து வருகின்றனர் என்பதையும் அவர் விளக்கியிருக்கின்றார்.

இத்தகைய அரசியல் போக்குகள் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாக தமிழ் இளைஞர்கள் மத்தியில் அவர்களின் அரசியல் சார்ந்த இயக்கங்கள் தோற்றம் பெறலாயின. அவ்வியக்கங்கள் பிரதானமாக இரு நிலைப்பட்ட அரசியல் தளங்களை வெளிப்படுத்தி நின்றன. வரலாற்றிலிருந்தும் மக்களிலிருந்தும் தம்மை அந்நியப்படுத்திய அரசியல் போக்கானது குறுந் தமிழ் தேசியமாக அமைந்தது அதன் முதலாவது போக்காகும். மறுபுறத்தில் தமிழ் மக்களின் பிரச்சனைகளை இனவாதத்திற்குள் அமிழ்த்திச் செல்லாது சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான அரசியலை நிலைநிறுத்தியது அதன் இரண்டாவது அரசியல் போக்காகும். காலப்போக்கிலே இவ்வியக்கங்களானது சிதைந்து சின்னாபின்னமாகியிருப்பினும் குறைந்தபட்சம் மக்களிடம் செல்ல வேண்டும் என்ற உணர்வு இவர்களிடத்தில் முனைப்புற்றிருந்தது முற்போக்கான அம்சமாகும். கைலாச பதி இந்த இரண்டாவது போக்கை ஆதரித்திருந்தார் என்பதை அவரது செம்பதாகை எழுத்துக்களின் ஊடாக அறிய முடிகின்றது.

மேலும் இலங்கை அரசியல் வரலாற்றில் இடதுசாரி அடையாளங்களுடன் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் சிலர் மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெறுவதற்கும் தமது அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்கும் அத்தத்துவத்தைப் பயன்படுத்திக்கொண்டனர். தமது சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொண்ட பின்னர் பிற்போக்கான வியாபார நோக்கங்களுடன் தம்மை இணைத்துக் கொண்டது மட்டுமன்று ஒரு காலத்தில் தாங்கள் எந்த வர்க்கத்திற்கெதிராகப் போராடினார்களோ. அந்த வர்க்கத்தினருடன் சமரசம் செய்து கொண்டு கூடிக் குலாவுவது மாத்திரமன்று. அந்த வர்க்கத்தினருக்குச் சாமரை வீசி சேவகம் செய்து வந்துள்ளதையும் நாம் இலங்கை இடதுசாரி வரலாற்றில் காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய சிதைவுகள் குறித்து கைலாசபதி எழுதிய கட்டுரையில் கூறுகின்ற பின்வரும் வரிகள் முக்கியமானவை:

**இந்த நாட்டில் தொழிலாளர் இயக்கமும் மார்க்சிய இயக்கமும் முளைவிடத்தொடங்கிய காலம் முதல் ரொட்சியவாதம் உடன்பிறந்தே கொல்லும் வியாதிபோல் இடதுசாரி இயக்கத்தின் ஏகோபித்த வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் குந்தகம் ஏற்படுத்திக் கொண்டே வந்திருக்கின்றது. ரொட்சிய வாதத்தை அதன் பிறப்பிலேயே நன்கு அறிந்த ஸ்டாலின் அது இடதுசாரி இயக்கத்திற்குள் ஊடுருவியுள்ள முதலாளித்துவக் கண்ணோட்டத்தின் வெளிப்பாடு என்று சரியாகக் குறிப்பிட்டார். பிலிப் குணவர்த்தனா முதல் கொல்வின் ஆர். டி. சில்வா வரை ரொட்சிசவாதிகள் இலங்கையில் நமக்குக் காட்டி வந்து நிற்கும் 'சாதனை' என்ன? பேச்சில் அதிதீவிரவாதமும் நடைமுறையில் படுமோசமான சரணாகதியுமாகும்"(1982).**

இவ்வகையில் இலங்கை இடதுசாரி வரலாற்றில் நவீன திரிபுவாதமாக அமைந்த ரொட்ஸ்கிய வாதத்தின் பாராளுமன்ற சந்தர்ப்பவாதம் குறித்தும் அதன் வர்க்கத்தன்மை, விளைவுகள் குறித்தும் கைலாசபதி சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இன்று தமிழ் மக்கள் மத்தியிலே போர்காலச் சூழலில் இலைமறைகாயாக மறைந்திருந்த சாதிய உணர்வு என்பது பல வடிவங்களில் முனைப்படைந்து வருகின்றன. மறுபுறத்தில் இனவாதமும் பௌத்த மேலாதிக்கவாதமும் பல முனைகளில் வளர்த்தெடுக்கப்படுகின்றன. அந்தவகையில், இன்றைய சூழலில் தமிழர்களின் வாழ்வு என்பது பல் வேறுபட்ட முரண்பாடுகளுக்கும் நம்பிக்கையீனத்திற்குள்ளும் சுழன்று கொண்டிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியத்தின் தவறை இயக்கச் செல்நெறியில் ஏற்பட்ட விமர்சன ரீதியாக அணுகி, அதன் சாதக, பாதகங்கள் குறித்து தெளிவான, தீட்சண்யமான பார்வையை வளர்த்துக் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.
வரலாற்றிலிருந்து கற்றுக் கொண்டு முன்னேற முடியும் என்ற வகையில் தமிழ்த் தேசியத்திற்கு நிகழ்ந்தது என்ன என்பதை நேர்மையோடு கற்க முனைகின்ற போது கைலாசபதியின் இலங்கையின் அரசியல் நிகழ்வுகள் பற்றிய எழுத்துக்கள் முக்கியத்துவம் மிக்கவையாகத் திகழ்கின்றன.

**(முற்றும்.)**

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்று மில்லை."

**கா.பூ-** வணக்கம் வணக்கம் முத்துத் தம்பி. அண்ணைக்கு வணக்கம். நாட்டு நடப்புகள் எல்லாம் எப்படிபோகுது. நாட்டில நடக்கிற சங்கதிகள் என்னசொல் லுது. அரசியலைப் பற்றி மகாஜனங்கள் என்ன கதைக்கினம் எண்டு கொஞ்சம் எடுத்துவிடுங்கோ.

**மு.தம்பி:-** டேய் டேய் கந்தசாமி என்னோட வாயைக் கிளறி ஏதாவது எடுக்கலாம் எண்டு யோசிக்கிறன். நான் முடிஞ்சவரைக்கும் வம்பில மாட்டிக் கொள்ளாம இருக்கிறதைத்தான் விரும்புறன்.

**கா.பூ-** அண்ணை நாங்கள் மீடியாக்காரர். நாங்கள் விரும்பியோ, விரும்பாமலோ எங்கட கருத்துக்களைச் சொல்லத்தானே அண்ணைவேணும். நாங்கள் வேண்டாம் வம்பு எண்டு ஒதுங்கியிருக்கத்தான் தும்புத்தடியள் எல்லாம் அரசியலுக்கு வந்து வம்பு பண்ணிக்கொண்டு இருக்குது.

**மு.தம்பி:-** என்னடாப்பு நீ எதையோ மனசில வைச்சு கதைக்கிறாய்போல் கிடக் குது. விளக்கமாச் சொன்னாத்தானே அது பற்றி நான் உன்னோட கதைக்கேலும்.

**கா.பூ-** அண்ணை நீங்கள்போன கிழமை யாழ்ப்பாணத்திலதானே நிண்டனீங்கள். அங்க கச்சேரியில நடந்த அபிவிருத்தக் குழுக் கூட்டத்திற்குப் பொயிருப்பியள்தானே...

**மு.தம்பி:-** அடட்ட... நீ அதையே சொல்லுறாய். அதெல்லாம் அசிங்கமான விசயங்கள் அப்பு. அங்க நடந்த அசிங்கங் களப் பார்க்கேக்க எங்கட சனத்தை நினைச்சு அழுகிறதா?, சிரிக்கிறதா எண்டு தெரியாமக் கிடந்திச்சு. அந்தளவுக்கு கேவலப்படுத்திப் போட்டினம்.

**கா.பூ-** என்ன அண்ணை நடந்தது?

**மு.தம்பி:-** அட ராசா அங்க வந்து நிண்ட முக்கால்வாசி மூ...... அங்க ஏன் வந்திருக்கிறம் எண்டதுகூட விளங்கேல்ல. அதுகளுக்குத் தெரிஞ்சதெல்லாம் சந்தர்ப்பம் கிடைச்சால் காட்டுக்கத்தல் கத்தோணும் எண்டுறதுதான். இல்லை யெண்டா அபிவிருத்திக் கூட்டத்தில இருந்து அரசியல் கதைச்சுக் கொண்டு இருக்குங்களே.

**கா.பூ-** ஆர் அண்ணை உந்த அரசியலை அதுக்கக் கிளப்பினது.

**மு.தம்பி:-** அடேயப்பா ஒருதரும் கிளப்பேல்ல. விக்கி ஐயா தலைமையுரை பேசேக்குள்ள வடக்கு மாகாணசபையைப் பற்றிக் கொஞ்சம் சொன்னவர். அதைக் கேட்டுக்கொண்டிருந்த டக்ளஸ் ஐயா தான் பேசேக்குள்ள அதுபற்றித் தன்ர கருத்தைச் சொன்னவர்.

அதுக்குள்ள பொங்கி எழுந்த தேசியத்தின்ர பாதுகாப்புத் தளபதிகள் எண்டு சொல்லிக்கொள்ளுற சிலதுகள் கீயா மூயா எண்டு கத்தத் தொடங்கிட்டுதுகள்.

**கா.பூ-** அப்படி எண்டா அண்ணை விக்கி ஐயா தலைவர் எண்ட முறையில தன்ரை ஆக்களை அடக்கியெல்லோ இருக்கோணும்.

**மு.தம்பி:-** அட நீ வேற. அந்த மனுசன் சொல்லித்தான் பார்த்தது. "நாங்கள் பேசேக்குள்ள அவையள் பேசாமத்தான் இருந்தவையள். அவையள் பேசேக்குள்ள நாங்களும் அமைதியாய் இருக்கிறதுதான் பண்பாடு" பண்பாடு எண்டால் கிலோ என்ன விலை என்று கேட்கிற கூட்டத்துக்கு அது எங்க விளங்கப்போகுது. அடங்கேல்ல.

சரி பொறுத்துப் பார்த்த அமைச்சர், தாங்கேலாம, ஒலிவாங்கியை வாங்கச் சொல்ல பிரச்சினை தொடங்கிட்டுது. அங்க நிண்டதுகள் எல்லாம் தங்கட நோக்கம் நிறைவேறின சந்தோசத்தில காயாமூயா எண்டு கத்தத் தொடங்கிட்டுதுகள். கையில கிடந்த தண்ணிப் போத்தல்கள், மைலோ பைக்கற்றுக்கள் பரஸ்பரம் எறிபட்டுக் கொண்டே இருந்திச்சினம்.

**கா.பூ-** அப்பிடி எண்டால் விக்கி ஐயா உதுகளை எல்லாம் பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்தவரோ. அவர்தானே அங்க தலைவர்?

**மு.தம்பி:-** அட, விசரன் மாதிரிக் கதைக்காதை. அந்தாள் சொல்லுறதைக் கேட்கிறதுக்கு அங்க யார்தான் இருந்தவை. அந்த மனுசன் எழும்பித் தன்ரபாட்டுக்குப் போட்டுது. ஒரு காலத்தில கையசைவில நாட்டையே எழும்பி நிக்கச் செய்த மனுசன் தன்ர இப்பத்தைய நிலைமையை நினைச்சு மனசுக்குள்ள அழுதுகொண்டு போயிருக்கும்.

**கா.பூ-** எங்கட சனத்துக்கு உதெல்லாம் வேணும் அண்ணே. ஆர் எவனுக்கு வோர்ட் போடுறது எண்டு தெரியாம வேட்பாளர் எண்டு சொல்லுற தும்புத்தடியள் எல்லாத்துக்கும் புள்ளடி போட்டதன் பலன்தான் இது.

எங்கட சனம் திருந்தும் மட்டும் உப்பிடிக் கச்சேரியல்ல, சண்டைக் கச்சேரியள் நடக் கத்தான் போகுது. அது சரி உவளவும் நடக்கேக்குள்ள அங்க நிண்ட மீடியாக்காரர் என்ன செய்துகொண்டு இருந்தனீங்கள்?

**மு.தம்பி:-** எல்லாக் கூத்துக்களையும் பார்த்து எங்கட சனத்தின்ர தலைவிதியை நினைச்சு அழுதுகொண்டுதான் நிண்டது. வேறு என்ன செய்யேலும். எல்லாம் எங்கட சனத்தின்ர தலைவிதி எண்டு வந்ததுதான்.

**"யாவும் கற்பனையல்ல"**

# நீராவிக்குக் கடிவாளமிட்டவர்




1819ஆம் ஆண்டு ஜேம்ஸ் வாட் காலமானார் தமது எண்பத்து மூன்றாவது வயதில். அதற்குள் படகுகள் நதிகளில் தமது இயந்திரத்தினால் செலுத்தப்படுவதையும், நீராவி லோகாமோடிவ்கள் சுரங்கங்களிலிருந்து வாகனங்களை இழுத்துச் செல்வதையும் கண்டுவிட்டார். பிற்காலத்தில் ரயில்வேக்களின் முன்னேற்றத்துக்கும் பல பெரிய யந்திரங்களை இயக்கவும் நீராவியின் சக்தியைப் பயன்படுத்தினார்கள். அதற்கெல்லாம் காரணமாக இருந்தது ஜேம்ஸ் வாட்டின் நீராவி இயந்திரம்தான்.

வாட் ஒரு விநோதமான பிறவி. எத்தனையோ புகழும் பொருளும் வந்து குவிந்தபோது கூட அவர் மகிழ்ந்து போய்விடவில்லை. ""எனக்கு இன்பந் தருபவை தூங்குவதும் வேலை செய்யாதிருப்பதும்தான்"" என்பார் தம் நண்பர்களிடம். ஆனால் இவர் இப்படி எப்போதும் இருந்ததே இல்லை.

குதிரைச் சக்தி (ஹோர்ஸ் பவர்) என்று கணக்கிடும் முறையை உருவாக்கியவர் ஜேம்ஸ் வாட்தான். ஸ்கொட்லாந்துக்காரரான இவருக்கு எத்தனையோ நினைவுச் சின்னங்கள் இருக்கலாம். ஆனால் ஒரே ஒரு நினைவுச் சின்னம் மட்டும் மிகவும் சிறப்பானது. ஒவ்வொரு மின்விளக்குகளிலும் இவருடைய பெயரோ அல்லது பெயரின் முதல் எழுத்தோ இடம்பெற்றிருககும். 'நாற்பது வாட், எண்பது வாட் பவர்' என்கிறீர்களே, அந்த 'வாட்' என்பது மின்சாரத்தைக் கணக்கிடும் ஓர் அளவு. ஜேம்ஸ் வாட்டைக் கௌரவிப்பதற்காக அவர் நினைவாக அவரது பெயரையே அளவிடுவதற்கு வைத்துவிட்டார்கள். ஜேம்ஸ்வாட் நீராவியின் சக்திக்குக் கடிவாளமிட்டு மனிதனின் கையில் கொடுத்தவர் மட்டுமல்ல: எந்த இயந்திரமானாலும் அது செய்யும் வேலையைக் குதிரைச் சக்திக்குக் கணக்கிட்டு அறியும் முறையை வகுத்துக் கொடுத்தவரும்கூட. ஹோர்ஸ் பவர் -குதிரைச் சக்தி என்றால் என்ன? ஒரு பலம் கொண்ட குதிரை ஒரு சராசரி வேலையைச் செய்வதானது 33,000 பவுண்டுள்ள நிறையை ஓர் அடி உயரத்துக்கு. ஒரு நிமிஷத்தில் தூக்குவதற்குச் சமம். இதுவே ஒரு குதிரைச் சக்தி எனப்படும். ஒரு நீராவி இயந்திரத்தின் சக்தியைக் கணக்கிட இந்த முறையையே வாட் கையாண்டார்.

நோஞ்சானாகப் பிறந்த ஒரு குழந்தை. உலகத்துக்கு எத்தகைய சக்தியை உருவாக்கிக் கொடுத்தது பார்த்தீர்களா?


(முற்றும்...)


# இந்தவாரம் உங்கள் பலன்

25.12.2014 தொடக்கம் 31.12.2014 வரை)

## மேடம்

மற்றவர்களின் விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்கவேண்டாம். பிள்ளைகளால் சிற்சில தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பெயர், புகழ் அடைவீர்கள். குடும்பத்தில் தடைப்பட்டுவந்த சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றிபெறுவீர்கள். வீடு மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்வதற்கு வாய்ப்புகள் உள்ளது. கண் மற்றும் காதுகளில் மிகக் கவனமுடன் இருப்பது நல்லது. கணவன், மனைவி உறவுகளில் இதுநாள் வரையில் இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## இடபம்

குலதெய்வ ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு மனநிறைவடைவீர்கள். வங்கிகளின் மூலமாக நீண்டகாலமாக எதிர் பார்த்து இருந்த பணம்கிடைக்க இன்னும் சற்றுக்கால தாமதம் ஆகலாம். குழந்தைகளின் உடல்நிலையில் மிகவும் கவனமுடன் இருக்கவும். பொருளாதாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் மிக சிரமத்தின் பேரில் சரி செய்வீர்கள். நண்பர்களால் வீண் பிரச்சினைகள்வர இருப்பதால் மிகக் கவனமுடன் இருக்கவும். உற்றார், உறவினர்களின் வரவுகளால் நன்மை அடைவீர்கள். தாய் உடல்நிலை பாதிப்பால் மருத்துவச்செலவுகள் உண்டாகலாம். தீராத நோய்கள் தீருவதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள்.

## மிதுனம்

அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிக எச்சரிக்கையாய் பேசிப்பழகவும். வெகு காலமாக விட்டுப்போன பழைய உறவினர்களுடன் தொடர்புகள் ஏற்படும். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்து சேரும் உடல்நிலையில் முதுகுமூலம் போன்ற தொல்லைகள் வந்துபோகும். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச் சொல்வர இருப்பதால் எந்த விசயத்திலும் மிகவும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. வீடு வாகனங்களைப் புதுப்பித்தலுக்காகப் புதிய கடன் வாங்குவதற்கு முயற்சிகளைச் செய்வீர்கள். மாணவர்கள் கல்வி மற்றும் விளையாட்டுக்களில் கவனமுடன் இருக்கவும்.

## கடகம்

பழைய நண்பர்களின் சந்திப்பால் ஒரு சிலருக்கு ஆதாயம் உண்டா கும். பிள்ளைகளுக்கு மருத்துவச் செலவுகள் உண்டாகும். தந்தை - மகன் உறவுகளில் இதுவரையில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து ஒற்றுமையாய் இருப்பார்கள். உடம்பில் நரம்பு மற்றும் எலும்பு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். நீண்டகாலமாக வங்கிகளில் இருந்து எதிர் பார்த்த பண உதவிகள் வந்துசேரும். நாட் பட்ட விசா பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். அரசியல்வாதிகளால் எதிர்பார்த்த ஆதாயங்கள் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ள காலமாகும். சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்கள் வாங்குவதற்கு முயற்சிப்பீர்கள்.

## சிங்கம்

தாயின் உடல்நிலை பாதிப்புக்களால் சிற்சில மருத்துவச் செலவுகள் வந்து சேரும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பணப் புழக்கத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் மாறி நல்ல முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் நடைபெறவேண்டிய சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன் வாங்குவீர்கள். தந்தைவழிச் சொந்தபந்தங்களால் எதிர்பாராத சில ஆதாயங்களை அடைவீர்கள். புதிய நண்பர்களிடம் சற்று ஏச்சரிக்கையுடன் பேசிப்பழகுதல் நல்லது. நீண்டகாலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் ஆகியன திரும்பக் கைவந்து சேரும்.

## கன்னி

புதிய வீடு மற்றும் வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் சில பின்னடைவுகள் வந்துசேரும். உடம்பில் வாயு மற்றும் வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகலாம். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பாராத சில தடைகள் வந்துபோக வாய்ப்பு உள்ளதால் மிக எச்சரிக்கையுடன் பயின்றுவருதல் நல்லது. உற்றார், உறவினர்களின் எதிர்பாராத வரவுகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் சில ஆதாயங்களை அடைவீர்கள். நீண்டகாலமாக வராமல் இருந்த பணம் மற்றும் பொருட்கள் மிகுந்த சிரமத்தின் பேரில் வந்துசேரும் காலமாகும். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம்.

## துலாம்

நண்பர்கள் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேர வாய்ப்பு உள்ளது. பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி சற்று முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். குடும்பத்தில் இது வரையில் ஏற்பட்டுவந்துள்ள மருத்துவச் செலவுகள் குறையும். பூர்வீகச் சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் நல்லதொரு முடிவுக்கு வரும். உடல்நிலையில் வயிறு மற்றும் மூல சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். காதல் சம்பந்தமான விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்துசேரும்.

## விருச்சிகம்

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு உத்தியோக உயர்வுடன்கூடிய பணி மாற்றங்கள் ஏற்படலாம். வெகுகாலமாகப் பிரிந்துபோன கணவன், மனைவி இருவரும் ஒன்றுசேரும் காலமாகும். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். தீராத நாட் பட்ட நோய்கள் தீர்வதற்காகப் புதிய பெண் மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன்மூலம் நற்பலன் அடைவீர்கள். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகக் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. பொருளாதாரத்தில் இது வரையில் இருந்த நெருக்கடிகள் மாறி முன் னேற்றமான சூழ்நிலை காணப்படும். புதிய வீடு நிலங்களை வாங்குவதற்காக வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த பணம் கைக்கு வந்துசேரும்.

## தனுசு

குலதெய்வ ஆலயங்களை திருத்திக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள். புதிய வீடு மாற்றம் செய்வதற்கான முயற்சிகளில் நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். சுபகாரிய சம்பந்தமாக வடதிசையில் இருந்து நல்ல செய்திகள் வந்து சேரும் காலமாகும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் சற்றுக்குறையும். நீண்டகாலமாகப் பிரச்சினைகளில் இருந்துவந்து பூர்வீகச் சொத்துக்கள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் கைக்கு வந்துசேரும். நீண்டதூர பயணங்களின் மூலம் எதிர்பார்த்திருந்த காரியங்கள் நிறைவேறுதற்கு வாய்ப்புகள் உள்ளது. கணவன், மனைவி உறவுகளில் காரணமற்ற சச்சரவுகள் வந்துநீங்கும்.

## மகரம்

வீடு வாகனங்களைப் பழுது பார்ப்பதன் மூலமாகப் புதிய பொருட்செலவுகள் வந்து சேரலாம். காதல் விசயங்களில் நண்பர்களின் உதவியால் நல்ல செய்திகளைப் பெறுவீர்கள். மாணவர்கள் கல்வியில் சில தடைகள்வர இருப்பதால் கவனமுடன் சென்று வரவும். நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதற்காகப் போட்ட திட்டங்களில் வெற்றி பெறுவீர்கள். கண்களில் மிகக் கவனமுடன் இருக்கவும் விளையாட்டுத் துறை சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுக்களைப் பெறுவார்கள். வராத கடன் கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் காவல்துறையினரின் உதவியால் திரும்பக் கிடைக்கும்.

## கும்பம்

தந்தை, மகன் உறவுகளில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து ஒற்றுமையுடன் இருப்பார்கள். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். வெகுநாட்களாக வராத கடன்கொடுத்துள்ள பணம் திரும்பக் கிடைக்கும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் வம்புகளை விலைக்கு வாங்காதீர்கள். வங்கிகளால் எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன் வாங்குவீர்கள். பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் சற்று குறைந்து காணப்படும். சமுதாய வளர்ச்சிக்கான விசயங்களில் ஈடுபடும்போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

## மீனம்

தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவிகள் கிடைக்கும். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் துலங்கும். உற்றார் உறவினர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் பொருட்செலவுகள் வந்துசேரும். திருமணம் போன்ற சுபகாரிய சம்பந்தமான முயற்சிகளில் சில தடைகள் வந்துசேரும். நண்பர்களால் வீண் பொருட்செலவுகளும் மனநிம்மதி இன்மையும் ஏற்படலாம். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். மற்றவர்களிடம் இருந்த எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கக்கூடிய காலமாகும். பெண் சம்பந்தமான காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது.






## சாதனை

லித்வேனியா நாட்டு வாலிபர் ஒருவர் 10 இலட்சம் லிட்டாஸ் நாணயங்களை வைத்து பிரமிட் அமைத்து உலக சாதனை படைத்துள்ளார்.

லித்வேனியாவில் வரும் ஜனவரி 1ம் திகதி முதல் யூரோ பயன்படுத்தப்பட உள்ளதால், அந்நாட்டின் நாணயமான லிட்டாஸ் இனிமேல் பயன்படுத்தப்படமாட்டாது. இந்நிலையில் 26 வயது வாலிபர் டாமஸ் ஜோகுபாவ்ஸ்கிஸ், தமது நாட்டின் பணம் உலக அளவில் நினைவில் இருக்கவேண்டும் என்று லிட்டாஸ் நாணயங்களை கொண்டு பெரிய பிரமிட்டை உருவாக்க எண்ணியுள்ளார். இதற்காக ஒரு மில்லியன் நாணயங்களை சேகரித்து ஒரு வாரம் செலவழித்து 1 மீற்றர் உயரமுள்ள பிரமிட்டை உருவாக்கி சாதனை படைத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், இதற்கு முன்னதாக 6 இலட்சம் நாணயங்களை கொண்டு பிரமிட் உருவாக்கப்பட்டது உலக சாதனையாக இருந்தது.



## வித்தியாசமான முயற்சி



சில தருணங்களில் சாலையில் காணப்படும் பிரச்சினைகளைக் கண்டும் காணாதவாறு நமக்கென்ன என்று சென்றுவிடுபவர்களின் மத்தியில் இங்கு ஒரு மனிதர் சாலையை சரி செய்வதற்கு வித்தியாசமான முயற்சியை மேற்கொண்டுள்ளார். அமெரிக்காவின் சிகாகோவில் வசிக்கும் ஜிம் பாச்சர் ((Jim Bachor) மனதில் ஒரு திட்டம் தோன்றியது. சாலைகளைச் சீர்செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்காமல், அதிகாரிகளுக்கு எதிராக தன் எதிர்ப்பை புதுமையாகத் தெரிவித்துள்ளார். எப்படித் தெரியுமா? சாலையில் எங்கெங்கே குழிகள் இருக்கிறதோ, அங்கெல்லாம் சீமெந்து, மொசைக் கொண்டு யாருடைய உதவியும் இல்லாமல், அழகழகான டிசைன்களால் சாலைக் குழிகளை மூடினார்.

சாலையில் ஆங்காங்கே மொசைக் பூசப்பட்டதைக் கண்ட சிக்காக்கோ மக்கள், "அடடா! பார்ப்பதற்கு அழகாக இருக்கிறதே. இது யார் செய்தது" என்று பேச ஆரம்பித்துவிட்டனர். விஷயம் தெரிந்து, அவரைப் பாராட்டவும் செய்தனர். ஜிம் பாச்சர் செய்த இந்த வேலை மக்களிடம் வரவேற்புப்பெறவே, சம்பத்தப்பட்ட அரசாங்க அதிகாரிகள் விழித்துக்கொண்டு, கடகடவென சாலைகளைச் சீர்செய்யும் வேலையில் இறங்கிவிட்டனர்.

---

ஒரு வீட்டில் "13000 கோடி" அதிசயம் ஆனால் உண்மை. மும்பையில் வீரார் பகுதியில் பாய் தாகூர் என்பவர் வீட்டிலும், அலுவலகத்திலும் வருமான வரித்துறையினர் நடத்திய சோதனையில் 13000 கோடி பணம் பறிமுதல் செய்யப்பட்டது. இதுதான் இந்தியாவிலேயே மிகப்பெரிய கறுப்புப் பணம் மீட்பு என்று கூறப்படுகிறது.



கனடா- சஸ்கற்சுவானை சேர்ந்த ஒருவர் உட்பட்ட ஆய்வாளர்கள் குழு ஒன்று உலகிலேயே மிக பழமையான மனித புற்றுநோயாளி எனக் கருதப்படும் ஒருவரின் உடலை கண்டுபிடித்துள்ளனர்.

சைபீரியாவில் தோண்டி எடுக்கப்பட்ட மனிதன் ஒருவரின் எலும்புகள் 4,500 ஆண்டுகளிற்கு முற்பட்டதெனவும் இவருக்கு நுரையீரல் அல்லது புரொஸ்டேட் புற்றுநோய் கண்டிருக்கலாம் எனவும் இது இடுப்பில் இருந்து தலைவரையும் உடம்பின் ஊடாக பரவும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவர் 35 முதல் 45 வயதிற்கிடைப்பட்ட காலப்பகுதியில் இறந்திருப்பார்.

இதுவே மிகப்பழமையான புற்று நோயாகும் என சஸ்கற்சுவான் பல்கலைக் கழக ஆய்வாளர் அஞ்ஜெலா லிவேர்ஸ் தெரிவித்துள்ளார். இந்த மனிதன் ஒரு காட்டுவாசி என்றும் குளிர் காலநிலையில் சூடாக இருப்பதற்கு மரங்களினால் தீ மூட்டியிருக்கலாம் என்றும் அடிக்கடி புகை உள்ளிழுக்கப்பட்டதனால் அவருக்கு நுரையீரல் புற்றுநோய் கண்டிருக்கலாம் என கருதப்படுகின்றது.

எலும்புக்கூட்டை முதன்முதல் கண்டதும் புற்றுநோயினால் ஏற்பட்ட அடையாளங்களை கண்டுகொண்டதாகவும் அஞ்ஜெலா தெரிவித்துள்ளார். இவர் தன்து சமுதாயத்தில் ஒரு தனித்துவமான வாழ்க்கை வாழ்ந்து இருக்கவேண்டும் என்றும் தாங்கொணா மரணவேதனை அனுபவித்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





## அதிசயம் ஆனால் உண்மை



இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அம்புஜன் அச்சகத்தில் ட.டி. என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டட் ஸ்தாபனத்தாரால் டிசம்பர் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

நத்தார் வாழ்த்துக்கள்
Aqua Mint தண்ணீர் போத்தல்
யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்
A.ANTON DISTRIBUTORS
0770487744 0779829617
0776130772
யாழ். நகருக்குள் விநியோகம் இலவசம்
விசேடமாக வீடுகளுக்கு 19l
(R/385)

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 10 வியாழக்கிழமை (25.12.2014) பக்கங்கள் 04+IV ஓசை – 086

## நத்தார் தினத்தை நம்பிக்கையோடு வரவேற்போம்



(யாழ்ப்பாணம்)

எமது மக்கள் வாழும் நம்பூமி எமக்கென்றே வாக்களிக்கப்பட்டது. இங்கு நிரந்தர சமாதானமும், நீடித்த மகிழ்ச்சியும் நிலவ வேண்டும் என்பதோடு, சமாதானத்தை அனுபவிக்கும் எமது மக்களுக்கான சமவுரிமை பெற்ற வாழ்வையும் பெற்றெடுப்போம் என்ற நம்பிக்கையோடு ஒளிபிறந்து இருள் விலகிய நத்தார் தினத்தை அகம் மகிழ்ந்து வரவேற்போம் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த நத்தார் தின வாழ்த்து செய்தியில், கருணை மைந்தன் இயேசு பாலன் பிறப்பெடுத்த நத்தார் தினத்தை உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்கள் கொண்டாடி மகிழ்கின்றனர். இந்த மகிழ்ச்சியை எமது மக்களும் அனுபவித்து கொண்டாட வேண்டும். அதற்கான நம்பிக்கையை நான் வழங்குகின்றேன்.

பிறந்திருக்கும் சமாதான ஒளியை நாம் இழந்து விடாதிருக்க, மறுபடியும் எமது மக்கள் கற்பாறைகளுக்கும், முட்செடிகளுக்கும் நடுவில் தமது வாழ்வை தொலைத்து விடாதிருக்க, நான் காட்டும் 04 ஆம் பக்கம் பார்க்க

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்ட மோதல்; ஜனவரி 16 இல் வழக்குத்தாக்கல்

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவம் தொடரபில், செய்திருந்த முறைப்பாட்டுக்கு அமைய வழக்கு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று மக்கள் பிரதிநிதிகளுக்கு அழைப்பாணை அனுப்பியிருந்தனர். இது தொடர்பான விசாரணை நேற்றைய தினம் இடம்பெற்றது. இதில், பா.கஜதீபன், எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் காரை நகர் பிரதேச சபைத் தவிசாளர் வே.ஆனைமுகன் ஆகியோர் நேற்று தமது வாக்கு மூலங்களைப் பதிவு செய்தனர். எனினும் தாம் 8 பேருக்கு அழைப்பாணை அனுப்பியிருந்தனர் என்றும், 04 ஆம் பக்கம் பார்க்க



அனைவருக்கும் இனிய நத்தார் தின நல்வாழ்த்துக்கள்...
- தினமுரசு குடும்பம் -

## • நாட்டைப் பிரிக்கும் ஒப்பந்தத்தை கண்டித்து

# ஸ்ரீகோத்தாவில் ஆர்ப்பாட்டம் மோதலில் 20 பேர் காயம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவுக்கு முன்னால், ஏற்பட்ட மோதலில் இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ஐ.தே.க.வின் தலைமையகத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடாகியிருந்த நிலையில், அமைச்சர் விமல் வீரவன்சவின் ஆதரவாளர்கள் மற்றும் தேசிய ஒத்து ழைப்பு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரி மற்றும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் இரகசிய ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டதாக கூறியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், யுத்தக் குற்ற நீதிமன்றத்திற்கு வாய்ப்பளித்து நாட்டை சீரழிக்கின்றனர், வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை நீக்கி பிரிவினைவாத சம்பந்தருக்கு 04 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு யாருக்கு ஆதரவு நாளை மறுதினம் அறிவிப்பு வெளியாகும்

இரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. நாளை மறுதினம் 27 ஆம் திகதி கூட்டமைப்பின் நிலைப்பாடு யாருக்கு என்பது குறித்து வெளியிடப்படும். இந்த வாரக் கடைசியில் இந்தியாவில் இருந்து நாடு திரும்பும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனே இறுதி முடிவை எடுப்பார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த் விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கூட்டணிக் கட்சிகளுடனும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கட்சிப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடினோம். 04 ஆம் பக்கம் பார்க்க

## குஷ்டரோகியாக கூட்டமைப்பினரை ஒதுக்கியுள்ள பிரதான வேட்பாளர்கள்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான இரு வேட்பாளர்களும் குஷ்டரோக •நோயாளியைக் கண்டு ஒதுக்குவதைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஒதுக்கி வைத்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மன்னார் தாழ்வுப்பாடு வீதியில் அமைந்துள்ள ஆஷ் ஹோட்டல் மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு தெரிவிக்குமாறு ஆளும் கட்சி வேட்பாளர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவோ, எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைக் கோரவில்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். வடமாகாண மக்களின் பிர்திநிதிகள் எனக் கூறிக் கொண்டிருக்கும் தமிழ்க் கூட்டமைப்பினரின் சுயலாப செயற்பாடுகளாலும், தமிழ் மக்கள் மீதான அவர்களின் அக்கறையின்மையாலுமே இந்தத் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை நிராகரித்துள்ளதாகத் தெரிவித்தார்.

தமிழ் பேசும் மக்களின் துயரைத் துடைத்துள்ள ஒரு அரசியல் தலைவரென்றால் அது மகிந்த ராஜபக்ஷ மாத்திரமே. மத்திய அரசாங்கத்திலிருந்த கடந்த காலத் தலைமைகள் தமிழ் பேசும் மக்களிடம் 04 ஆம் பக்கம் பார்க்க

நீங்களென்ன சொல்லுறது...
ஜனவரி 1-ல இறங்கிறன் காணத்
தயாராகுங்கோ...





இன்னும்
6
நாட்கள்

## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.
(C/3930)

### விற்பனைக்கு

நல்லின பசு மாடும் கன்றும், நல்லின சணல், யமுனாபாரி ஆடுகளும், ஆட்டெரு, பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி (யப்பான்), சொனி TV29", (யப்பான்) மொறிஸ் மைனர் கார், $2^1/_2$ பரப்புக் காணி (நல்லூரடி) என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779181018
(R/386)


# பொலிஸ் நடமாடும் சேவை

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸாரின் ஏற்பாட்டில் பொலிஸ் நடமாடும் சேவை இன்று இடம்பெறுகின்றது.

கலிகை கந்தன் கலாசார மண்டபத்தில் பி.ப. 2.00 மணிக்கு இச்சேவை இடம்பெறுகின்றது. இதில் 9 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது.

இதில் பொதுமக்களை கலந்துகொண்டு பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளன. (18)

# பவள விழா மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையின் ஏற்பாட்டில் பவளவிழா மலர் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆசியுரையினை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், ஈழத்துச் சிதம்பர பிரதம குரு சிவஸ்ரீ வி.ஈஸ்வரக் குருக்களும் வழங்குவர்.

வரவேற்புரையினை ஓய்வுநிலை அதிபரும் காரைநகர் மணிவாசகர் சபையின் உபதலைவருமான க.தில்லையம்பலம் வழங்குவார். முதற் பிரதியை ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தா மு.சுந்தரலிங்கம் பெற்றுக் கொள்ள மலரின் வெளியீட்டுரையினை பேராசியர் எஸ்.சிவலிங்கராஜா வழங்குவார்.

மலருக்கான ஆய்வை செந்தமிழ் சொல்லருவி லலீசன் வழங்குவார். சிறப்புரையினை பேராசிரியர் வே. தர்மரத்தினமும், பிரதம உரையினை பேராசிரியர் இ. குமாரவடிவேலும் வழங்கவுள்ளனர்.

நிறைவுரையினை காரைநகர் மணிவாசகர் சபையின் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுத பிள்ளை வழங்குவார். (48)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### FACULTY OF MEDICINE

### Academic programme

The Inauguration Programme for the New Batch (2013 A/L) of Medical Students scheduled for 5th January 2015 has been postpond to Monday 12th January 2015. due to the unavoidable circumstances.

Please note the change of date.

**Registrar,**
**University of Jaffna.** (C/3963) **23.12.2014**


# டெங்கு நோய்க்கு சிகிச்சை பெற அறிவுறுத்து

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் தற்போது தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட சில நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று அவர்களது உடல் மோசமடைந்த நிலையில் அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. இதனால் தேவையற்ற உயிரிழப்புக்களும், பின்விளைவுகளும் ஏற்படுகின்றன. எனவே டெங்கு நோய் என சந்தேகிக்கும் நோயாளர்கள் காலம்தாழ்த்தாது உடனடியாகவே அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும்படி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.


நத்தார் வாழ்த்துக்கள்

## முத்தையா வெதுப்பகம்



373, Main st,
Chundukkuli.
T.P. 077 1310841
(C/3945)

## FRENCH LANGUAGE CENTRE
## REGISTERED FRENCH CENTRE.
FLC

## FRENCH வகுப்புக்கள்

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Swiss, Belgium செல்வோர் பெற்றுக் கொள்ளலாம்... 865 மாணவர்கள் French கற்றுள்ளனர்.

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொண்ட வரும்)

கடந்தOctober DELF A1 Exam இல் எம் நிறுவன மாணவர்களே அதிகமானோர் தோற்றி 100% சித்தியடைந்தனர்.
Audio, Video மூலம் கற்பித்தல்.. மாணவர்களுக்கு கற்றல் Materials FREE
எமது ஆசிரியரின் வகுப்புக்கள் யாழில் ஆரியகுளம் மற்றும் நெல்லியடியில் மட்டுமே நடைபெறுகிறது...

No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) ஆரம்பம்: 03.01.15 @ 8am
ஆரம்பம் : 05.01.15 3.45pm No.181, 1st Floor, Main Street, Nelliady.
021 320 2973
0779 789 456

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

வெற்றி வாரம் - 319
திகதி - 2014.12.23
வர்ணம் - மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் / ஆங்கில எழுத்து

01 04 15 62 A

பரிசுத் தொகை ரூபா. 19,933,860/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 10 | 500,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 188 | 188,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 410 | 410,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8321 | 499,260/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4275 | 171,000/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 105606 | 2,112,120/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 15250 | 305,000/- |
| நான்கு இலக்கங்களை மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 19,933,860/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,185,380/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 20,140,800/-

2014.12.26ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்
வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk
(C/3918)

இனிய நத்தார் வாழ்த்துக்கள்

## பனை அபிவிருத்திச் சபை

තල් සංවර්ධන මණ්ඩලය

## PALMYRAH DEVELOPMENT BOARD

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

பனை அபிவிருத்திச் சபையினால் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யப்படும் பிரதான பனம் பொருள் உற்பத்திகள்

- பனங்களி
- பனம் கோடியல்
- பனம் பானம்
- பனங்காய் ஜாம்
- பனங்கட்டி
- பனம்பாணி
- பனாட்டு
- பாணிப்பனாட்டு
- கல்லாக்காரம்
- பனங்காய்ப் பலகாரம்
- ஒடியல்
- ஒடியல்மா
- புழுக்கொடியல்
- புழுக்கொடியல் மா
- பாம்போஷா
- கைவினைப் பொருட்கள்
- தும்பு உற்பத்திப் பொருட்கள்
- பற்பசை
- மற்றும் ஏனைய பனை சார்ந்த உற்பத்திகள்

பனை வளம் எம் வாழ்வையும் தேசத்தையும் வளப்படுத்தும் !

பனை அபிவிருத்திச் சபை தலைமைக் காரியாலயம்

தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடம், முதலாம் மாடி, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (C/3958)

தொலைபேசி இலக்கம் : 021 2222034.
தொலைநகல் : 021 2224154
மின்னஞ்சல் : slpdbho@yahoo.com
இணையதளம் : www.katpahachcholai.com

## தவறியோருக்கு சந்தர்ப்பம்

யாழ். மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பு இடம்பெற்று வரும் நிலையில் வாக்களிக்காதவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி வாக்களிப்பதற்கு விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தபால்மூல வாக்களிப்பு நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்றது. இந்நிலையில் வாக்களிக்காத அரச பணியாளர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் விசேடமாக அமைக்கப்படும் வாக்குச்சாவடியில் தமது வாக்குகளைப் பதிவு செய்ய முடியும்.

மேலும் இரண்டு நாட்களும் வாக்களிக்க தவறுபவர்களது வாக்குச்சீட்டுக்கள் நாளை முதல் யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்களத்தில் சேகரிக்கப்படும்.

இவ்வாறு சேகரிப்பட்ட வாக்குகளை கொண்டு மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்து தமது வாக்குகளை பதிவு செய்ய முடியும் என யாழ்.மாவட்ட தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, நேற்று நடைபெற்ற தபால் மூல வாக்களிப்பில் வடக்கில் 60 வீதமான வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கீள் திணைக்களம் அறிவித்துள்ளது. (25)

## மழைக் காலநிலை நாளை வரை நீடிக்கும்

(யாழ்ப்பாணம்)

நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்டுள்ள கடும் மழையுடனான காலநிலை நாளை வரை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கையின் வடகிழக்கே ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக வடக்கு, கிழக்கு, மத்திய, வடமத்திய, தென் மாகாணங்களில் மழை தொடர்வதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து கொழும்பு வளிமண்டலவியல் திணைக்கள வானிலை அதிகாரி ஏ.எம்.முஹம்மது சாலிஹீன் தெரிவித்தவை வருமாறு,

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை தொடர்கிறது.

அடுத்துவரும் 36 மணித்தியாலயங்களுக்கு இந்த நிலை தொடர வாய்ப்புள்ளது.

இதன்படி நாளை வெள்ளிக்கிழமைக்கு பின்னரே மழை குறைவடையும் சாத்தியம் உள்ளது. ஏனைய மாகாணங்களிலும் காற்றுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியப்பாடுகளே அதிகமுள்ளன என்றார்.

## பொறுப்புணர்ந்து வாழ்த்துவோம்

(யாழ்ப்பாணம்)

நவீன உலகில் கிறிஸ்மஸ் தினத்தை வெகு விமரிசையாக இன, மத, மொழிக் கப்பால் ஒன்றிணைந்து உலகமே கொண்டாடி மகிழ்கின்றது.

இறைமகன் மாடடைக் குடிலில் மரியன்னை மடியில் மனுவுருவாகப் பிறந்தார் என்பதனை கொண்டாடும் நத்தார் விழா வாழ்த்துக்களாலும், விருந்தோம்பல்களாலும் சிறப்புப் பெறுகிறது.

அன்று இயேசு பாலன் பிறப்பதற்கு சத்திரத்திலும் இடமில்லை என்று புறக்கணிக்கப்பட்டவர்.

இன்று சரித்திர நாயகனாக உலகமே அறிந்து கொண்டாட பிறப்பின் செய்தி ஏழை இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

தொடர்பூடகங்கள் எதுவுமின்றிய சூழலில் வாய்மொழியாக பகர்ந்தவை இன்று 2014ஆம் ஆண்டு வரை இல்லங்களிலும் எம் உள்ளங்களிலும் நினைவு கூரவைத்ததை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லும் பொறுப்புக்களும் கடமைகளும் எமக்குத் தரப்பட்டுள்ளதை ஏற்று இயேசு பாலனின் சாயலில் எம்முன் துன்புறும் மக்களின் துயர் துடைப்பதிலும் எமது அன்பையும், இரக்கத்தையும் செயலில் காட்டி வாழ்த்த எம் வாழ்த்துக்களை அர்த்தமுள்ளதாக்கி வாழ்த்துக் கூறுவோம் என கத்தோலிக்க கலை இலக்கிய வட்டச் செயலாளர் செ.யோசப் பாலா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | வியாழக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | மக்கள் முகம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

DDTV யின்
மாபெரும் இசை உலா....
யாழ்.முன்னணி இசைக்கலைஞர்கள் பங்குபற்றும்
ஈழத்து இளைய சௌந்தரராஜன் ஏ.அருள்ஜோதியின்
இசை நிலா இசைக்குழு
இடம் : மாவிப்பாய் செல்லமுத்து மைதானம்
காலம் : 25.12.2014, நேரம் : 06.00 - 09.00
நீங்களும் இந் நிகழ்வில் பங்குபற்றுவதற்கு ஓர் அரியசந்தர்ப்பம்....
☐ நீங்கள் பாடும் திறமை கொண்டவரா
☐ நீங்கள் நடிப்புத் திறமை கொண்டவரா
☐ நீங்கள் பல்குரல் வித்தகரா
☐ நீங்கள் சிறந்த அறிவிப்பாளரா
"உள்ளூர் கலைஞர்களை ஊக்குவித்தலும் அவர்களுக்கான களம் அமைத்தலும்"
ஊடக அனுசரணை
தினமுரசு
தொடர்பு : 021 222 6036
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்






# நத்தார் வாழ்த்துக்கள்



இருளிலில் இருப்போருக்கு ஒளியாய், ஆதரவு அற்றோருக்கு அடைக்கலமாய், உலகத்திற்கு அன்புத் தெய்வமாய் பாலன் யேசு பிறந்த இந்த இனிய நன்நாளை நத்தார் பண்டிகையாக கொண்டாடும் அனைவருக்கும் எனது இனிய நல்வாழ்த்துக்கள் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



பாரில் பாலன் அவதரித்த இத்திருநாளில் தமிழ் பேசும் கிறிஸ்தவர்கள் மாத்திரம் அல்லாது சகல கிறிஸ்தவர்களின் வாழ்வும் நலம் பெற வேண்டுமென ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தனது நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். பாவச்சுமை நீக்கி பாலகன் பிறந்த இத்தினத்தில் நாங்களும் மற்றவர் வாழ்வில் துன்பங்கள் நிகழ்த்தாமல் தீமைகள் செய்து பாவங்களை அதிகரிக்காமல் அவர் வாழ்விலும் நலம் அழிக்கும் நன்மைகள் செய்வோம் என மனதால் ஒன்றுப்படுவோம் எனத் தெரிவித்துள்ளார்.



இயேசு கிறிஸ்துவின் அரவணைப்பு ஏழைகளுடனும் சாதாரண மக்களுடனும் இறுக்கமான பிணைப்பைக் கொண்டது. அத்தகைய அன்பு உலகில் வாழும் எல்லா ஜீவராசிகளையும் தழுவியதாக இந்த ஆண்டு பிறந்துள்ள யேசு பிறப்பு அமையவேண்டும் என யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) விடுத்துள்ள நத்தார் பண்டிகை வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீகோத்தாவில்...

துணை போகின்றனர், நாட்டைப் பிரிக்கும் திருட்டு ஒப்பந்தம் கைச்சாத்து போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கியிருந்தனர்.

அத்துடன், மைத்திரியை தலையாட்டி பொம்மையாகச் சித்தரித்து, அதனை ரணிலும், சந்திரிக்காவும் ஆட்டுவிப்பது போன்ற கேலிச்சித்திரமொன்றையும் ஏந்தியிருந்தனர். இதனையடுத்து, இவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.தே.க.வின் ஆதரவாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர். இதன்போது இருதரப்பினரும் கற்கள், தடிகள், மரக்கட்டைகள், மற்றும் கழிவு எண்ணெய் ஆகியவற் றைக் கொண்டு தாக்குதல் நடத்தினர். வாகனங்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது. பதாதைகள் தீயிட்டு கொளுத்தப் பட்டன. எனினும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை இது வரை சரியாக வெளியிடப்படவில்லை. சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் மற்றும் விஷேட அதிரடிப்படையினர், நீண்ட நேர போராட்டத்திற்கு மத்தியில் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரியும் ஐ.தே.க. தலைவர் ரணிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் அடங்கிய இரகசிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளதாக, ஐ.தே.க.வின் முன்னாள் பொதுச் செயலாளரும் தற்போதைய சுகாதார அமைச்சருமான திஸ்ஸ அத்தநாயக்க, ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கூறியிருந்தார். இதனையடுத்து, ஆளும் மற்றும் எதிர்த்தரப்பினரிடையே தொடர்ச்சியாக முறுகல் நிலை ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஒருங்கிணைப்பு....

ஏனைய 5 பேரும் வாக்கு மூலத்தை பதிவு செய்யவேண் டும் என்றும் பொலிஸார் தெரி வித்தனர்.

அத்துடன் அவர்கள் ஐவரை யும் ஜனவரி 12 ஆம் திகதி வாக்குமூலம் அளிக்க பிரசன்ன மாக வேண்டும் என்றும் தெரி வித்தனர். அதன்பின்னர் தாம் 16 ஆம் திகதி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வர் என்றும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

## நம்பிக்கையோடு...

நடைமுறை யதார்த்த வழி முறை என்பது சத்திய வாக்குகள் போன்றவை. அவை என்றும் தோற்பதில்லை. எனது தீர்க்க தரிசனங்களும், உண்மை வழி ஊடாக நாம் செல்லும் பயணமும் நம்பிக்கை தரும் வல்லமை படைத்தவை.

எமது மக்கள் வலிபட்டு, வதைபட்டு, வருத்தப்பட்டு பாரங்களை சுமந்து பெற்றுக்கொண்டதே இந்த சமாதான சூழல். இதை நாம் பாதுகாக்க வேண்டும். மேலும் வளர்த்தெடுக்க வேண்டும். இனிவரும் காலமும் நல்லதொரு வெற்றிக்கனி தரும் காலம் என்ற நம்பிக்கை எம்மிடம் உண்டு.

அதற்கான உறுதியும், உண்மை வழியும், ஓயாத உழைப்பும் எம்மிடம் உண்டு. சமாதானத்தை விரோதிப்பவர்கள் சமாதானம், சமவுரிமை என்று பேசிக்கொண்டே சாத்தான்கள் போல் வேதம் ஓதி வருவார்கள். அவர்கள் குறித்து விழிப்புடன் இருங்கள். எமது மக்களாகிய உங்களுக்காக நாமும் உங்களுடன் சேர்ந்தே பாரச்சுமைகளை சுமப்பவர்கள்.

எமது முதுகு வலித்தாலும், சேற்றை வாரி எம் மீது யார்தான் வீசினாலும் சமாதானத்தையும் சமவுரிமை சுதந்திரத்தையும் நோக்கிய எமது பயணம் ஒரு போதும் நின்றுவிடப்போவதில்லை.

அவலங்கள் இல்லாத, அழுகுரல்கள் எங்கும் கேட்காத, பஞ்சம் பசி இல்லாத, யாரையும் யாரும் அடிமை கொள்ளாத சமாதான, உரிமை தேசத்தின் இராட்சியத்தையே நான் விரும்புகின்றேன்.

எமது மக்களின் நிரந்த மகிழ்ச்சிக்காக இதுவரை கிடைத்த வாய்ப்புகள் யாவும் பன்றிக்கு முன்பாக வீசப்பட்ட முத்துக்களாகவே வீழ்ந்து கிடந்திருக்கின்றன.

எமது மக்கள் எந்த சாத்தான்களாலும் சபிக்கப்பட்ட இன சமூகமல்ல என்பதை உலகத்தின் கண் முன்பாக அடையாளப்படுத்த சத்தியத்தின் வழிநின்று சந்தர்ப்பங்களை பயன்படுத்த வாருங்கள்!

இவ்வாறு தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நத்தார் தினத்தை மகிழ்ச்சியோடு கொண்டாடும் மக்களுக்கு நம்பிக்கையின் ஒளியாக என்றும் இருப்பேன் என்றும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

# வெள்ளத்தில் மூழ்கியது மன்னார்; தரைவழிப் போக்குவரத்து பாதிப்பு



மன்னார் - மதவாச்சி, யாழ்ப்பாணம் - மன்னார் வீதிகளில் மன்னாருக்கு உள்நுழையும் பகுதிகளில் வெள்ளநீர் பெருக்கெடுத்துப் பாய்வதால் தரைவழிப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

ஏ-32 வீதியில் இலுப்பக் கடவை, பாலியாறு ஆகிய பகுதிகளில் வெள்ள நீர் வீதிக்கு மேலாக பாந்து ஓடுவதால் அவ் வீதியூடாகக் கனரக வாகனங்கள் மட்டுமே பயணம் மேற்கொள்ள கூடியதாகவுள்ளது.

இதேபோன்று மன்னார் மதவாச்சி பிரதான வீதியும் நீரில் மூழ்கியுள்ளதால் பாதை துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் வெளி மாவட்டங்களுக்கு செல்வோர் பரப்புகடந்தான் வீதியூடாக செல்லுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர். எனினும் இந்த வீதியூடாக கனரக வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதேவேளை மன்னார் கட்டுக்கரை குளத்தின் நீர் மட்டம் 12.5 அடியாக அதிகரித்துள்ளதால் அதன் வான் கதவுகள் திறக்கப்படவுள்ளன எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக 2 ஆயிரத்து 434 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 979 பேர் இடம் பெயர்ந்துள்ளனர் இவர்கள் 39 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.





நத்தார் தினத்தை முன்னிட்டு யாழ். மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் திருப்பலி ஒப்புக்கொடுப்பதையும், கலந்துகொண்டவர்களையும் காணலாம். (படங்கள் - இ.இராஜகுமார்)

# வர்த்தக கண்காட்சி ஜனவரியில்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஆறாவது தடவையாகவும் ஜனவரி மாதம் 23,24,25 ஆம் திகதிகளில் யாழ். மாநகரசபை திறந்தவெளி மைதானத்தில் நடத்தப்படவுள்ளது என்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழில் துறை மன்றம் அறிவித்துள்ளது.

மன்றச் செயற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கும் ஊடக மாநாடு நேற்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்ற மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த ஊடக மாநாட்டில் மன்றத்தின் தலைவர் கே.விக்னேஸ் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தமது மன்றம் செயற்படுகிறது என்றார்.

இதன்படி ஆறாவது தடவையாகவும் எதிர்வரும் ஜனவரி மாதம் வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

இதில் 250 இற்கும் மேற்பட்ட விற்பனை மற்றும் காட்சிக்கூடங்கள் அமைக்கப்படவுள்ளன. இந்த கண்காட்சியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 உள்ளூர் உற்பத்தி நிறுவனங்களும், வெளி மாவட்டங்களிலிருந்து 180 நிறுவனங்களும் பங்குபற்றவுள்ளன.

அத்துடன் உள்ளூர் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் பொருட்டு தென்னிலங்கை ஏற்றுமதியாளர்களை இணைத்து யாழ்ப்பாணத்தில் பல்வேறு செயற்றிட்டங்களையும் தாம் ஆரம்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். (25)

## கூட்டமைப்பு...

இதற்காக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பில் எங்கள் கட்சியினருக்கான கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால் எங்களின் நிலைப்பாட்டை சம்பந்தனின் வருகையின் பின்னரே அறிவிப்போம் என்றார். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சிகிச்சைக்காக இரு வாரங்களுக்கு முன்னர் இந்திய மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## குஷ்டரோகியாக...

மாற்றாந்தாய் அணுகுமுறையையே மேற்கொண்டிருந்தனர்.

தற்போதைய ஜனாதிபதி இந்த நிலைமையை மாற்றி யுத்தத்தினால் பின்னடைவை எதிர்நோக்கியிருந்த எமது வடமாகாணத்தை குறுகிய காலத்தில் மீளமைத்து, மக்களின் வாழ்வாதாரத்தையும் அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் சென்றார் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவும் உரையாற்றினார். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் லிங்கேஸ், பிரதி அமைப்பாளர் சந்துரு ஆகியோர் கலந்து கொண்டனர்.


## பக்க வடிவமைப்பாளர் தேவை

தினமுரசு நிறுவனத்தில் பணிபுரிவதற்கு பக்கவடிவமைப்பாளர் தேவை

**CorelDraw, Pagemaker, Photoshop,** ஆகியவற்றில் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

பயில விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். அலுவலக நேரத்தில் உரிய ஆவணங்களுடன் நேரில் சமூகம் தரவும்.

ஆளணி முகாமையாளர்

(இ)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# நத்தார் புதுவருட சிறப்புமலர் - 2014

## யாழ். ஆயரின் கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துச் செய்தி

### "வார்த்தை மனுவுருவானார். நம்மிடையே குடிகொண்டார்"

(யோவான் 1:14)



பர்லக இயேசுவின் நாமத்தினால் எனது இனிய வாழ்த்துக்கள்! மீண்டும் எல்லாம் வல்ல இறைவன் நம் ஆண்டவர் இயேசுவின் பிறப்பின் மகிழ்வைக் கொண்டாட இவ்வருடமும் தந்த வாய்ப்புக்காக நன்றி கூறுவோம்.

கடந்த காலங்களில் பல கஷ்டங்களை நெருக்கடிகளை குறிப்பாக யுத்தத்தின் பாதிப்புக்களை நாம் அனுபவித்து அவற்றில் இருந்து படிப்படியாக மீண்ட மக்களாக வாழ்ந்து வரினும், இன்றும் பல்வேறு பட்ட புதிய புதிய வேண்டத்தகாத விடயங்கள் எம் சமூகத்தை, நாட்டை ஆட்கொள்வதை நாம் எல்லோரும் அறிவோம்.

ஒழுக்கக்கேடான வாழ்க்கை முறை, குடிபோதைகள், கடத்தல்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், உலகபோக்கின் நாகரீக மோகத்தால் இறைவனை மறந்த வாழ்க்கைமுறை, புதுப்புது நோய்கள், காணாமற்போனவர்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலை இவ்வாறு பல வருந்தத்தக்க நிகழ்வுகள் காணப்படுகின்றன.

இருப்பினும் இறைவனின் அன்பு எம்மை ஒரு போதும் கைவிடுவதில்லை. அவர் மனுவுருவாகி இன்றும் நம்மிடையே குடிகொண்டு வாழ்கிறார். எம் வாழ்வின் அனைத்தையும் அறிந்தவராக அமைதியை எமக்கு அளிப்பவராக அவர் இருக்கிறார். எம் நிறை குறைகளை அறிந்தவராக தம்மை நோக்கி வருபவர்களுக்கு ஆசீர் அளிக்கும் இறைவனாக அவர் உள்ளார். இதையே கிறிஸ்து பிறப்பு எமக்கு எடுத்துக்காட்டுகிறது. எனவே எம் எல்லாக் குறைகளையும் அவர் பாதத்தில் வைத்து உடல், உள, ஆன்மீக நலன்களால் குழந்தை இயேசு எம் ஒவ்வொருவரையும் இப்புதிய வருடத்தில் ஆசீர்வதிக்க வேண்டுகின்றேன்.

இவ்வருடத்தில் குடும்பங்களில் அர்ப்பண வாழ்வைப் பற்றி சிந்திக்கவும் சிறப்பாக துறவற வாழ்வுக்கு புதியவர்களை ஊக்குவிக்கவும் நல்முயற்சிகளை முன்னெடுப்போம்.

எமது கிறிஸ்தவ வாழ்வுக்கு ஊக்கம் அளிக்க புத்தாக்கம் தந்து உற்சாகம் ஊட்ட எமது பரிசுத்த தந்தை பிரான்சிஸ் அவர்களது இலங்கை விஜயம் அமைதியாக நடைபெற்று அனைத்து மக்களும் எமது நாடும் பயன்பெற ஆசிக்கின்றேன்.

உங்கள் எல்லோருக்கும் மகிழ்வான கிறிஸ்மஸ் வாழ்த்துக்களையும் அமைதியான புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

▪▪▪▪▪▪▪▪▪▪▪▪▪

மேதகு இ.தோமஸ்சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

V.M.K
Jewellery



(C/3932)



வீ.எம்.கே. ஜுவல்லறி
80/30 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Tel : 021 222 2515, 021 720 1117

Dealers 22kt gold jewellery

New V.M.K. Jewellery
Kandy Road
Chavakachceri
Tel : 021 227 0038

அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்

L கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

Regd No. DS/ 589,Kiruba Learners, Govt.
Approved A Grad Driving Training School

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்
அரச தனியார் ஊழியர்கள் சனி ஞாயிறு உட்பட தாம் விரும்பும் நேரங்களில் பயிற்சிகளை
மேற்கொள்ள முடியும் எமது கிளை நிறுவனங்களில் வாகன பயிற்சிகள் நடைபெறும்
மும்மொழிகளிலும் ஆண், பெண் இருபாலாருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்
தவணைமுறையில் கட்டணம் செலுத்த முடியும்
வவுனியாவில் பெண்களுக்கு நவீன காரில் பெண் ஆசிரியரால்
பயிற்சி வழங்கப்படும்.

(C/3959)





கிளிநொச்சி.
021 228 6605
071 454 6965

வவுனியா.
021 224 7777
071 454 6953

சுன்னாகம்.
021 224 2022
071 454 6956

விசுவமடு.
021 320 1515
071 454 6955

226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 4353,
021 492 3200, 077 722 5292

சாவகச்சேரி.
021 227 0700
021 492 3202

நெல்லியடி.
021 300 6650
071 454 6957

பருத்தித்துறை.
021 492 3201,
071 454 6958

# நத்தார் புதுவருட சிறப்புமலர் - 2014


இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

## அம்பிகை புத்தகசாலை

2015 ஆம் ஆண்டுக்குரிய சகல புத்தக வெளியீட்டாளர்களது புத்தகங்களையும் 20% விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**Ambigai Book House**

246, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
சத்திரச்சந்திக்கு அருகாமையில்
(கொட்டடி வீதிப்பக்கம்)

(C/3955)

021 561 9294. 077 887 5357. 077 834 9507

நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்


## பிரான்சிஸ் ஹோட்டல்

**Francis Hotel**

Buriani, Fried Rice,
Noodles, Koththu,
Rice & Curry

7 ஆம் கட்டை
சங்கானை

T.P-0217903889 (C/3948)



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

## யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

(வ.து)

நியாயமான
விலையில்
தரமான பொருட்களை
பெற்றுக்கொள்வதற்கு...

127, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

P.No: 0212222587
Fax : 0212227936

(C/3958)

இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

"பனை தென்னை வளம் பெருக்கி பாரினிலே
சிறப்பெல்லாம் பெற்றிடுவோம்"

## மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது) பதிவு இல: J/1605

பனை, தென்னைசார் நுகர்வுப் பொருட்கள் விற்பனை
(கருப்பநீர் , பனை வெல்லம், கல்லாக்காரம் )
கூட்டுறவு கிராமிய வங்கிச் சேவை
பாலர் முன்பள்ளிச்சேவை
அங்கத்தவர் நலத்திட்டம்
கதிரை வாடகைச் சேவை
நிழற்படப் பிரதிச்சேவை
தொலைபேசி சேவை
போத்தலில் அடைக்கப்பட்ட கள்

பிரதான வீதி,
மானிப்பாய்
021 2255109

(C/3946)

மலரும் நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்

## ஸ்ரீ துர்க்கை நகை மாடம்

ஓடர்நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்
22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்

இல.505, கடற்கரை வீதி,
குருநகர். 0772772095

(C/3944)

மலரும் நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

## ஆசீர் வணிக நிலையம்

**Aseer Vaniga Nilaiyam**

Paper, Stationery,
Exercise Books and
Wedding Cards.

202, A.K.K.S. Road
Jaffna.

T.P : 021 222 2842
Fax: 021 222 2842
Mobile: 077721740 (C/3940)

# நத்தார் புதுவருட சிறப்புமலர் – 2014






















# நத்தார் புதுவருட சிறப்புமலர் - 2014

## நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

**Nivithra**
Beauty Parlour & Training Academy

முற்றிலும் இலவசமான
ஒரு நாள் அழகுக்கலை
பயிற்சிப்பட்டறையில் கலந்துகொள்ள
முன்பதிவுகளுக்கு உடன்
அழையுங்கள்.. 0777712604

**இலவச அழகுக் கலைப் பயிற்சி**
(நிபந்தனைகளுக்குட்பட்டது)



நிவித்திரா அழகுக்கலை நிலையத்தின்
புதிய இலவச அழகுக்கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
Personal Grooming,
Advance Beauty Therapy, Diploma
எனும் 3 பிரிவுகளாக வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

இப் பயிற்சிகளில் இணைய விரும்புவோர் முன்னராக பதிவுகளை மேற்கொண்டு ரூபா 5000 வரை கட்டணச் சலுகையினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**340, K.K.S.ROAD, JAFFNA TEL: 0777 712604**



# நத்தார், புதுவருடம், தைப்பொங்கலை முன்னிட்டு

**மாபெரும் மலிவு விற்பனை**

MEGA SALE

**தம்ரோ, பியெஸ்ரா**
**ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்**

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு சோபா செற்றிகளுடனும் 7500/- பெறுமதியான **(coffee table)** இலவசம்.

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் **Bed sheet** மற்றும் **2 Pillow Covers** இலவசம்.

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு **Damro Door** களுடனும் ஒரு **Door lock** இலவசம்.

(C/3962)

**Innovex TV** மற்றும் **Preethi Mixi, Stand Fan, Rice Cookers** ஐ அதிகக்கூடிய விலைக் கழிவுடனும் **Damro** உத்தரவாத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.

**32", 42", 50", LED TV** களுடன் ஒரு **DVD Player** இலவசம்.

25000/- இற்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை **(Home Delivery)** செய்யப்படும்.

**Damro, Pyestra Nilkamal, Phonix, Arpico** ஆகிய பொருள்களையும் பெற்றுக் கொள்ளலாம்.




**JAMUNA FURNITURE**

181, Navalar Road , Jaffna.
T.P.021 222 1092, 077 757 4776

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

## கோசலா லேணர்ஸ்

குறிப்பிட்டகாலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிடலாம்
சாரதி அனுமதிப்பத்திர பரீட்சைக்கான விசேட வகுப்புக்கள் நடைபெறுகின்றன.




(C/3953)

**கிளைகள்: சாவகச்சேரி**
**கிளிநொச்சி, சங்கானை**

2 ஆம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.
0775356979

## நத்தார் வாழ்த்துக்கள்

# New Nelson Learners

**L நியூ நெல்சன் லேணர்ஸ்**

89, Kandy Road,
Chundukuli, Jaffna.
T.P. 021 222 4527,
077 3581916
fax: 021 222 9109

127, Point pedro Road,
Nelliyadi, Karaveddi.
TP. 021 4923115

76, Ramalingam Veethy,
Chavakachcheri,
T.P. 021 4923114



(C/3933)



## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி

**எமது தொழிற்பாடுகள்**

- பனம் மதுசார உற்பத்தி
- பனம் சாராய உற்பத்தி, விற்பனை
- கள் போத்தலில் அடைத்தல், விற்பனை
- நிழற்படப் பிரதியாக்கல் சேவை
- தொலைபேசிச் சேவை
- வாகன சேவை

**கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைவாக நடைமுறைப்படுத்தப்படும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள்**

- அங்கத்தவர் ஓய்வுநலக் கொடுப்பனவு வழங்கல்
- முன்பள்ளி மாணவர்களுக்கு இலவச சத்துணவு வழங்கல்
- முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களுக்கான இலவச சீருடைத்துணி வழங்கல்.
- மாணவர் புலமைப்பரிசில் வழங்கல்.
- அங்கத்தவர், பணியாளர் மருத்துவ பரிசோதனைத் திட்டம்
- பணியாளர் நலன்புரித் திட்டங்கள்
- அங்கத்தவர், பணியாளர், மகளிர் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறிகள்.
- முன்பள்ளி விளையாட்டுப் போட்டிகளுக்கு நிதியளித்தல்.

(C/3947)

**சங்கானை வீதி, மானிப்பாய்.**
**021 222 5045**
**021 320 5150**